24
யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 349 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 24, திங்கள் 10.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



தொடர் இந்தியா வசம்

பக்கம் 19

நாட்டின் பெரும்பாலான பகுதிக ளில் சீரான காலநிலைக்கான சாத்தியம் நிலவுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக அனைத்து பிரதேசங்களிலும் மாலையிலும் இரவிலும் சீரான அத்துடன் குளிரான காலநிலைக்கு காணப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகக்கூடியது 31 செல்சியஸ் பாகையாகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 21 செல் சியஸ் பாகையாகவும் காணப் படும். அதேவேளை யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களி லும் மிதமான காலநிலை காணப் படும்.

# 13 மூலம் தமிழருக்கு கிட்டாது விமோசனம்



ரொனால்டோவுக்கு தங்கக் காலணி

பக்கம் 18

## இந்தியாவில் வைத்து வடக்கு முதலமைச்சர் அழுத்தமாக தெரிவிப்பு
## ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ. 10

“13 ஆவது திருத்தச் சட் டத்தை மாற்றியமைப்பதன் ஊடாகவும் தமிழ் மக்க ளுக்கு விமோசனம் கிடைக் கப் போவதில்லை. ஒற்றை யாட்சி அரசமைப்பை மாற்றி யமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அரசமைப்பு மாற் றியமைக்குமாறு இலங்கை அரசைக் கோருவதற்கு இந் திய மத்திய அரசுக்கு முழு உரித்தும் இருக்கின்றது.”- இவ்வாறு இந்தியாவின் தமிழ்நாட்டில் வைத்துத் தெரி வித்தார், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன்.

தமிழக மக்களின் உணர்சி களை தான் புரிந்து கொள்ள முடியாதவர் இல்லை என் றும் அங்கு குறிபிட்ட அவர், கொழும்பு அரசு, வடக்கு மாகாணத்துக்கு எதனையும் செய்ய விடுவதில்லை என் பதையும் சுட்டிக்காட்டினார்.

சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியத்தால் ஏற் பாடு செய்த, கே.ஜி.கண்ண பிரான் நினைவுப் பேருரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சென்னை தியாகராஜ நகரில் நினைவுப் பேருரை இடம் பெற்றது. அதில் பெருமளவி லான தமிழக சட்டத்தரணி கள் கலந்து கொண்டிருந்த னர்.

சுயநலன் கருதிய இந்தியா தனக்கென மட்டும் அன்றி இலங்கை வாழ் வட - கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் 1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய உடன்படிக்கையில்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

நெல்லியடி, நவ.10

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து எரிந்த நிலையில் பெண் ணொருவரின் சடலம் நேற் றுக் காலை 10 மணியளவில் பருத்தித்துறை பொலிஸா ரால் மீட்கப்பட்டு பருத்தித் துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கபட் டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கையை சேர்ந்த லோகி தாசன் அம்பிகாவதி (வயது -53) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று காலை, எரிந்த நிலையில் வீடொன்றுக்குள் பெண்ணொருவரின் சடலம் கிடப்பதாக கிடைத்த தக வலை அடுத்து சம்பவ இடத் துக்கு சென்ற பருத்தித் துறைப் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் சம்பவ இடத்தில விசாரணைகளை மேற்கொண்டனர்.

மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற் கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட் டார். (ற-109)

## முடிவு இன்று

யாழ்ப்பாணம், நவ. 10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையா கவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா ? இல்லையா ? என்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் தனது விளக்கத்தை இன்று தெரிவிக்கவுள்ளது. 18 ஆவது அரசமைப்புத் திருத்தம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பொருந்தாது என்று சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்து வருகின்றது. இந்தநிலையில், ஜனாதிபதியின் கோரிக்கை மீதான பதில் உயர் நீதிமன்றத்தால் இன்று வெளியிடப்படவுள்ளது.

“2010ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக, இரண்டாவது

❖22 ஆம் பக்கம் பார்க்க



குடாநாட்டில் தற்போது கடும் குளிருடன் கூடிய காலநிலை காணப்படுகின்றது. இரவு வேளை களில் எதிரே இருப்பவற்றை அவதானிக்க முடியாத அளவில் பனி மூட்டம் காணப் படுகின்றது. கடும் பனியுடன் கூடிய காலநிலையால் இரவு வேளையில் குடாநாடு உறைந்து போயுள்ளது. *(படம் : அதிகாலை வேளை பனியில் நனைந்து நீர்த் துளிகள் தாங்கி நிற்கும் புற்கள்).* (ற-21,7)

## தேர்தல் எப்போது? தொடர்கிறது குழப்பம்

யாழ்ப்பாணம், நவ. 10

பாப்பரசரின் இலங்கைப் பய ணத்தைக் கருத்தில் கொண்டு, ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப் படவுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது. இவ்வாறு வெளி யாகும் தகவல்களால் ஜனாதி பதித் தேர்தல் எப்போது என் பதில் பெரும் குழப்ப நிலை காணப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்ன தாக, ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந் தன. எனினும், பாப்பரசர் பிரான்சிஸின் பயணத்தைக் கருத்தில் கொண்டு, அதற் குரிய ஏற்பாடுகளைக் கவனிப் பதற்குப் போதிய கால இடைவெளியைப் பெற்றுக் கொள்வதற்காகவே, ஜனவரி

❖22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு இந்திய அரசு விடுத்தது நேரடி எச்சரிக்கை

### சீன நீர்மூழ்கி விவகாரத்தால்

கொழும்பு, நவ. 10

சீன நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு இரண்டு தடவை கள் வந்து சென்றமை தொடர்பில் இந்தியா, இலங்கையை நேரடியாக எச் சரித்துள்ளது. இதுவரையில் மறை முகமாக இந்த விடயத்தைக் கையாண்டு வந்த இந்தியா, தற்போது நேரடியா கவே தனது எச்சரிக்கையை இலங் கைக்கு விடுத்துள்ளது.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## புலித் தடை நீக்கம்; ஜன.15 விசாரணை

### பிரான்ஸ் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்து மீள்பரிசீலனை செய்து, தமது நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் எதிர் வரும் ஜனவரி 15 ஆம் திகதி வெளிப்படுத் தும்.- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐரோப் பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளில் ஒன் றான பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜே பொல் மொன்சாவ்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டிருந்த

❖22 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் அத்துமீறல், கடற்படை அச்சுறுத்தல் செய்வதறியாது தவிக்கும் வடக்கு மீனவர்கள்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், நவ. 10

இந்திய மீனவர்களின் அத்து மீறல் ஒரு புறம், கடற்படையின ரின் அச்சுறுத்தல் ஒரு புறம். அதனால் வடபகுதி மீனவர்கள் தமது தொழிலைச் செய்ய முடி யாது திண்டாடி வருகின்றனர். - என்று தெரிவித்தார் தேசிய மீன வர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர்

❖22 ஆம் பக்கம் பார்க்க

அரசின் சரிவுக்கு சீன நீர்மூழ்கி காரணமாகுமா?

பக்கம் 12

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்"

- தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)

## ரணில் போட்டியிடாவிடில் களமிறங்குவதற்கு தயார்

### சஜித் பிரேதமதாஸ கூறுகின்றார்

கொழும்பு, நவ.10

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க போட்டியிடாவிட்டால் தான் போட்டியிட தயார் என்று தெரிவித்துள்ளார் ஐ.தே.க வின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஐக்கிய தேசியக் கட்சியின் 2012 ஆண்டு சம்மேளனத்தின் போது தான் இந்த நிலைப்பாட்டை தெரிவித்தார் என்றும், அதில் தற்போதும் எவ்வித மாற்றங்கள் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.



சகல அதிகாரங்களுடன் கட்சியின் தலைமை பொறுப்பை தன்னிடம் வழங்கினால், எந்த சந்தர்ப்பமாக இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயாராக இருப்பதாகவும் சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ற)

### மீன்பிடிப் படகுகளை கண்காணிக்க கருவி

கொழும்பு, நவ.10

ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை நீக்கிக் கொள்ளும் நோக்கில், இலங்கையில் மீன்பிடி படகுகளை கண்காணிப்பதற்கான கருவிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

சர்வதேச சட்டத்திட்டங்கள் மீறப்பட்டமைக்காக இலங்கையில் இருந்து கடலுணவு பொருள்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருந்தது. இந்த தடையைநீக்குவதற்காக, சர்வதேச சட்டத்திட்டங்களை உரிய வகையில் கடைபிடிக்க இலங்கை மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் மீன்பிடி படகுகளை கண்காணிப்பதற்கான கருவிகளை, டென்மார்க்கில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது(ற)

## யாழ்ப்பாணம் -கொழும்புக்கு மேலதிகமான ரயில் சேவை?

கொழும்பு, நவ.10

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து மேலதிக தபால் ரயில் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்று ரயில்வே திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தபால் ரயில் கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 10 மணிக்கு புறப்படும் என்றும் மேலதிக ரயில் பெட்டிகளும் பொருத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது தபால் ரயில் கோட்டையில் இருந்து இரவு 7.45 மணிக்கு ஆரம்பிக்கும் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த விடயம் குறித்து யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, தமக்கு இதுவரை உத்தியோக பூர்வமாக அறியத்தரவில்லை என்றும் ஊடகங்கள் மூலமாகவே தாமும் அறிந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் பயணம் செய்பவர்கள் அதிகமாக இருப்பதனால் மேலதிக ரயில் சேவையின் தேவை உள்ளது என்றும் கடந்த இரு தினங்கள் விடுமுறை நாள் என்பதால் குறித்த சேவை தொடர்பில் அண்மித்த நாள்களிலோ திணைக் களத்தால் தெரிவிக்கப்படலாம் என்றும்அவர்கள் தெரிவித்துள் ளனர்.

இதேவேளை, தற்போது யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையில் 4 சேவைகள் மட்டும் இடம்பெற்று வருவதுடன் சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாள்களில் விசேட சேவை ஒன்றும் இடம்பெறுகின்றது. (ற)

## 17 பேரில் ஒருவர் அரச பணியாளர்

### அமைச்சர் டப்ளியு.டி.ஜே. செனவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.10

இலங்கையில் 17 பேருக்கு ஒருவர் அரச உத்தியோகத்தில் உள்ளார்என்றுதெரிவித்துள்ளார் அரசநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டப்ளியு.டி.ஜே. செனவிரத்ன.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வரவு-செலவு திட்டத்தின் மூன்றாவது முறை வாசிப்பின் ஐந்தாம் நாள் விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்அங்குதெரிவித்துள்ளதாவது,

இதுவரை நிலவிய ஓய்வூதியப் பிரச்சினை எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் தீர்க்கப்படும். அதுவரை 2 ஆயிரத்து 500 ரூபா இடைக்கால தொகையாக வழங்கப்படும். அரச சேவை தொடர்பாக அரசுக்கும் எதிர்கட்சிக்கும் இடையில் உள்ள கருத்து வானமும் பூமியும் போன்றது.

அரச சேவையானது அரசின் நிதியை வீணாக்கும்- பொருளாதாரத்தை பின்னோக்கிக் கொண்டுசெல்லும் ஒரு சேவையாகவே அரச சேவ ஐக்கிய தேசிய கட்சியால் பார்க்கப்பட்டது. அவர்கள் அரச சேவைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் - வசதிகளைக் குறைத்தனர்.

எமது அரசு அதற்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கையைக் கொண்டுள்ளது. தனியார் துறையுடன் போட்டிப் போட்டுக் கொண்டு மக்களுக்கு உயர்ந்த சேவையை வழங்க அரச சேவையை பலப்படுத்த வேண்டும். அரச சேவையில் மக்களுக்கிருந்தவெறுப்பு இன்று இல்லை. அரசின் அனைத்து காரியாலயங்களையும் ஒரே கூரையின் கீழ் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக் கையை நாம் முன்னெடுத்துள்ளோம் - என்று தெரிவித்துள்ளார்.(ற)




மலையக மக்களுக்கு காணி, வீட்டுரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கோரி சிவில் அமைப்புகள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் என பலரும் நேற்று ஹற்றன் நகரில் அமைதிப் பேரணி ஒன்றை மேற்கொண்டார்கள். லயன் குடியிருப்புகளுக்கு பதிலாக குறைந்த பட்சம் 20 பேர்ச் காணியுடனான தனி வீட்டு திட்டத்தை அமைக்க வேண்டும் என இந்தப் பேரணியில் ஈடுப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற)

## ஹெல உறுமய நாளை முக்கிய முடிவு

கொழும்பு, நவ.10

அரசின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய, அரசியல் ரீதியான முக்கியமான தீர்மானமொன்றை, நாளை செவ்வாய்க்கிழமை எடுக்கவிருப்பதாக அந்தக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மத்தியகுழு நாளைய தினம் கூடுவதுடன் அரசுக்கும் ஹெல உறுமயவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு தொடர்பிலான அறிக்கையும் மத்தியகுழுவுக்கு கையளிக்கப்படவிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன் அ.அ. வழங்க நடவடிக்கை

### கபே அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ.10

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னராக தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவையொன்றை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளதாக கபே அமைப்பு அறிவித்துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை, திருகோணமலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தியதாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதனையடுத்து, ஏனைய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைக்கு வரும். இந்தப் பெரும் செயற்திட்டத்தை ஆள்பதிவுத் திணைக்களம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் அமைப்பு என்பனவற்றுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ற)

## விபத்துகள்

### அம்புலன்ஸ் மோதி பாதசாரி சாவு



அம்பாறை, உகன கோனா கொல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில், பாதசாரியொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேகமாக வந்த அம்புலன்ஸ் பாதசாரியொருவர் மீது மோதியதனாலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. கோனாகொல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கோனா கொல்லை கிராம வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி, அம்பாறைக்குச் சென்றுவிட்டு சனிக்கிழமை (08) இரவு 8.35 மணியளவில் மீண்டும் கோனாகொல்லை திரும்பியபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அம்புலன்ஸ் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார் அவர், அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவித்தனர். (ற)

### மோ.சைக்கிள் - ஓட்டோ விபத்தில் பெண் காயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் ஓட்டோ தடம்புரண்டதுடன் அதில் பயணித்த பெண்ணின் இடுப்பு பாதிப்புக்குள்ளானது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிளுடன் தப்பியோடியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மீசாலையில் நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த மகேந்திரலிங்கம் செல்வரஞ்சனா (வயது -57) என்பவரே பாதிக்கப்பட்டு, சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற-9)

### மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு



கல்முனை துறைநீலாவாணை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத் தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியருகிலுள்ள மின்கம்பத்தில் மோதியதாலயே விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

### சமூர்த்தி வங்கியில் தீ விபத்து



வவுனியா சின்னப்புதுக்குளம் பிரதேசத்தில் சமுர்த்தி வங்கி ஒன்றில் நேற்றுக் காலை திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. எனினும் ஒருமணி நேரத்தின் பின்னர் தீ முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட் டுள்ளது. உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினாலேயே இந்த தீப்பரவல் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர். தீயால் சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், இந்தச் சம்பவம் திட்டமிட்ட சதியா என்பது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். (ற)



### வாகன விபத்தில் பெண் சாவு

ஹொரண அங்குருவாத்தோட்ட பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொ ருவர் உயிரிழந்துள்ளார். மோட் டார் சைக்கிள் ஒன்று டிப்பர் ரக வாகனத்தில் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர். சைக்கிளில் பயணித்த 25 வயதான அங்குருவாத் தோட்ட பகுதியைச் சேர்ந்த பெண்ணே உயிரிழந்துள் ளார். மோட்டார் ச்சக்கிள் டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட நிலையிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் டிப்பர் வாக னத்தின் சாரதி கைது செய்யப் பட்டுள் ளார். (ற)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 24 திங்கள் (10.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 349


# பதவிக்காக நீதிமன்றை மஹிந்த நாடியதால்

# தேர்தல் ஆணையாளரின் சுயாதீனம் பாதிப்பு

## போட்டியிடும் தகுதியை தீர்மானிப்பவர் மஹிந்த தேசப்பிரியவே தவிர நீதியரசர் அல்லர் என்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், நவம்பர் 10

**தேர்தலில் ஒருவர் போட்டியிடுவதற்கு தகுதியானவரா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் உரிமை தேர்தல்கள் ஆணையாளருக்கே உண்டு. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் விளக்கம் கோரியதன் ஊடாக, தேர்தல்கள் ஆணையாளரின் சுயாதீனம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.**

மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா? என்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் விளக்கம் கோரியுள்ளமை அவரது தனிப்பட்ட விடயம். எனவே இந்த விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சி தலையிடாது. - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா ? என்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் விளக்கம் கோரியுள்ளமை அவரது தனிப்பட்ட விடயம். எனவே இந்த விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சி தலையிடாது.

அதேவேளை இவ்வாறு உயர் நீதிமன்றத்தில் விளக்கம் கோரப்பட்டுள்ளதன் மூலம், தேர்தல் ஆணையாளரின் உரிமையும், சுயாதீனத் தன்மையும் மீறப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒருவர் தகுதியானவரா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பும் உரிமையும் தேர்தல்கள் ஆணையாளருக்கே இருக்கிறது."- என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

"வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னரே இது குறித்து தீர்மானிக்கப்படும். அதன் பொருட்டே வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு உப்பளத்தில் அடுத்த மாதம் உற்பத்தி

### புனரமைப்புப் பணிகள் துரிதகதியில்

யாழ்ப்பாணம்.நவ.10

ஆனையிறவு உப்பளத்தில் அடுத்த மாத இறுதியில் உப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி தெரிவித்தார்.

போர்க்காலச் சூழலில் சிதைவடைந்த ஆனையிறவு உப்பளத்தை புனரமைப்புச் செய்து சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக தற்போது 330 ஏக்கர் உப்பளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

அதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட 100 மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உப்புப் பாத்திகளைப் புனரமைப்புச் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உட்கட்டமைப்புப்பணிகள் 75 வீதமானவை நிறைவடைந்துள்ள நிலையில் அடுத்த மாதம் இறுதிப் பகுதிக்குள் பயனாளிகள் உப்பளத்தில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரத்து 700 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட உப்பளத்தில் தற்போது முதற்கட்டமாக 330 ஏக்கர் பகுதி புனரமைப்புப் செய்யப்படுகிறது. இந்த வருடத் திட்டத்தில் இவை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அடுத்த கட்டப்பணிகள் அடுத்த வருடத்தில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

(ற-14)

## இந்திய மீனவர் சார்பில் இன்று மேன்முறையீடு

### புதுடில்லி தாக்கல் செய்யவுள்ளது

யாழ்ப்பாணம், நவ. 10

போதைப் பொருள் கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து தமிழ்நாட்டு மீனவர்களின் சார்பிலும், இந்திய அரசு உயர் நீதிமன்றத்தில் இன்று மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மீனவர்கள் சார்பில் வாதிடுவதற்காக மிகச்சிறந்த சட்டத்தரணிகளை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் நியமித்துள்ளது. இந்தச் சட்ட செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு 20 இலட்சம் ரூபாவை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு அனுப்பியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு கச்சதீவுக் கடலில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரை முட்டாள்களென நினைக்கின்றது ஈ.பி.டி.பி

### நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் காட்டம்

யாழ்ப்பாணம், நவ.10

தமிழ் மக்கள் முட்டாள்கள் என்ற எண்ணம் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற அங்கத்தவர்களின் மனதில் உள்ளது. தமிழ் மக்களை பின்னடையச் செய்வதற்கான வழிவகைகளையும் அவர்களே செய்கின்றனர் - என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஜனாதிபதி மஹிந்தவுக்கும், அரசுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதமே ஈ.பி.டி.பியினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மூளாய் இந்து இளைஞர் மன்றத்தால் மூளாய் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரசாத் அரங்கில் 2014ஆம் ஆண்டுக்கான வாணி விழா நிகழ்வு இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

"வடக்கு,கிழக்கு போர்ச் சூழலால் பின்தள்ளப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ், 28 வீதம் முல்லைத்தீவிலும், 19 வீதம் கிளிநொச்சியிலும், 22 வீதம் மன்னாரிலும், 19 வீதம் மட்டக்களப்பிலும் என தமிழர் வாழும் பிரதேசங்களிலேயே அதிகளவிலானவர்கள் வாழ்கின்றனர்.

நாட்டின் தலைவருடைய கடமை அனைத்துப் பிரதேசங்களுக்கும் சமமாக அபிவிருத்தியை முன்னெடுப்பதே. ஆனால் நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த தமிழர், சிங்களவர் என பாரபட்சம் பார்க்கின்றார். மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இணக்க அரசியல் பேசிக் கொள்ளும் டக்ளஸ் தேவானந்தா எத்தனையோ மில்லியன் ரூபா நிதி வடக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், சந்திரகுமார்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழில் சம்மேளன மாநாட்டுக்கு வட மாகாணத்தில் இருந்து 900 பேர்

யாழ்ப்பாணம், நவ.10

கொழும்பில் நடைபெறும் கடற்றொழில் சம்மேளனத்தின் தேசிய மாநாட்டில் வடக்கில் இருந்தும் 900 பேர் வரையில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு வடக்கில் உள்ள மீனவர் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கிராமிய கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இருநூறு பேரும், கிளிநொச்சி முல்லைத்தீவில் இருந்து முன்னூறு பேரும், மன்னாரில் இருந்து இருநூறு பேரும் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடங்களை விட

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க 12 ஆண்டுகளின் பின் திட்டம்

### உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.10

சிறுவர்களின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, சமூக சேவைகள் அமைச்சால் முன்னெடுக்கப்படும் திட்டம், 12 வருடங்களின் பின்னர் வடக்கில் மீளவும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரினால் இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய கிராமங்களில் சிறுவர்களின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் திட்டம் சமூக சேவைகள் அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தினூடாக பின்தங்கிய கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அங்குள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றுக்கு சிறிய தொகைப் புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன் அவற்றை வைத்துப் பராமரிக்கக் கூடியதாக அலுமாரியும் அமைச்சால் வழங்கப்படும்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் அரசியல் செய்ய கூட்டமைப்புக்கு உரிமையுண்டு

### பிரதி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.10

"தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மலையகத்துக்கு தீண்டத் தகாதவர்கள் அல்ல. எமக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு சிறு இடைவெளி ஏற்பட்டு விட்டது. அது மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றதென் றால் அதனை நாம் வரவேற்கவேண்டும்" - இவ்வாறு தெரிவித்துள்ளார் தாவரவியல் பூங்காக்கள் பொது பொழுதுபோக்கு அலுவல்கள் பிரதி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன்.

"வெறுமனே எல்லாவிடயங்களையும் அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது. மலையகத்தில் வந்து அரசியல் செய்வதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு. இது ஒரு ஜனநாயக நாடு. அவர்களின் வருகையால் இங்கு நல்லது நடக்கும் என்றால் அதனை நான் வரவேற்கின்றேன்"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட கொஸ்லந்தை மீரியபெத்த பகுதிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பய

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில் கொலை! சந்தேக நபர் ஒருவர் கைது

### பொலிஸார் தொடர்ந்தும் தீவிர விசாரணை

நெல்லியடி, நவ.10

வடமராட்சி பகுதியில் குடும்பப் பெண் கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரை பருத்தித்துறை பொலிஸார் முல்லைத்தீவில் வைத்து கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# அந்தியேட்டி அழைப்பு



அமரர்

## சின்னத்துரை கதிர்காமத்தம்பி

மலர்வு 13.01.1942

உதிர்வு 12.10.2014

கடந்த 12.10.2014 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியை நாளை (11.11.2014) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் ஊறணி புனித தீர்த்தக் கடற்கரையிலும் அன்று மதியம் வீட்டில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் கலந்துகொள்வதுடன், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தி லும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

மனைவி,
குடும்பத்தினர்.

(c.17571)(45.6.3)

# கைதடியில் வீடு கையளிப்பு



புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதியுதவியுடன் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் வறிய நிலை அங்கத்தவர்களுக்கு இலவசமாக அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகளில் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கையளிக்கப்பட்டது.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் 'லயன்' ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் இ.துரைராசாவும் கலந்து கொண்டு வீட்டை உரியவரிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் கைதடியைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், மாதர் சங்கப்பிரதிநிதிகள் எனப் பெரும் பாலானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சரஸ்வதி சனசமூக நிலையத்தினரால் இலவசமாக அமைத்துக் கொடுக்கப்படும் மூன்றாவது வீடு இதுவாகும். (ஓ-288)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **ஐயம்பிள்ளை மனோகரன்**

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

எமது பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றும் ம.ரவீஸ்வரனின் அன்புத் தந்தை

அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, இன்றைய தினம் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் குடும்பத்தாருடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.

(53929)(7.6)

# நீங்கா நினைவலைகள்

12ஆம் ஆண்டு



**செல்லப்பா நடராஜா**

தோற்றம் 01.05.1922 — மறைவு 29.04.2002

20ஆம் ஆண்டு



திருமதி **அன்னபாக்கியம் நடராஜா**

தோற்றம் 11.02.1934 — மறைவு 21.04.1994


10ஆம் ஆண்டு



திருமதி **கு.கமலினி**

தோற்றம் 25.12.1953 — மறைவு 10.11.2004

42ஆம் ஆண்டு



**செல்வி சுபாஜினி நடராஜா**

தோற்றம் 22.04.1952 — மறைவு 15.04.1972

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாத துயரங்கள் எம் மனதில் - என்றும்
உங்கள் நினைவுகளுடன்...

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53886)(7.6)

# 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**தருமலிங்கம் பாலச்சந்திரன்**

அன்னைமடியில் 24.10.1970 — ஆண்டவன் அடியில் 11.11.1995

திதி: சங்கடகர சதுர்த்தி (10.11.2014)

அன்பு முகம் கண்டு
ஆண்டுகள் பத்தொன்பது ஆனதுவே!
அழியா நினைவலைகள் எம் நெஞ்சை
அலையாய் சுடுகிறதே!
எம் நெஞ்சம் நெகிழும்
வேதனையும் வெறுமையும்
எத்தனை நாள்கள் ஐயா! ஏன் இந்தக் கொடுமை ஐயா!
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்த முகம் தோன்ற
கண்கள் நிறைகின்றது கண்ணீர் சொரிகின்றது.
இனிய நினைவுகளும் இழந்தவலியும் இறுதி மூச்சு வரை
எம் இதயத்தில் சுமப்போம் ஐயா!

நிரந்தர முகவரி: நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
தற்காலிக முகவரி: கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அம்மா, அப்பா, தம்பி, தங்கை,
குடும்பத்தினர்.

(53730)(12.3.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 11 . 1984



மறைவு 22 . 10 . 2013

## அமரர் தங்கராசா-சரட்பாபு

(மிருசுவிலைப் பிறப்பிடமாகவும்
சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

பிறப்பின் இரகசியம் யாதெனக் கேட்டேன் பிறந்து பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன் பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன் இறந்து பாரென இறைவன் பணித்தான்

எனினும் எம் அன்புச் செல்வம், நீ எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டென்ன
யுகமேயானாலும் வகைவகையாக வண்ணப்பூக்கள் வாசமிழந்து போனாலும்
வானத்தில் உள்ள முழுநிலா வடிவிழந்து போனாலும் உன் பசுமையான நினைவுகள்
எம்மனதைவிட்டு என்றென்றும் அகலாது நம் அரியதொரு குடும்ப பொக்கிஷத்தை
இழந்து தாங்கொணாத் துயரத்தில் வாடுகின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பிமார்கள் மற்றும் மச்சாள்மார், மகன் : யான்குட்டி (ஜஸ்ரின்)

(53902)(7.6)

# வருஷாப்திக பூர்த்தி


அல்வாய், மாலை சந்தை வரதராஜ விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார்
கிரியா கிரமஜோதி, கிரியா கலாப முக்தாமணி

அமரர் பிரம்மஸ்ரீ

## சபா.தேவராஜக் குருக்கள்

தேகவியூகம் 23.08.1924

தேகவியோகம் 22.10.2013



அல்வாயில் பிறந்து சுழிபுரத்தில் கரம் பிடித்து
நாவிலம் போற்ற வந்த நம் தந்தையே!

அலங்கார அழகுடைய அந்தணர் நற் தவக்கொழுந்தே!
கும்பாபிஷேகம் கண்ட கோயிலெல்லாம் ஏங்குதப்பா,
போற்றியுமை ஏற்றுகிறோம் - பொன்னுலகம்
தான் விட்டு, புவியுலகம் வருவீரோ!
புன்னகை தான் தருவீரோ!
ஆற்றாது அழுகின்றோம் அப்பாவின் பிரிவாலே,
வரதராஜ விநாயகரே ஆறுதல் தாராயோ,
சைவநற்சகாமணியே! சபா.தேவராஜா
சகமெலாம் போற்றிய எம் சான்றோனே,
பெருங்குருவே, உம் இழப்புத் தாங்காது
உருகி நின்று அழுகின்றோம், உவந்தே
உம் ஆசிகளை கைலை நின்று கொடுத்திடுவீர்.

அகிலமெல்லாம் தங்களது அருந்தொண்டை வியக்குதே
அப்பாவின் ஆத்மாசாந்தி அற்புதமாய் அமைவதற்கு
ஆனைமுகனைப் பணிகின்றோம், ஆறுதல்
பெறுகின்றோம்.

குடும்பத்தினர்.
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(53826)(12.3.6)

## துரையப்பா விளையாட்டரங்கு வாஹிட் ஒப்பந்த நிறுவனத்திடம்

துரையப்பா விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபை மேற்படி விளையாட்டரங்கை வாஹிட் ஒப்பந்த நிறுவனத்திடம் கடந்த ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி கையளித்துள்ளது.



விளையாட்டரங்கை மீள நாம் திரும்பப் பெறும் வரை அங்கு எந்த நிகழ்வுகளையும் நடத்த மாநகரசபை அனுமதி வழங்க முடியாது என்று யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

மேற்படி விளையாட்டரங்கில் நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டங்கள் நடைபெறவுள்ளதால் எந்த ஒரு நிகழ்வுக்கும் அதனைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது என்று ஏற்கனவே யாழ்.மாநகரசபை அறிவித்திருந்தது என்றும். அங்கு படையினர் தமது நிகழ்வுகளைத் தற்போதும் நடத்திவரும்போது விளையாட்டுக் கழகங்களை மட்டும் ஏன் அதற்கு அனுமதிப்பதில்லை என்றும், அதனால் தாங்கள் போட்டிகளை நடத்த முடியாத நிலை இருப்பதாகவும் விளையாட்டுக் கழகங்கள் அதிருப்தி தெரிவித்தன. இது தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கேட்டபோதே ஆணையாளர் முன்கண்டவாறு தெரிவித்தார். கழகங்கள் விரும்பினால் வாஹிட் ஒப்பந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தமது நிகழ்வுகளை நடத்த முயற்சிக்கலாம் என்றும் குறிப்பிட்டார். துரையப்பா விளையாட்டரங்கு ரூபா 140 மில்லியன் செலவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது. ஒன்பது மாதத் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-7)

# மாணவர் ஏட்டுக் கல்வியுடன் நிற்காது சகல துறைகளிலும் ஈடுபடல் அவசியம்

### வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் கூறுகிறார்

வலி.தென்மேற்கு நவ.10

பாடசாலைக் கல்வி என்பது முழுமையான கல்வி என்பதையே குறிக்கும். வெறுமனே ஏட்டுக் கல்வியைப் பெறும் நிலைக்கு மேலாகப் பாடசாலையை முழுமையாகப் பயன்படுத்தி மாணவிகள் சகல துறைகளிலும் ஈடுபடும் வசதிகளை பெற்றோர்கள் மற்றும் கல்விச் சமூகம் ஏற்படுத்த முன்வர வேண்டும். விளையாட்டுத் துறை உட்பட சகல துறைகளிலும் எம்மால் இயலுமான உதவிகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளேன்.

இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அதிபர் திருமதி பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தவிசாளர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

இலங்கைத் தீவில் ஆண்களுக்குச் சமமான வகையில் பெண்கள் எண்ணிக்கையில் சரி, கல்வியில் சரி அரச பதவிகளில் அரசியலில் மற்றும் சகல துறைகளிலும் உயர் நிலை பெற்றுள்ளமையை யாவரும் அறிவார்கள். இந்த நிலையிலும் பார்க்க பெண்கள் உயர்வடைய இக் காலப் பகுதி மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. இதேவேளை பெண்கள் மீதான அடக்குமுறை பல வழிகளிலும் இடம்பெறுகின்றது என்பதை நான் மறுக்கவில்லை. அதனை உடைத்தெறிய பெண்கள் தயாராக வேண்டும்.

எமது இனத்தின் கடந்த வரலாற்றில் பெண்கள் பல சாதனைகளை பல துறைகளிலும் ஏற்படுத்தி வரலாறாக்கப்பட்டுள்ளது யாவும் அறிந்த உண்மை. இந்த வகையில் எந்தத் துறையில் ஆர்வம் கொண்டாலும் அத்துறை தொடர்பில் ஊக்குவிப்பதற்கு எப்போதும் தயாராகவுள்ளேன். இதேவேளை பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் மீதான அச்சுறுத் தல் மிரட்டல்களுக்கு அஞ்சாத வீரத்தமிழ் பெண்களாகத் தொழிற்பட தயாராக எம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்தப் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் தலா ஆயிரம் ரூபாவும் உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் அதியுயர் சித்தி பெறும் மாணவிகளுக்கு பத்தாயிரம் ரூபாவும் பல்கலைக் கல்வியை தொடரும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவிகளின் கல்விக்கான நான்கு வருட கால உதவியையும்-

ஜி.சீ.ஈ.சாதாரணப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் அதி உயர் சித்தி பெற்றோருக்கு ஆயிரம் ரூபாவும் உயர்தரக் கல்வியில் மேலதிக தனியார் துறைக் கல்வியைப் பெற முடியாத வறிய மாணவர்களுக்கு இலவச கல்வியைப் பெறுவதற்கான வசதி வாய்ப்புக்களையும் செய்யத் தயாராகவுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். இந்த வகையில் மாணவிகள் எல்லாத் துறைகளிலும் உதவிகளைப் பெற்று வளர வேண்டும் எனது ஆவலாகும்-" என்றார். (வ-115)

## வடக்கு கல்வி அமைச்சின் செயற்றிட்டம் குறித்த கூட்டம்

வடமாகாண கல்வி அமைச்சின் 2015ஆம் ஆண்டுக் குரிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்துக்கு அமைச்சின் கணக்காளர் பாடசாலைகள் வேலைகள் பிரிவுப் பணிப்பாளர் உட்பட அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாகாண கல்வித் திணைக்கள கணக்காளர் உட்பட அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலயத்தில் கடமையாற்றும் 4 பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்ஆகியோரை கலந்து கொள்ளுமாறு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பான 21 விடயங்கள் ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முதியோர் தின விழா

கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின விழா இன்று திங்கட் கிழமை பி.ப.230 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் மா.ஜெயராமன், வேள்ட் விசன் நிறுவன கிளிநொச்சி மாவட்ட கல்வித் திட்டப் பணிப்பாளர் எக்ஸ். அஞ்ச லீற்றா ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-18)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி,நவ.10

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். (வ-9)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978ஆம் ஆண்டு 12இல் செவ்வாய் உத்தர நட்சத்திரம் 3ஆம் பாதம் கிரக பாவம் 14¾ உள்ள லண்டன் PR உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 026 0372 (51995)(7.6)

**வீடு வாடகைக்குண்டு**

பலாலி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் சிறிய குடும்பம் வசிப்பதற்குரிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 076 645 2803 (53924) (4.6.3)

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு விற்பனைக்கு**

இரண்டாம் குறுக்குத்தெருவில் 1¼ பரப்பில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 530 0493 (53921) (4.6.3)

**நாய்க்குட்டிகள் விற்பனை**

Cockers paniel (Original) ஆண், பெண் நாய்க் குட்டிகள் (60 நாள் நிரம்பியது) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
075 645 4129/077 300 1763 (53923) (4.6.3)

**இடமாற்றம்**

**டயானா பிளாஸ்ரிக்**
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
- உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
- பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
- புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல் (C/17542) (7.6.3)

தொடர்பு : 077 592 5088/021 222 8680

**மணமகன் தேவை**

சுவிஸ் நாட்டு குடியுரிமை பெற்ற 73ஆம் ஆண்டு பிறந்த மணமகளிற்கு இந்துசமய மணமகன் தேவை. (வெளிநாட்டில் விரும்பத்தக்கது)
(47327) (12.3.6) தொடர்பு:0041 7799 09102

கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை
2014 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



செல்வன் பிறேமதாஸ் பிரகாஷ் - 158



செல்வி அந்தோனிதாஸ் மரியயான்சனா - 158

Best Wishes · Congratulations

இவர்களுடன் தகைமைச் சான்றிதழுக்கு தகைமை பெற்ற மாணவர்களான

01) றொ.சாம்குருஸ் - 115
02) யூ.மைக்கொலின் - 109
03) ஜெ.ஜெனோஜன் - 107
04) வி.விஜியான்சன் - 81
05) அ.அருள்யொலின்சன்- 89
06) உ.மேரி உஷாலினி - 75
07) றெ.றெக்சினா - 121
08) நே.நிதுஷா - 95
09) நி.மேரிநிருசியா - 110
10) அ.மரியஅபிசா - 108
11) யூ.மேரிகொலின்சினி - 120
12) அ.அகிலநாயகி - 124
13) அ.விந்துயா - 83
14) யூ.மேரியுகன்சியா - 132
15) யே.மரியஜெஸ்ரலா- 133
16) யூ.யூடி ஜெபிசா - 73

ஆகியோரையும், இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களான திருமதி மே.றொபேட் அவர்களையும், திருமதி ஜெ.மரியதுரைமகாராஜன் அவர்களையும் இவர்களை வழிப்படுத்திய ஏனைய ஆசிரியர்களையும், அதிபரையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
கிளி/வலைப்பாடு றோ.க.த.க. (53830)(12.3.6)

**அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இன்று 10.11.2014 யாழ். பல்கலைக் கழகத்தின் 30 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் மருத்துவமாணி (MBBS) பட்டத்தினைப்பெறும்

**பஞ்சாட்சரம் கோகிலன்**

மாந்தர் குலத்தின் நலன் காக்க
மருத்துவத்துறையினில் தேர்ச்சிபெற்று பெற்றோர்,
ஆசிரியர், உடன்பிறப்புக்களுக்கு பெருமை பல
சேர்த்து வைத்து இன்று மனமகிழ்ந்து நாம் வாழ்த்தி
நிற்க மருத்துவமாணி பட்டத்தைப்பெறும்
எம் குடும்பத்து நட்சத்திரம் என்றென்றும் பிரகாசிக்க
இறைவன் அருள்வேண்டி இனிதே

மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று
மருத்துவத்துறையில் சிறந்துவிளங்க
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அத்தான், அக்கா, தம்பி (கௌசிகன்),
மருமக்கள் அபி, அனு (பிரான்ஸ்).

# மாற்றுத் திறனாளிகளுக்கும் கல்வி அளிப்பது நம் கடமை

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

தென்மராட்சி, நவ.10

மாற்றுத் திறனாளிகளாக இனம் காணப்படும் இளம் சமுதாயத்தினருக்கு உரிய கல்வி வசதி அளிக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும். மாற்றுத் திறனாளிகளான விழிப்புலன் அற்ற செவிப்புலன் அற்ற மனோநிலை பாதிப்புக்குள்ளாகியுள்ள மாணவர்கள் 223 பேர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். அவர்களில் 176 மாணவர்கள் கைதடி நவீல்ட் பாடசாலையிலும், ஏனையோர் மற்றைய பாடசாலைகளிலும் இணைக்கப்பட்டு கல்வி புகட்டப்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விசேட கல்வி அலகுகட்டத்தைதிறந்துவைத்த தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதற்கு பெற்றோர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு இந்தப் பாடசாலையில் விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. விசேட கல்வி தொடர்பான பயிற்சிகள் பெற்ற நான்கு ஆசிரியர்கள் மட்டும் தென்மராட்சி வலயத்தில் கடமையாற்றுகின்றனர்.

இவர்களில் ஒருவர் மட்டும் தற்போது இந்தப் பாடசாலையில் கடமையாற்றுகின்றார் இந்தப் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அனைத்து வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்கள் இலகுவில் பயிலக்கூடிய உபகரணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் உதவியுடன் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பயிற்சியுடன் கூடிய கல்வியை வழங்க முடியும் என்று நம்புகிறேன்.

வலயத்தின் ஏனைய பாடசாலைகளில் கடமையாற்றும் விசேட கல்வியில் பயிற்சி பெற்ற மேலும் இரு ஆசிரியர்கள் இந்தப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களின் நலன்கருதி அடுத்த வருடம் அங்குள்ள பாடசாலை ஒன்றில் விசேட கல்வி அலகொன்றைத் திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேட தேவையுடைய மாணவர்களின்கற்றல்செயற்பாட்டை சிறந்த முறையில் மேற்கொள்ள இவ்வாறான வசதிகளுடன்கூடிய கட்டடம்ஒன்றை அமைத்துத் தர நலன் விரும்பிகள் முன்வர வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து குடும்பத்தினருடன் வருகைதந்த ஓர் அம்மையார் விசேட தேவையுடைய மாணவர்களுக்கென தனியானதொரு கட்டடத்தை அமைத்துத் தந்ததுடன் இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கியமைக்காக அவருக்கு தென்மராட்சி கல்விச் சமூகம் சார்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார். (வ-9)

## வெள்ளம் தேங்கிய நிலையில் வரணி–குடத்தனை பிரதான வீதி



வரணி, நவ.10

வரணி - குடத்தனை பிரதான வீதியின் புனரமைக்கப்படாத பகுதியில் காணப்படும் பெரிய குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அதனூடாகப் பயணிப்போர்பெரும்அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மாசேரி கிராமத்தின் வட்க்கு எல்லைக்கு அப்பால் உள்ள சவர்நிலக்காடு ஊடாகச் செல்லும் பாதையிலேயே இந்த அவலம் நீடிக்கின்றது.

வடமராட்சி கிழக்கு, வரணிப் பிரதேசம் இரண்டையும் இணைக்கும் கிட்டியதூரம் கொண்ட குறித்த பாதை வரணியில் இருந்து குடத்தனை 6 ஆம் கட்டைப் பகுதியில் பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான பாதையில் சந்திக்கின்றது.

தென்பகுதியில் இருந்துவரும் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் பல ரக வாகனங்கள் இந்தப் பாதையாலேயே வடமராட்சி கிழக்குப் பகுதிகளான குடத்தனை, பொற்பதி, மணல்காடு போன்ற இடங்களுக்குப் பயணிக்கின்றன.

அந்தப் பகுதியில் உள்ள மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் கொடிகாமம், சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு தமது மீன்வகைகளைக் கொண்டு செல்வதும் இப்பாதை ஊடாகவேயாகும்.

குறித்த பாதையைப் புனரமைக்கும்படி அண்மையில் அந்தப் பகுதிக்கு பயணம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் குறித்த பாதை புனரமைப்பு தொடர்பில் கவனம் எடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-122)

## மானிய உர விநியோகம்

சாவகச்சேரி (மீசாலை) கமநல சேவைகள் நிலையத்தினர் நெற்செய்கையாளர்களுக்கான இரண்டாம், மூன்றாம் கட்ட மானிய உர விநியோகத்தை ஆரம்பித்துள்ளனர். இதன்பிரகாரம் இன்று காலை 9 மணி தொடக்கம் கல்வயல் கமக்கார அமைப்பின் பிரிவுக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கும் எதிர்வரும் 17 ஆம் திகதி சாவகச்சேரிநகர் கமக்கார அமைப்பின் பிரிவுக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கும் மானிய உரம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கலந்துரையாடல் இன்று

அச்சுவேலி.நவ.10

'கூட்டுறவு அமைப்புகளின் அபிவிருத்தியும் சமகால நிலைப்பாடும்' தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆவரங்காலில் நடைபெறவுள்ளது.

சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆவரங்காலில் உள்ள மேல்மாடி மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகள் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட கூட்டுறவு அமைப்புக்களின் நிர்வாகிகள், பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (வ-11)

## தென்மராட்சியில் வாழும் கலை

யாழ்ப்பாணம், நவ.10

மனஅழுத்தம், உடல் உபாதைகள் என்பவற்றை நீக்கி உடல், உள ஆன்மிக மேம்பாட்டைத் தரவல்ல, பூஜ்ய ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட வாழும் கலைப் பயிற்சி மட்டுவில் சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சி தொடர்ந்து 6 நாள்கள் மாலை வேளைகளில் நடைபெறும் என்றும் ஆர்வலர்கள் இதில் கலந்து பயன்பெறலாம் என்றும் வாழும் கலை அமைப்பு அறிவித்துள்ளது. (ஓ)

## தேசிய மர நடுகை

தென்மராட்சி, நவ.10

தேசிய மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினர் நாளை செவ்வாய்க்கிழமை தென்மராட்சி தெற்கு தனங்களப்புப் பகுதியில் மரம் நடுகைச் செயற்றிட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சம்மேளனத் தலைவர் எஸ்.மதியழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஜ.தபேந்திரனும் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் அலுவலர் எஸ்.சண்முகவடிவேலும் கலந்து கொள்வர். பிரதேசத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் பனம் விதைகளும் நடப்படவுள்ளதாக சம்மேளனத்தினர் தெரிவித்தனர். (வ-9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைமாணி (B.F.A) பட்டம்பெறும்
செல்வி
பிரதீபா சிறிகாந்தராசா
அவர்களை மேலும் பல கலைகள் கற்று பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.
வாழ்த்தும்:
மனோகரன் (ஆசைமாமா)
குடும்பத்தினர்.

CONGRATULATIONS



Your first day of school,
Your first best friend,
Your first crush,
Your first relationship,
The first time you bunked class,
Studying one day
before your exam,
Midnight snacks,
And midnight calls,
The past few years
will be the best ones
you've had
in your entire life.
All the best for your future.....
Happy Graduation,
To:
Dr. J. Jeyakanthan
(Jacky)
By: VVS 06'
(53934)(4.3.6)

குழந்தைப் பேற்றிற்கான சிறப்பு ஆலோசனை
சென்னை, காமாட்சி தாய்மை மகப்பேற்று சிறப்பு சிகிச்சை நிலையத்திலிருந்து வைத்திய நிபுணரின் ஆலோசனை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
LAVA HOSPITALS
561, Palaly Road, Jaffna.
021 221 2599
(53864)(4.6.3)

வீட்டுடன் காணி விற்பனைக்கு
பூநகரி மட்டுவில் நாடு. சங்குப்பிட்டி பிரதான வீதியில் வாடியடி சந்திக்கு மிக அண்மையில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் வைத்திய சாலைக்கு நேர் எதிராக வீடு, கிணற்றுடன் அமைந்துள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 124 7425, 077 677 1048, 021 227 0410
(47328) (45.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைமாணி (B.F.A) பட்டம்பெறும்
செல்வி
பிரதீபா சிறிகாந்தராசா
அவர்களை மேலும் பல கலைகள் கற்று பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.
வாழ்த்தும்:
அம்மம்மா, பெரியமாமா (பிரான்ஸ்), தயாமாமா (இந்தியா), மனோமாமா, சாரதா சித்தி, ஹரிமாமா, ராகினி சித்தி குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி பிருந்தா சிவபாதம் B.B.A
இன்று நடைபெறும் யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வணிக முகாமைத்துவ நிர்வாக இளமாணி பட்டம் பெறும் செல்வி பிருந்தா சிவபாதம்
(Bachelor of Business Administration, Special in Human Resource Management)
மேலும் பல்வேறு பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறையருள் வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பொ.குணசிங்கம் (குடும்பத்தினர்)
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

## குடாநாட்டில் 80 ஹெக்ரேயரில் இம்முறை உ.கிழங்குச் செய்கை



விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக எடுத்துவரப்பட்ட விதை உருளைக்கிழங்கை கனரக வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டபோது...

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.மாவட்டத்தில் இம்முறை போகத்துக்கு எண்பது வரையிலான ஹெக்ரேயர் நிலப் பரப்பில் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான பணிகளை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தற்போது தயாராகி வருகின்றனர். அதேவேளை இந்தச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான விதை உருளைக்கிழங்கை விநியோகிப்பதற்கு யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இதற்கென கொழும்பில் இருந்து 1500 அந்தர் உருளைக்கிழங்கு கனரக வாகனம் மூலம் நேற்று முன் தினம் எடுத்து வரப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட 'ரெட்யசோடா' என்ற இனத்தைச் சேர்ந்த உருளைக்கிழங்கே இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

விவசாய திணைக்களத்தால் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கே இங்கே எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த விதை உருளைக்கிழங்கை அந்தர் பதினோராயிரத்து 980 ரூபாவாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சமாசத்துக்கு எடுத்து வரப்பட்ட இந்த விதை உருளைக் கிழங்கை இந்த வாரம் தொடக்கம் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார். (வ-17)

# உணவுகளைப் பரிசோதிக்க யாழ்ப்பாணத்தில் ஆய்வுகூடம்

## அமைக்குமாறு கோருகின்றனர் யாழ். வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம்.நவ.10

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள்கள் சுகாதாரமானவையா என்பதை பரிசோதனை செய்வதற்கு ஆய்வு கூடம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும் என்று யாழ்ப்பாண வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள்களுக்கு வெளி நாடுகள் உட்பட வெளிமாவட் டங்களிலும் தனி மதிப்பு, விருப்பம் உள்ள நிலையில் வர்த்தகர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஐஸ் கிறீமில் தொற்று இருப்பதாக சுகாதார சேவைகள் பணிமனையால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அடிப்படையில் உற்பத்திக்கு தடை விதிக்கப் பட்டது.

இதன்காரணமாக பொது மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டு தற்போது ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களுக்கு பெரியளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

தற்போது சுகாதார சேவைகள் பணிமனையால் அனுமதி வழங்கப்பட்டுள்ள போதும் மக்கள் மத்தியில் இன்னும் அச்சம் தீரவில்லை.

இந்த நிலையில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களை உற்பத்தியாளர்கள் உடனடியாக ஆய்வு செய்வதற்கு ஆய்வு கூடம் ஒன்று இதுவரை யாழ்ப்பா ணத்தில் இல்லை. சுகாதாரப் பிரிவால் ஆய்வு செய்வதற்கு முன்னர் உற்பத்தியாளர்கள் தாங்களாகவே ஆய்வு கூடங்களுக்குச் சென்று ஆய்வு மேற்கொள்வதற்கு காட்டாயம் ஆய்வுகூடம் தேவைப்படுகிறது. கொழும்பில் உள்ள ஆய்வு கூடத்துக்கு அனுப்பி நீண்டகாலக் காத்திருப்பின் பின்னர் சுகாதாரத்தை உறுதிப்படுத்த வர்த்தகர்கள்காத்திருக்கவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும், விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்கள் தரமானவை மற்றும் சுகாதாரமானவை என்பதை அடையாளப்படுத்தும் வகையில் ஆய்வுகூடம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும். ஐஸ்கிறீம் உற்பத்திக்கு ஏற்பட்ட தடையைப் போன்று எதிர்காலத்தில் ஏனைய உற்பத்திகளுக்கும் ஏற்படாத வகையில் சுகாதார அமைச்சு இதற்கான மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன்ர். (வ-14)


பாஷையூர் கடலில் மீனவர்களின் வலையில் என்றுமில்லாதவாறு நேற்று முன்தினம் பெரும் எண்ணிக்கையான சாலை மீன்கள் அகப்பட்டன. அவை கிலோ 20 ரூபாவாக விற்கப்பட்டன. (வ-17)

## விசேட டெங்கொழிப்பு வாரம் ஆரம்பம்

தென்மராட்சி, நவ.10

சாவகச்சேரி நகரசபையின் விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்ட வாரம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 16ஆம் திகதி வரை இடம்பெறும்.

இந்த வாரத்தில் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்புகள் மற்றும் வெற்றுக் காணிகளில் காணப்படும் உக்காத பொருள்கள் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்படவுள்ளன.

வட்டார ரீதியில் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதால் ஒலிபரப்பாகும் தினங்களில் தமது குடியிருப்புகள் மற்றும் வெற்றுக் காணிகளில் காணப்படும் பாவனைக்கு உதவாத பிளாஸ்ரிக் பொருள்கள் தகரங்கள். உடைந்த கண்ணாடிகள் போன்றபொருள்களைஉரப்பைகளில்போட்டுவாகனம்வரும்வீதிகளில் வைக்குமாறு நகரசபைத் தலைவர். இ.தேவசகாயம் பிள்ளைஅறிவித்துள்ளார். (வ-9)

## தொழில்முயற்சியாளருக்கு குறைந்த வட்டியுடன் கடன்

யாழ்ப்பாணம்.நவ.10

யாழ்.மாவட்டத்தில் சிறிய மற்றும்நடுத்தர கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் குறைந்த வட்டியுடன் கூடிய கடன் உதவிகளை வங்கிகளில் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கு யாழ்.வணிகர் கழகம் தயாராகவுள்ளதாக வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெய சேகரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உள்ளிட்ட உப உணவு உற்பத்திப் பொருள்களை மேற்கொள்ளும் உற்பத்தி நிலையங்களை சுகாதாரமாக இயங்க வைப்பதற்கு சுகாதார சேவைகள் பணிமனையால் தற்போது இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

அதன் அடிப்படையில் ஐஸ் கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தி நிலையங்களைச் சுகாதார முறைக்கு ஏற்ப உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறு உற்பத்தி நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

உரிய நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு நிதி போதாமை உற்பத்தியாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் குறிக்கப்பட்ட சில வங்கிகள் அவர்களுக்காக கடன் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு வங்கிகள் ஊடாக குறைந்த வட்டியில் தொழில் முயற்சிக்கடனை பெற்றுக் கொடுப்பதற்கு யாழ்.வணிகர் கழகம் முன்வந்துள்ளது.

உடனடித் தேவைகளை நிறைவேற்றி தொடர்ந்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக வங்கிகளால் வழங்கப்படவுள்ள இந்தக் கடன் உதவிகள் தேவைப்படுவோர் யாழ்.வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு கடன் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்"- என்றார். (வ-14)

## பனை வளத்தை ஊக்குவிக்க விழிப்புணர்வு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,நவ.10

பனை வளத்தை ஊக்குவிக்கும் நோக்கில் பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுக்கும் பணியில் பனை அபிவிருத்திச் சபை ஈடுபட்டு வருவ ாக சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"இந்த மாதத்தைப் பனை விதை நடும் மாதமாக சபை பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த மாதத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகம் ஊடாக பனை மரத்தினால் பெறப்படும் பயன்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை சபை ஆரம்பித்துள்ளது. கரவெட்டி, உடுவில் பிரதேச செயலகங்களில் இது தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்குகள் செயற்பாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனை மரங்கள் அழிக்கப்படுவதை உடன் தவிர்ப்பதுடன் மேலும் பனை வளத்தை அதிகரிக்கும் முகமாக வீட்டுக்கு வீடு மற்றும் வெற்றுக் காணிகளில் பனம் விதைகளை நட்டு அதை முழுமையாகப் பராமரிக்க வேண்டும்.

பனை அபிவிருத்திச் சபையின் பனை வளத்தை அதிகரிக்கும் செயற்பாட்டுக்கு பிரதேச செயலகங்கள் முழுமையாக ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தற்போது குடாநாட்டில் மழை வீழ்ச்சி மிக மிக குறைவடைந்ததற்கு பனை வளம் அழிக்கப்பட்டாலும் ஒரு முக்கியமான காரணமாக இருக்கலாம்.

பனை மரங்கள் முன்னர் சோலையாக இருந்தபோது மழை வீழ்ச்சியின் தாக்கமும் அதிகரித்துக் காணப் பட்டது. அத்துடன் பனை மரங்கள் வெட்டப்படுவதைக் கூட இந்த ஆண்டு வரைக்கும் தற்காலிகமாக நிறுத்தியும் வைக்கப் பட்டிருந்தது.

பனை மர்ங்கள் வெட்டப்படுவதைக் கண்காணிக்கும் பணியில் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். எமது பிரதேசத்தில் வரும் காலத்தில் பனை மரங்கள் வெட்டுவதற்கு சபை ஒருபோதும் அனுமதி வழங்காது. பனை வளத்தின் தேவை, அதன் முக்கியத்துவம் போன்றவற்றை கருத்தில் கொண்டே இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் பிரதேச செயல கங்கள் மற்றும் கிராம மட்டங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இந்த விழிப்புணர்வு செயற்பாடுகளைத் தொடர்ந்தும் சபை முன்னெடுக்கும்"- என்று அவர்மேலும் கூறினார். (வ-17)

## மானியத்தில் கடற்றொழில் உபகரணங்கள்

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள் மானிய அடிப்படையில் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதாக கடற்றொழில் நீரியல் வளத் துறையின் உதவிப்பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார். கடற்றொழில் அமைச்சின் உதவியுடன் இந்த மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் வலைகள் மற்றும் பாதுகாப்பு அங்கிகள் வழங் கப்பட்டு வருகின்றன.

கடற்றொழிலாளர் ஒருவருக்கு ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரைக்கும் தெரிவு செய்யப்பட்ட 53 கடற்றொழிலாளர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சால் குறித்த உபகரணங்கள் தொடர்ந்தும் அனுப்பி வைக்கும் பட்சத்தில் ஏனையவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன-என்றார். (வ-17)

## தென்மராட்சி சந்தைகளில் தேங்காய்க்குக் கிராக்கி

தென்மராட்சிப் பிரதேச தேங்காய்களுக்கு தென்பகுதியில் கிராக்கி ஏற்பட்டுள்ளதை அடுத்து தேங்காயின் விலை திடீரென அதிகரித்துள்ளது. கடந்த 2 மாதங்களாக தேங்காயின் வரவு சந்தைகளில் அதிகரித்துள்ள தால் தென்பகுதியில் இருந்து வந்தவர்களால் வாகனங்கள் பெருமளவு தேங்காய்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் சென்றனர்.

வியாபாரிகள் தோட்டங்களுக்குச் சென்று கொள்வனவு செய்வதால் சந்தைக்கு வரும் தேங்காயின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. சந்தைகளுக்கு வரும் யாழ். மாவட்ட தேங்காய் வியாபாரிகளுடன் தென்பகுதி வியாபாரிகளும் வருகை தருவதால் தேங்காயின் விலை கிடு கிடு என்று அதிகரித்துள்ளது. கடந்த மாத (ஒக்ரோபர்) இறுதிப்பகுதியில் 20-30 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த ஓரளவு பெரிய தேங்காய் நேற்று முன் தினம் முதல் 50-60 ரூபா வரை விற்பனை செய் யப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேச தேங்காயின் மொத்தமான உள் அளவைக் கொண்டுள்ளதால் தென்பகுதி மக்கள் விரும்பிக் கொள்வனவு செய்வதாக தென்பகுதி தேங்காய் வியாபாரிகள் தெரிவித்தனர். (வ-9)

# மாணவர் பயணம் தினமும் ஆபத்தில்

## பாதுகாப்பற்ற ரயில் கடவையால்



கிளிநொச்சி, நவ.10
பாதுகாப்பற்ற ரயில் கடவையால் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகள் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையாலே இந்த நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.
இதுகுறித்து அந்தப் பாடசாலையின் அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கத்திடம் கேட்டபோது, "ரயில் கிளிநொச்சியிலிருந்து பளை வரை பயணிக்கத் தொடங்கிய காலத்தில் எமது கல்லூரியின் மாணவிகள் பாதுகாப்பற்ற ரயில் பாதையைக் கடப்பதில் உள்ள ஆபத்துக் குறித்து கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோருக்கு எடுத்துக் கூறியிருந்தோம். ஆயினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ரயில் கடவை பற்றிப் பெற்றோர்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆயினும் ரயில் கடவையைப் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு அதிகாரிகளே நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-18)



# மேய்ச்சல் தரவை இல்லாததால் கால்நடை வளர்ப்போர் சிரமம்

## துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில்

கிளிநொச்சி, நவ.10
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் கால்நடைகளை வளர்ப்போர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின் றது. தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைப் பராமரிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
துணுக்காய் பிரதேச செயலகங்களில் நடைபெற்ற கூட்டங்களில் மேய்ச்சல் தரவைகளுக்கு காணிகளை இனங்காட்டுமாறு கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்திருந்தனர் என்றும், அதன்பின்னர் அனிஞ்சியன்குளம், அம்பலப்பெருமாள்குளம் போன்ற கிராமங்களில் மேய்ச்சல் தரவைகளுக்கான காணிகள் அடையாளப்படுத்தப்பட்டபோதும், அவை மேய்ச்சல் தரவைகளாகப் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
துணுக்காய் மற்றும் மல்லாவி ஆகிய பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போர் ஆலங்குளம் போன்ற பகுதிகளுக்கு கால்நடைகளை நீண்டதூரம் மேய்ச்சலுக்காக கொண்டுசெல்ல வேண்டியுள்ளது என்றும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சல் தரவைகளை இனங்காட்ட வேண்டும் என்றும் கால்நடைகளை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-18)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்பாசி உற்பத்தி மும்முரம்


## மாவட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.10
கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்பாசி உற்பத்தி திட்டம் மிகவும் மும்முரமாக நடைபெற்று வருகின்றது. 100 குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத் தொழிலாக இதனை மேற்கொண்டு வருகின்றனர் - என்று தெரிவித்துள்ளார் கிளிநொச்சி மாவட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி எஸ்.சலீபன்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"கிளிநொச்சி மாவட்டத்தில் 2013ஆம் ஆண்டு முதல் இந்த திட்டம் ஆரம்பமாகியது. தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கடற்பாசி வர்த்தக ரீதியான ஏற்றுமதி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
கடற்பாசி உற்பத்தியை 100 குடும்பங்கள் தங்கள் வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றன. இந்த கடற்பாசி வளர்க்கும் தொழில் நடவடிக்கையில் 300 குடும்பங்களை இணைக்க வேண்டும் என்பதே எமது இலக்காக உள்ளது.
இந்தத் தொழிலை மீனவர்களே அதிகளவில் மேற்கொள்கின்றனர். ஒரு நாளில் மீன் பிடிக்க செல்லும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் 2 அல்லது 3 மணித்தியாலங்கள் இந்தத் தொழிலுக்கு செலவிட்டால் போதுமானது. அந்த குடும்பங்களின் பெண்களும் இந்த தொழிலில் ஈடுபடுகின்றனர். இது அவர்களின் மீன்பிடி தொழில் வருமானத்தை விட மேலதிக வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய தொழிலாக இருக்கின்றது.
இந்த தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் செயற்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் மூலம் 50 குடும்பங்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.
இந்தக் கடற்பாசியால் பல குடும்பங்கள் பயன்பெறுவதுடன், கடலில் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் முடிகின்றது.
இந்த உற்பத்தி யாழ்.மாவட்டத்தின் நயினாதீவு, சாட்டி, மாதகல் ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கு கடற்பாசி வளர்ப்பதற்குரிய சூழல் காணப்படுகின்றது. மன்னார் முதல் ஊர்காவற்றுறை வரையான கடற்பகுதி அலைகள் குறைவாக உள்ளதால், நீர்வாழ் உயிரினங்களின் வளர்ப்பு அங்கு சாத்தியமாகின்றது.
கடற் பாசிகள் வளர்க்கும் போது, கடலில் கூடுகள் கட்டி அதனுள் கடற்பாசிகளை வளர்ப்பதாகும்.
அதனை கடலிலே விட்டால் மீனினங்களின் பெருக்கங்கள் அதிகரிக்கும்.
அத்துடன் உரிய காலங்களில் அவற்றை அறுவடை செய்து வர்த்தக ரீதியில் ஏற்றுமதியும் செய்ய முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வவுனியாவில் பாதீனியம் அபரிமிதமான வளர்ச்சி

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, நவ.10
வவுனியாவில் பல்வேறு இடங்களில் பாதீனிய வளர்ச்சி அதிகரித்துக் காணப்படுகின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அது குறித்து நகர சபை, பிரதேச சபை அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.
தாண்டிக்குளம், குட்செட்வீதி, இறம்பைக்குளம், மகாறம்பக்குளம், நெளுக்குளம், கூமாங்குளம், தவசிக்குளம், கல்நாட்டினகுளம், கோமரசங்குளம், ஓமந்தை, சமளங்குளம், காத்தார் சின்னக்குளம், சிதம்பரபுரம், இயங்கராஊர், இராசேந்திரங்குளம் ஆகிய பகுதிகளிலேயே பாதீனியம் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.
வடக்கு மாகாண சபையால் யாழ்.மாவட்டத்தில் பாதீனியச் செடியகற்றும் பணி நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்ற போதும் வவுனியாவில் இந்தப்பணி தீவிரமாக முன்னெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.
தற்போது பெய்துவரும் மழையால் பாதீனியத்தின் வளர்ச்சி அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)



நெடுங்கேணி வேலங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மூலஸ்தானத்துக்கான அடிக்கல்லை வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமன் நட்டார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன், நெடுங்கேணி பிரதேச சபை தவிசாளர் பாலசுப்பிரமணியம், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ற-435)

# கட்டுப்பாட்டு விலையில் உரம் பெறலாம்

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.10
கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், மேற்பட்ட நிலப்பரப்புக்குதேவையான உரத்தை கட்டுப்பாட்டுவிலையில் கமநல சேவை நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.தயாரூபன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஏக்கருக்கு குறைவான நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, கமநல சேவை நிலையங்கள் ஊடாக மானிய அடிப்படையில் உரங்கள் வழங்கப்படுகின்றன.
5 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், 5 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்புக்கான நெல்லை தனியார் கடைகளில் அதிகூடிய விலையில் கொள்வனவு செய்வதாக எமக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.
கமநல சேவை நிலையங்களில் போதியளவு உரங்கள் கையிருப்பில் இருக்கின்றன. அந்த உரங்களை ஒரு மூடை (50 கிலோ) ஆயிரத்து 200 ரூபாய் என்ற கட்டுப்பாட்டு விலையில் விவசாயிகள் பெறமுடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கை – இந்தியா இடையே வரலாற்று பிணைப்பு தொடரும்

## பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவிப்பு



கொழும்பு, நவ.10
மிக நீண்ட வரலாற்றுத் தொடர்பை இலங்கையும் இந்தியாவும் பேணிவருகின்றன. இன்றுவரை கலாசார மற்றும் வரலாற்று நெருக்கம் இரு நாடுகளிடையேயும் நீடித்துவருகிறது. எதிர்காலத்திலும் இந்த இணைப்பு உச்சம் பெறும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைப் பிரதமர் டி.எம். ஜயரத்ன.
இந்தியாவின் மனிப்பால் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தியா வெற்றிகரமான விண்வெளித்திட்டங்களை நிலைநாட்டியுள்ளது. சந்திரனுக்கு விண்கலங்களை செலுத்தியுள்ளதன் மூலமாக உலக நாடுகளுக்கு தனது வல்லமையையும் இந்தியா புலப்படுத்தியுள்ளது.
மனித வளத்தை கல்வியே பலப்படுத்துகின்றது. அபிவிருத்தியை முன்னோக்கி நகர்த்தும் சக்தியாக இது விளங்குகின்றது. இதுவே இந்தியாவின் வெற்றிக்குக் காரணம்.- என்று தெரிவித்துள்ளார். (ற)



ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பெண் உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பெருமளவானோர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பொது வேட்பாளர் தெரிவில் மிகுந்த அவதானம் தேவை

## ராஜதந்திரியான தயான் ஜயதிலக்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.10
இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பொதுவேட்பாளரை, பல விடயங்களையும் கருத்தில் கொண்டே தெரிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இலங்கையின் ராஜதந்திரிகளில் ஒருவரான தயான் ஜயதிலக்க.
குறித்த பொதுவேட்பாளர், அனைத்து எதிர்க்கட்சிகளின் காத்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் எதிர்க்கட்சி வாக்காளர்கள் மத்தியிலும் மதிப்பை கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் கூறும்போது, குறித்த பொதுவேட்பாளர் ஏற்கனவே பெருமளவு வாக்கு வங்கியை கொண்டிருக்க வேண்டும். இந்தநிலையில் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் 40வீத வாக்கு வங்கியை கொண்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியே பொது வேட்பாளர் நிலைக்கு பொருத்தமான வேட்பாளரை கொண்டிருக்கிறது என்பது யதார்த்தம்.
எனவே பொதுவேட்பாளருக்கு, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மாதுளுவாவே சோபித தேரர் ஆகியோரின் முழுமை ஆதரவு கிடைக்கவேண்டும்- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தகவல் அறியும் உரிமை மிகவும் முக்கியமானது

## இலங்கையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை என்கின்றார் பிரதிபா மஹானாமஹேவா

கொழும்பு, நவ.10
தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை மிகவும் முக்கியமானது. ஆயினும் இலங்கையில் அந்த உரிமை உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் பிரதிபா மஹானாமஹேவா.
அனைத்து மனிதர்களுக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு என்று குறிப்பிட்டுள்ள அவர், கடந்த காலங்களில் மனித உரிமை தொடர்பில் எவரும் பேசியதில்லை. ஆயினும் தற்போது மனித உரிமை பற்றிய விவகாரங்கள் நாள் தோறும் பேசப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.
மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
தகவல் அறிந்து கொள்ளும் உரிமையானது தற்போது சர்வதேசமயமான ஓர் எண்ணக்கருவாக மாற்றம் பெற்றுள்ளது. அனைத்து மனிதர்களும் வாழ்வதற்கு உரிமை உண்டு. பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்கள் சமத்துவம் வாழ்வதற்கான உரிமை மனித நேயம் பற்றியே போதிக்கின்றன.
பண்டைய மன்னர்கள் ஆட்சி நடத்திய காலத்திலும் இலங்கையில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டமை எமது வராற்றின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.



*பிரதிபா மஹானாமஹேவா*

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை மிகவும் முக்கியமானது. ஆயினும் இலங்கையில் அந்த உரிமை உறுதிப்படுத்தப்படவில்லை.
உதாரணமாக கலிபோர்னியாவின் கோல்டன் கேட் பாலம் தொடர்பிலான உண்மையான விவரங்கள் மக்களுக்கு அதன்மூலமே அம்லப்படுத்தப்பட்டுள்ளன.
நிர்மாணப் பணிகளின் போது காவுகொள்ளப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை, நிர்மாணப் பணிகளுக்கான செலவுகள் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்பட்டன.
எனினும், இலங்கையில் இவ்வாறான தகவல்கள் பொது மக்களுக்கு வழங்கப்படாத நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருகின்றது- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# வெளிநாட்டு தூதுவர்களுடன் பேசவுள்ளார் ஜனாதிபதி?

கொழும்பு, நவ.10
இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாராகி வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக செய்யுமாறு ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த காலங்களில் நடந்தவைகள், எதிர்காலத்தில் நாட்டில் ஏற்பட போகும் அரசியல் மாற்றங்கள் மற்றும் இராஜதந்திர கொள்கைகள் தொடர்பில் இந்த பேச்சின்போது கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கையின் தற்போதைய அரசைக் கவிழ்க்கும் சதித்திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன என்று அரசாங்க தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டு வரும் நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளன. (ற)

# மீனவர்கள் 77 பேர் வெளிநாட்டு சிறைகளில்

கொழும்பு, நவ.10
இலங்கை மீனவர்கள் 77 பேர் தொடர்ந்தும் வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்தியா, பங்களாதேஷ் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளிலேயே அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.
பங்களாதேஷில் இலங்கை மீனவர்கள் 20 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது நான்கு படகுகளையும் அந்நாட்டு அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.
அதனைத் தவிர இந்தியாவில் இலங்கை மீனவர்கள் 40 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை மீனவர்களின் 22 படகுகளும் இந்தியாவில் உள்ளன என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மஹிந்த போட்டியிடுவதற்கு வாய்ப்புகள் இருக்கமுடியாது

## ஐ.தே.க. எம்.பி. அஜித் பீ பெரேரா தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 3ஆவது தடவையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி ஏற்று கொள்ளவில்லை என்று அதன் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இடம்பெறும் குழு நிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின்போது, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்ட கருத்தை ஒன்றை மேற்கோள் காட்டியே அவர் இதனைத் தெரிவித்தார்.
ஜனாதிபதியால் மூன்றாவது தடவையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட சட்ட ரீதியாக அனுமதி இல்லை என்று குறிப்பிட்ட அவர், இலங்கை யின் மனித உரிமைகள் ஆணைக் குழுவால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை அரச நிறுவனங்கள் நடை முறைப்படுத்துவதில்லை என்றும் அங்கு சுட்டிக்காட்டினார்.



அதற்குப் பதில் வழங்கிய பொது நிர்வாக அமைச்சர் டபிள்யு. டி.ஜே செனவிரட்ண, அதனை தாமும் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்.
இதேவேளை அரச பணியாளர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், அரச சேவையாளர்களுக்கு உரிய வகையில் வரையறைப்படுத்தவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சுமத்தினார்.
இதற்கு பதில் வழங்கிய பொது நிர்வாக அமைச்சர் டபிள்யு. டி.ஜே செனவிரட்ண, சிரேஷ்ட அரச பணியாளர்களை இலக்கு வைத்தே மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவித்தார். (ற)

# நாடாளுமன்றத்தில் தூங்க வேண்டாம்

## எம்.பிக்கள், அமைச்சர்களுக்கு அறிவுரை

கொழும்பு, நவ.10
நாடாளுமன்ற அமர்வுகளின்போது தூங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ 2015ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த போது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தூங்கிக் கொண்டிருந்தமை தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நாடாளுமன்றத்தில் செய்தித்தாள் ஒன்றின் ஒளிப்படம் ஒன்றை காண்பித்து இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.
இதன்போது கருத்துரைத்த உள்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன, ஒருவரை சுட்டிக்காட்டி இந்த குற்றச்சாட்டை முன்வைப்பது கூடாது என்று கூறினார். அதனை ஏற்றுக் கொண்ட அஜித் பி பெரேரா, பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய அமர்வுகளின் போது தூங்குகின்றனர் என்று குறிப்பிட்டார். அதற்கு பதிலளித்த பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் நித்திரை செய்வதற்கு இது சிறந்த உதாரணமாகும் என்று தெரிவித்துடன், அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



## பாட்டியின் காதல்

லண்டனில் 100 வயதான பாட்டியை 60 வயதான ஒருவர் திருமணம் செய்து கொண்டார். இந்த பழுத்த திருமணம் நடந்தது ஒரு முதியோர் இல்லத்தில். சக்கர நாற்காலியில் வலம் வரும் மார்பா ப்ளோட்னிகோவா என்ற அந்த பாட்டி தனது கணவர் இறந்தவுடன் முதியோர் இல்லத்துக்கு வந்தார்.

அங்கு இருந்த அபனாசில் ஹரின் என்பவரை சந்தித்தார். அந்த மகிழ்ச்சியான ஜோடி 11 வருடங்களாக அந்த இல்லத்தில் ஒன்றாக வசித்து வருகின்றனர். பின்னர் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். அவர்களது திருமணத்தில் இல்லத்தில் தங்கியிருக்கும் மற்றவர்களும், ஊழியர்களும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர். ஆனால் நூறாண்டு வாழ்க என்று மட்டும் மணமகளை வாழ்த்த முடியாமல் போய் விட்டது.

## ருத்ரமாதேவியில் கலக்கப்போகும் அனுஷ்கா



அனுஷ்கா தெலுங்கில் நடித்து வரும் மிகப் பெரிய படம் ருத்ரமாதேவி. ஆந்திர மாநிலத்தில் குறுநிலராணியாக இருந்த ருத்ரமாதேவி கதாபாத்திரத்தில் அனுஷ்கா நடித்து வருகின்றார். இந்தியாவிலேயே அதிக பணச் செலவில் தயாராகும், கதாநாயகியை மையமாகக் கொண்ட படம் இதுதான்.

இதில் அனுஷ்கா, 8 கிலோ தங்க நகை அணிந்து இளவரசியாகவும், போர் வீராங்கனையாகவும் பல்வேறு வேடங்களில் நடித்து அசத்தியுள்ளார். இது குறித்து படத்தின் இயக்குநர் குணசேகரன், இளவரசி கதாபாத்திரத்துக்காக அனுஷ்கா தனது எடையைக் குறைத்து நடித்துள்ளார். இந்தக் கதாபாத்திரத்தில் அவர் மிகவும் கவர்ச்சியாகவும் நடித்துள்ளார். உண்மையான தங்க நகைகளை அணிந்து கொண்டே இளவரசி கதாபாத்திரத்தில் அவர் நடித்ததாகவும் தெரிவித்துள்ளார்.


## விமானமாக மாறி ஓடும் கார்



இப்போது பறக்கும் கார்கள் வரிசையில் புதிதாக அறிமுகமாகி இருக்கிறது ஏரோ மொபைல் 3. ஓட்டோமொபைல், விமானம் என்று இரண்டுக்கும் ஏற்ற மாதிரியாக இது உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஒரு நொடியில் காரிலிருந்து விமானமாக மாறும்படி இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரண காரை நிறுத்துவதற்கான இடமே இதற்குப் போதுமானது.

இதில் இருவர் பயணிக்கலாம். நெரிசலில் ஓட்டிச் செல்லாம், மேலும் எந்த விமான தளத்திலும் இதை விமானமாகவும் பயன்படுத்தலாம். இந்த விமானம் தரையிறங்குவதற்கு சில நூறு மீற்றர்கள் நீளம் கொண்ட புல்பாதையோ அல்லது நடைபாதையோ போதுமானது. இதற்கு முந்தைய ஏரோ மொபைல் 2.5 வை விட ஏரோமொபைல் 3.0 மேம்பட்டிருக்கிறது. பல கோண இறக்கைகள் என்ற வசதி இருப்பதால் கரடுமுரடான நிலப்பரப்பிலும் ஏரோமொபைலைத் தரையிறக்கலாம். கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து ஏரோமொபைல் 3.0 சோதனை ஓட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் இணைக்கப்பட்டிருக்கும் ஏவியானிக்ஸ் கருவி, ஓட்டோ பைலட், பாரசூட் அமைப்பு ஆகியவை கூடுதல் சிறப்புகளாகக் கூறப்படுகிறது.

## இப்படியும் ஒரு திருமண அழைப்பிதழ்




## புகை குடித்தால் குண்டாகுவீர்கள்



சிகரெட்டில் இருந்து வெளியேறும் புகையை நுகர்வதால் உடல் எடை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. சிகரெட் பிடிப்போருக்கு புற்றுநோய், நுரையீரல் பாதிப்பு உட்பட பல பாதிப்புகள் ஏற்படக்கூடும். ஆனால் புகைப் பழக்கம் உடையவர்களைச் சுற்றி உள்ள பிறருக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் என்ற தகவல் அதிர்ச்சியை தருகிறது. சிகரெட்டில் இருந்து வெளியேறும் புகை, குழந்தைகள் மற்றும் பெரியவர்களால் சுவாசிக்கப்படும் போது அவர்களது உடலில் இன்சுலின் எதிர்ப்புத்தன்மை மாற்றம் பெறுகிறது. இதனால் உடல் எடை அதிகரிக்க அதிக வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிகரெட்டில் இருந்து வெளியாகும் புகையில் சுமார் 4 ஆயிரம் இரசாயனங்கள் உள்ளன. இந்தப் புகை மனிதனின் செல்களில் உள்ள அடிப்படை அமைப்பை மாற்றியமைத்து பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் மனிதனின் செல்லில் செரமைட் எனும் கொழுப்பை தூண்டுவதன் மூலம் எடையை அதிகரிக்கக் கூடியதாகவும், சிகரெட் புகையை சுவாசிப்பவர்களுக்கு இதய கோளாறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் ஆய்வுகள் கூறப்படுகின்றன.

புதிதாக திருமணம் செய்த தம்பதியர் கோயிலுக்குச் சென்றனர். அப்போது மனைவியின் காலில் முள் குத்திவிட்டது.

'இந்தச் சனியன் முள்ளுக்கு என் மனைவி வருவது தெரியவில்லை' என்று முள்ளைக் கோபித்துக் கொண்டான் கணவன்.


ஐந்து வருடம் கழித்து அதே கோயிலுக்கு வந்தார்கள். திரும்பவும் ஒரு முள் மனைவிக்கு குத்தி விட்டது.

'சனியனே, முள் இருப்பதைப் பார்த்து வரக்கூடாதா?' என்று இப்போது மனைவியைக் கோபித்துக் கொண்டான் கணவன்.

'என்னங்க, அப்போது அப்படிச் சொன்னீங்கள், இப்போ வேற மாதிரி சொல்றீங்களே' என்று மனைவி கேட்க,

'அதற்குப் பெயர்தான் சனிப்பெயர்ச்சி' என்றான் கணவன்.





## இன்றைய பேஸ்புக் தத்துவம்

*அன்பான பெண்களே!*

**உங்களை நண்பராக ஏற்றுக்கொள்ளும்படி அதிகமான ஆண்கள் தொந்தரவு செய்தால்,**

**நீங்கள் உங்களது நிஜமான உருவப் படத்தை இங்கே பதிவு செய்யுங்கள்.**

**தொடர்ந்தும் தொல்லைகள் இருந்தால் முகத்தை கழுவிவிட்டு புதிய புகைப்படத்தை எடுத்து திரும்பவும் பதிவு செய்யவும்.**

நிச்சயமான பலன் கிட்டும்

## அமைதிச் சிறை



மூடிப் போன
விதைகளல்ல
நாங்கள்
மீண்டும்
மீண்டும்
முளைத்துக்
கொண்டே
இருக்கின்றோம்
இன்றுவரை ...!

நாங்களின்றி
ஏது சுகம் ?
முந்தானை
பிடிக்க
இரவுத்
தாமரையாய்
உங்கள் கால்
பிடிக்க....!

அடுப்பை
மறந்தால்
ஏது உணவு ?
வயிறு
காய்ந்துவிடுமே
உங்களுக்கு...!

துவைக்க
மறுத்தால்
அழுக்காவது
நீங்கள்
மட்டுமல்ல
ஆடைகளும்
தான்....!

பெண்ணினமே!
மெழுகாக
வாழ்ந்தது
போதும்
எழு! தீப்
பிழம்பாக
ஏழு கடலையும்
தாண்டு
வாழ்க்கை உன்
கையில்....!

நமக்கு
சமத்துவம்
ஜனிக்கும்
போதுதான்
இந்த மண்ணும்
மாணிக்கமாம்....!

உறவுகளை
உற்பத்தி செய்து
உலகை
கண்ணிமையில்
கொண்டுவாழும்
பெண்ணினமே !

– சுவர்ணா



# பெண்ணும் இன்றைய சமுதாயமும்!

பெண்களின் வளர்ச்சிப் பாதைகள் பல வடிவங்களில் தற்காலத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. ஆனாலும் பெண் என்ற பாகுபாடு இன்னும் எமது சமூகத்தை விட்டுப் போவதில்லை. இரவில் பெண்ணால் தனியாக வெளியே செல்ல முடிவதில்லை. பகல் நேரங்களிலும் பெண்கள் கூட்ட நெருக்கடி இல்லாத இடங்களுக்கு தனியாக செல்ல அச்சம் கொண்ட நிலையில் தான் உள்ளார்கள். இதனால் பெண்கள் ஆண்களை சார்ந்து வாழும் நிலைக்கு இன்றும் தள்ளப்படுகிறார்கள். ஒன்று வெளி விவகாரங்களை கவனிக்க செல்லும் பொழுது ஓர் ஆண் துணையை நாடுகிறார்கள் அல்லது எதற்கு வம்பு என்று வீட்டிலேயே முடங்கி விடுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் நமது கலாசார போர்வை எனச் சொல்ல வேண்டும்.

'வயதிற்கு வந்த பெண் ஓர் ஆணுடன் சரளமாக பேசிப் பழக நமது சமுதாயம் அனுமதிப்பதில்லை. அதையும் மீறி நெருங்கிப் பழகி விட்டால் அவளுக்கு 'கெட்டுப் போனவள்' என்ற முத்திரை குத்தப்படுகிறது. அந்த முத்திரையுடன் அவள் வாழ்நாள் முழுவதும் அல்லறப்பட வேண்டும். இந்த அவதூறில் இருந்து தம் பெண்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பெரும்பாலான பெற்றோர்கள் பாடசாலையைத் தவிர வேறு எங்கும் தம் பெண்களை தனியே செல்ல அனுமதிப்பதில்லை.

இதனால் இருதலைக் கொள்ளியாய் பெண் பாதிக்கப்படுகிறாள். ஒருபுறம் அவளது சுதந்திரம் பறிக்கப்படுகிறது. மறுபுறம், இவ்வாறு தொடர்ந்து பல ஆண்டுகளாக பெண் கட்டுப்பெட்டியாக வளர்க்கப்படுவதால் அவள் தன்னம்பிக்கையை இழக்கிறாள். பருவம் அடைந்து, படித்து முடித்து, திருமணம் முடிந்து, தாயுமாகி, ஒரு குடும்பத்தின் தலைவியாய் தலை நிமிர்ந்து நிற்கும் பொழுது, பருவத்தில் அவளுக்கு மறுக்கப்பட்ட சுதந்திர வாசல் ஒருவேளை திறக்கப்பட்டாலும், சுய சந்தேகங்களாலும், தன்னம்பிக்கை இன்மையினாலும் தொழுவில் கட்டிய மாடாய் கிடக்கிறாள். பல்லாண்டுகளாய் பழகிப் போன பழக்கத்தை அவளால் மாற்ற முடிவதில்லை. மேலும், தான் தாங்கியுள்ள 'நல்ல குடும்பப் பெண்' என்ற பட்டத்தை துறக்கவும் அவள் தயாராய் இல்லை. மிகவும் சிலரே இந்த வேலிகளை விட்டு வெளியே வருகிறார்கள்.

இவ்வாறு நமது கலாசாரத்தில் சிறு வயதில் இருந்தே பெண் என்பவள் தன்னைச் சுற்றியுள்ள ஆண்களைச் சார்ந்து வாழும்படி வளர்க்கப்படுகிறாள். எந்த ஒரு சூழ்நிலையிலும் ஒருவர் மற்றொருவரை வெகு நாள்களாக சார்ந்து வாழும் நிலை ஏற்படும் பொழுது அடக்குமுறை அங்கு வேர்விட்டு விடும்.

அந்த வானத்தின் கருமையை எடுத்து இன்றைய பெண்ணின் நிலையினை விவரிக்க விவரிக்க விரைவில் அந்த வானமும் வெளிறிப் போகும்! போனவை போகட்டும். இனியேனும் நாம் விடியலை நோக்கி பயணம் செய்வோம். மேலும் இது பெண்ணின் பிரச்சினை மட்டும் அல்ல. ஒரு சமுதாயத்தின் ஒரு பாதி இப்படி அடக்கி ஒடுக்கப்படுவது ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் நல்லதல்ல. இனிவரும் பெண் சமுதாயத்தின் தளைகளைக் களையப் போராடுவோம்.

# மாற்றமடைய வேண்டிய கிராமத்துப் பெண்கள்

நாட்டினுடைய வளர்ச்சியை, அந்த நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி மற்றும் கல்வி அறிவு இவைகளே நிர்ணயிக்கின்றன. இவற்றில் பெரும்பங்கு பெண்களையே சாரும். ஏனெனில் பெண்களின் கல்வியறிவு அவர்களது ; குடும்பத்தின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் நாட்டின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

பெண்களுக்கு என்று பாதுகாப்பின்மை, மற்றும் கல்வியறிவு இல்லாத நிலை மட்டுமே அவர்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் காரணிகள். நகரங்களில் பெண்களின் கல்வி நிலை வளர்ச்சி கண்டிருந்தாலும் இன்றும் கிராமங்களில் பெண்களின் கல்வி நிலை இன்னும் பின்னடைந்த நிலையிலேயே இருக்கிறது.

ஒரு சில கிராமங்களில் பெண்கள் அடிமைகளாகவும் அவர்கள் கல்வியறிவு பெறாதவர்களாகவும், ஆண் சமூகத்துக்கு அடி பணிந்து நடப்பவர்களாகவும் உள்ளனர். இதற்குக் காரணம் அவர்களின் அறியாமையும் கல்வியறிவு இல்லாததும் தான். அதனால் கிராமப்புற கல்வியறிவு என்பது இக்காலகட்டத்தில் மிகவும் அத்தியாவசியமான ஒன்று. இன்றைய காலகட்டத்தில் பெண்கள் பணிபுரியாத துறைகளே இல்லை! அடிமைப்படுத்திய ஆண்களே அசந்து வியக்கும் வண்ணம் பல பெண்கள் தங்கள் ஆற்றலால் உயர்ந்த நிலையை அடைந்திருக்கின்றனர்.

இந்தக் கால கட்டத்தில் துணிந்து நின்று சமுதாயத்தை எதிர்கொள்ளும் பெண்கள்: தான் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைகிறார்கள். அதற்கு அவர்களுக்கு தேவையான கல்வியறிவும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் பட்சத்தில் கிராமத்து பெண்க ளும் தங்கள் நிலையை நாட்டுவர் என்பதும் உறுதி:.



“ பெண்களுக்கு என்று பாதுகாப்பின்மை மற்றும் கல்வியறிவு இல்லாத நிலை மட்டுமே அவர்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் காரணிகள். நகரங்களில் பெண்களின் கல்வி நிலை வளர்ச்சி கண்டிருந்தாலும் இன்றும் கிராமங்களில் பெண்களின் கல்வி நிலை இன்னும் பின்னடைந்த நிலையிலேயே இருக்கிறது. ”

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சீன நீர்மூழ்கிக் கப்பல் வருகையால் மீண்டும் தலைதூக்கியுள்ள சர்ச்சை

*சீன நீர்மூழ்கிகளும் போர்க்கப்பல்களும் அடிக்கடி இலங்கைக்கு வருவதும் கொழும்புத்துறை முகத்தில் சீன உதவியில் கட்டப்பட்ட துறைமுக கொள்கல முனையில் தங்கியிருந்துவிட்டு செல்வதும் நாம் முன்னொரு சமயம் இப்பத்திகளில் சுட்டிக்காட்டியிருந்தமை போன்று ஏனைய வல்லரசு நாடுகளின் சந்தேகம் கலந்த கவனத்தைத் திருப்பியிருப்பது இப்போது வெளிப்பட்டுள்ளது. வெளிப்பட்டிருப்பது மட்டுமல்ல உடனடியாகவே எதிர்விளைவொன்றையும் ஏற்படுத்தியிருக்கின்றது.*

*இதன்படி இந்துமாக்கடலில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சியை மேலும் விரிவாக்குவது ஒரு புறமிருக்க இந்த இருநாடுகளும் இணைந்து நடத்துகின்ற மலபார் போர்பயிற்சியில் அணுசக்தி நீர்மூழ்கிகளையும் விமானம் தாங்கி போர்க்கப்பல்களையும் இணைத்துக் கொள்வதற்கு முடிவுசெய்துள்ளன என்று செய்திவந்திருக்கிறது. இந்தப் பயிற்சிகளில் வேறு பல நாடுகளும் இணைத்துக் கொள்ளப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சீனாவானது கீழ்த்திசையில் பொருளாதாரத்துறையில் மிகவேகமாக வளர்ந்துவரும் நாடு என்ற வகையில் அந்த நாட்டுடன் இலங்கை நட்பை வளர்த்து பயன்பெறுவது ஒருவிடயம் - அது வரவேற்கத்தக்கது. ஆனால் அந்தத் தொடர்பானது ஏனைய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக - அல்லது ராஜதந்திர முறையில் மறைமுகமாக நெருக்குதல் கொடுப்பதாக அமையுமானால் அதேவித எதிர்விளைவுகளை ஏனைய நாடுகளிடமிருந்தும் இலங்கை எதிர் பார்த்தாக வேண்டும். சீன நீர்மூழ்கிகளின் இலங்கை வருகையும் அமெரிக்க - இந்திய போர்ப்பயிற்சிகள் விரிவாகி அணு நீர்மூழ்கிகளும் விமானந்தாங்கிக் கப்பல்கள் அதில் இணைத்துக்கொள்ளப்பட இருப்பதும் இதனை இடித்துக்காட்டுகின்றன.*

*அண்மையில் சீன அதிபர் ஸி ஜின் பிங் இலங்கைக்கு வருகை தந்த சமயத்திலும் சீன நீர் மூழ்கியும் போர்க் கப்பலும் கொழும்புக் துறைமுகத்துக்கு வந்து தரித்திருந்துவிட்டு சென்றுள்ளன. இப்பொழுது மீண்டும் வந்து திரும்புகின்றன. இன்னொரு முறையும் அவை வருவதற்கு இலங்கை கடற்படையினர் அனுமதியளித்திருக்கிறார்கள். இது குறித்து இந்திய அரசு இரண்டு முறை தனது கவலையை வெளியிட்டிருப்பதாகத் தெரிகின்றது. ராணுவ மட்டத்திலும் சீனாவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு தீவிர கவனம் செலுத்தப்படுவதன் நோக்கத்தில் பல காரணங்கள் இருக்கலாம். முக்கிய இரண்டு காரணங்கள் பின்வருமாறு ஊகிக்கப்படுகின்றன.*

*ஒன்று: இலங்கை தமிழர் சார்பில் இந்திய அரசு காட்டிவரும் - இனி காட்டக்கூடிய அக்கறைகளுக்கு எதிரான ஓர் அச்சுறுத்தலாக இதனை பிரயோகித்தல். இரண்டு: போர்க்குற்றம் தொடர்பாக அமெரிக்கா முன்னின்று ஐ.நா. மனித உரிமைகள் சபை மூலம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதற்கு ஒரு பாடம் புகட்டுவது அல்லது அந்த செயற் பாட்டிலிருந்து அமெரிக்காவை பின்னடையச் செய்வது.*

*இதுவரை காலமும் சீன கலாசாரம், அரசியல் மற்றும் சமய விழுமியங்கள் இந்திய பெருநிலத்தையோ அண்டை நாடுகளான இலங்கை, மியன் மார், பாகிஸ்தான் போன்ற நாடுகளையோ பெரிய அளவில் பாதித்திருக்கவில்லை. மாறாக இந்திய கலாசார, சமய, பொருளாதார விழுமியங்களே ஏனைய நாடுகளில் இயல்பான முறையில் வேரூன்றியுள்ளன. குறிப்பாக இலங்கையின் வாழ்க்கை முறைகள், உணவுகள், நடை உடைகள் மற்றும் கலை கலாசார சமய விழுமியங்கள் இந்தியாவிலிருந்து வந்துள்ளன. இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்களவரின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து போயுள்ள சமயமும் சமூகக்கோட்பாடுகளும் இந்தியாவில் இருந்து வந்தவையே. அந்த இடத்தில் சீனாவிலிருந்து எதுவும் வந்து நிலை பெற்றதுமில்லை நிலைபெறப்போவதுமில்லை.*

*சீனாவின் நிலவும் அரசியல் முறையும்கூட இலங்கைக்கு ஒத்துவர முடியாதது. அம்மாதிரியான முயற்சிகளை இந் நாட்டு மக்கள் புறந்தள்ளியுள்ளார்கள். எனவே இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு சீன வல்லரசை வலிய அழைப்பதன் மூலம் இப்பகுதி யில் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளுக்கு இலங்கை காரணமாக இருந்து விடலாகாது. சுயநல நோக்கோடு ராஜபக்ஷ அரசு மேற்கொள்ளும் இவ்வித செயற்பாடுகள் நாட்டையும் நாட்டு மக்களையும் சிக்கலில் மாட்டிவிடலாகாது என்பதே பொதுவான கவலை. இந்துமாக்கடல் பகுதியில் அணு ஆயுத நாடுகளுக்கு இடையில் மோதல் ஒன்று ஏற்படுமானால், இலங்கை நாடு இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும் அந்த மாதிரியான ஒரு நிலைக்கு நாடு செல்லாது என நம்புவோம்.*

# சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் விடயம் அரசின் சரிவுக்கு வழிவகுக்குமா?

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்:வீ.எஸ்.ரீ

அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் துரோவால், சீன நீர்மூழ்கிக் கப்பலை இலங்கையில் தரிக்க அனுமதித்தமை இந்தியாவின் பாதுகாப்புக்கு விடுக்கப்படும் ஓர் அச்சுறுத்தலாகக் கருதுகிறோம் எனத் தெரிவித்திருந்தார். அது ஓர் அபாய அறிவிப்பு எனக் கொள்ளப்பட்ட நிலையில் சில வாரங்களின் பின்னர் மீண்டும் சீன நீர்மூழ்கிக் கப்பலொன்று இலங்கையில் தரித்துச் சென்றுள்ளது. இது இந்திய அரசை மேலும் குழப்பத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

குறித்த சம்பவங்கள் குறித்து இந்தியாவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' கீழ்க் கண்டவாறு விமர்சித்திருந்தது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த, சீன நீர்மூழ்கிக் கப்பலை இலங்கையில் தரிக்க அனுமதித்ததன் நோக்கம் என்னவென இந்திய அரசு கவனம் செலுத்திய பின்னணியில், வியட்நாம் பிரதமர் இந்தியாவுக்கான தமது பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய தினத்துக்கு மறுநாள் சீன நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றுள்ளது. ஏற்கனவே இந்திய பாதுகாப்பு ஆலோசகரால் இலங்கை பாதுகாப்புச் செயலரிடம் சீன நீர்மூழ்கிக் கப்பலை இலங்கையில் தரித்துச் செல்ல அனுமதி வழங்கியமை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இந்தியத் தரப்பால் இது குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் இவ்விதம் மீண்டும் சீன நீர் மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டமை, தமக்கு எதிரான எதிரித்தனத்தை வெளிப்படுத்தும் இலங்கையின் முனைப்பை வெளிப்படுத்துகிறதா என இந்தியாவைச் சிந்திக்க வைத்துள்ளது.

இலங்கையின் இத்தகைய செயற்பாடு 1987ஆம் ஆண்டின் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை மீறும் வகையிலானதொன்று. திருகோணமலையையோ அல்லது இலங்கையின் வேறெந்தத் துறைமுகத்தையோ இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் போர் ரீதியில் பயன்படுத்துவதற்கு வேறு எந்தவொரு வெளிநாட்டுக்கும் இடமளிக்கப்படலாகாது என அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு இந்தியாவும் இலங்கையும் தத்தமது நிலப்பரப்பை தமது தனித்துவம், பூகோள அமைப்பு, இறையாண்மை, பாதுகாப்பு என்பவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் வேறெந்த அதிகாரத் தரப்புகளும் பயன்படுத்த இடமளிக்கப்படலாகாது எனவும் அந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது என இந்திய இலங்கை வெளியுறவுக் கொள்கைப் பகுப்பாய்வாளரான புறுக்மா வேலதி சுட்டிக்காட்டி யுள்ளார். அத்துடன் இந்தியாவின் எதிர்ப்பையும் கணக்கில் எடுக்காது இலங்கை அரசு இரண்டாவது தடவையாகவும் சீன நீர்மூழ்கிக் கப்பலை இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதித்தமை பயங்கர விளைவுகளை ஏற்படுத்துமென்று அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் இவ்விடயத்திலுள்ள பயங்கரத்தனத்தை எவரும் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை இந்த விடயத்தில் தவறிழைக்கின்றது. இந்த விடயத்தில் ராஜபக்ஷ தரப்பினர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். இந்தியாவின் முன்னாள் செயற்துணிவற்ற பிரதமர் போன்றே இன்றைய பிரதமரும் உள்ளதாக ராஜபக்ஷ தரப்பினர் எண்ணுகின்றனர். அது தவறான கணிப்பீடாகும் என அந்த வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் தெரிவித்துள்ளார் என அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அப்படியானால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீறிச் செயற்படும் இலங்கை அரசு மீது இந்தியாவால் நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாதா? என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. ஏன் இயலாது? தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறி இந்திய இராணுவத்தையோ அல்லது போர்க் கப்பல்களையோ அனுப்ப ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு உரிமை உள்ளது. அவ்வாறானால் இனியும் ஒரு தடவை இவ்விதம் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வர அரசு அனுமதிக்குமானால் இந்தியா தனது போர்க் கப்பல்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கக் கூடுமா என்பது குறித்து மஹிந்த சிந்தித்தாக வேண்டும்.

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வியட்நாமுக்கு அரசு முறைப்பயணம் மேற்கொண்டதாலேயே முதலாவது தடவையாக சீன நீர்மூழ்கிக் கப்பலொன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என இந்தியா கூறுகிறது. சீனா தனது சண்டித்தனத்தை வெளிப்படுத்தும் வட்டகையிலுள்ளதொரு நாடே வியட்நாம் ஆகும். அந்த வட்டகையிலுள்ளதொரு நாட்டுக்கு இந்திய அரசுத் தலைவர்கள் செல்லும்போது அதனைப் பொறுத்துக்கொள்ள இயலாத சீனா, இந்தியாவுக்குத் தனது சண்டித்தனத்தை வெளிப்படுத்தும் குறியீடாக தென்ஆசிய வட்டகையிலுள்ள நாடான இலங்கைக்கு நீர்மூழ்கிக் கப்பலை அனுப்பி வைக்கிறது. அதேபோன்று இம்முறை வியட்நாம் நாட்டுப் பிரதமர் இந்தியாவில் அரசு முறைப் பயணம் மேற்கொண்ட வேளையில் சீனா இலங்கைக்குத் தனது நீர்மூழ்கிக் கப்பல்களில் இரண்டை அனுப்பி வைத்துள்ளது என இந்திய அரசு கூறுகிறது. அதாவது சீனாவின் எல்லைக்குள் பிரவேசிக்க வேண்டாமென சீனா சமிக்ஞை விடுக்கிறது எனவும் இந்தியா கருதுகிறது. அப்படியானால் சீனா தனது சண்டித்தனத்தை இந்தியா மீது காட்டுவதற்கு எதற்காகப் போய் இலங்கை தனது தலையைக் கொடுக்க முனைகிறது என்ற கேள்வி எழுவதும் இயல்பே.

மஹிந்த பிரதமராகப் பதவி வகித்த வேளையில்தான் தென்கொரியாவுடன் மஹிந்தவுக்கு நெருங்கிய நட்பு உருவானது. 2004 சுனாமி இடரின் பின்னர், பேரழிவுக்கான நிவாரணங்களை வழங்க அந்த வேளையில் தென்கொரியாவின் வெளிநாட்டு அமைச்சராக இருந்தவரும், தற்போதைய ஐ.நா. பொதுச்செயல ருமான பான் கீ மூன் இலங்கைக்கு வந்தபோது அழிவு களைப் பார்வையிட மஹிந்தவுடன் ஹம்பாந்தோட் டைக்குச் சென்றிருந்தார். ஐ.நா. பொதுச் செயலாளர் பதவியை அடைய பான் கீ மூனுக்கு உதவும் விதத்தில் அதற்கான வேட்பாளராக இலங்கை சார்பில் எவரை யும் நிறுத்தாமல் உதவ ஜனாதிபதி சந்திரிகாவை இணங்கச் செய்வதாக மஹிந்த அவ்வேளையில் பான் கீ மூனுக்கு ஹம்பாந்தோட்டையில் வைத்து வாக்குறுதி வழங்கியிருந்தார். அவ்வேளைய வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரூடாக ஏதோ வகையில் மஹிந்த தனது அந்த உறுதி மொழியை நிறைவேற்றி உதவினார். இதனால் இலங்கைக்கு தென்கொரியா வின் உதவி ஒத்தாசைகள் அதிகரித்தன. போரின் இறுதி நாள்களில் ஐ.நா. செயலாளர் நாயகத்தை மௌனம் காக்கவைத்து இலங்கை அரசுக்கு ஆதரவளிக்க வைக்க மஹிந்தவின் பான்கீ மூனுடனான அந்த நெருக்கமே காரணமென மனித உரிமை அமைப்புக்கள் அந்த வேளையில் குற்றஞ்சாட்டியிருந்தன. அந்த அளவுக்கு தென்கொரியாவுடனான மஹிந்தவின் உறவு பலம் வாய்ந்ததொன்றாக விளங்கியது. ஆனால் சீன நீர் மூழ்கிகள் இலங்கைக்கு வந்தமை காரணமாக தற்போது தென்கொரியாவும் குழப்பம் அடைந்துள்ளது.

அண்மையில் ஜப்பான் பிரதமரின் இலங்கைக்கான பயண வேளையில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வரவிருப்பதான செய்தியால் ஜப்பான் அரசு குழப்பமடைந்தது. ஜப்பான் பிரதமரின் பயணத்தையடுத்து சீன ஜனாதிபதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. சீன நீர்மூழ்கிக் கப்பல்களை இலங்கைக்கு கொண்டு வந்ததன் மூலம் ஜப்பான் பிரதமரின் இலங்கைக்கான பயணம் பெறுமதியற்றதாக்கப்பட்டதாக ஜப்பான் அரசு கருதியதாகக் குற்றச்சாட்டும் உண்டு.

**சீன நீர்மூழ்கிக் கப்பல்களை இலங்கைக்கு கொண்டு வந்ததன் மூலம் ஜப்பான் பிரதமரின் இலங்கைக்கான பயணம் பெறுமதியற்றதாக்கப்பட்டதாக ஜப்பான் அரசு கருதியதாகக் குற்றச்சாட்டும் உண்டு.**

சீன நீர்மூழ்கிக் கப்பல்களை இலங்கைக்கு வர அனுமதித்ததன் மூலம் இலங்கை இந்தியாவைப் பகைத்துக் கொண்டது மட்டுமன்றி சர்வதேச ரீதியிலான பிரச்சினைகளில் இலங்கைக்கு ஆதரவளிக்கும் ஏனைய ஆசிய நாடுகளின் அதிருப்தியையும் தேடிக்கொண்டுள்ளது. இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் சீனாவின் இந்த பாம்பு நடனத்தை அமெரிக்கா சந்தேகக் கண்ணுடனேயே அவதானித்து வருகிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களின்போது இந்த ஆசிய வட்டகை நாடுகள் மட்டுமன்றி சுவிற்சர்லாந்து உட்பட மேற்குலக நாடுகள் சிலவும் இலங்கை அரசுக்கு ஆதரவாக செயற்பட்டன. அந்தவேளையில் இலங்கை அரசுக்காக முன்னின்று குரல்கொடுக்க முடியாதிருந்த சீனாவை இன்று இலங்கை அரசு தலைக்குமேல் தூக்கி வைத்துக்கொண்டாடுவதை அதிருப்தியுடன் நோக்கும் அந்த நாடுகள் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க தற்போது இலங்கை அரசு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த ஆண்டின் முற்பகுதில் ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வந்த பிரேரணைக்கு ஜப்பான், பிலிப்பைன்ஸ், இந்தியா ஆகிய நாடுகள் மௌனம் காத்தன. தென்கொரியா பிரேரணைக்கு ஆதரவளித்தமைக்கான காரணத்தை இலங்கை அரசால் அனுமானிக்க முடியவில்லை. சீனாவைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடும் இலங்கை அரசுக்கு ஒரு பாடம் படிப்பிக்கும் நோக்கமாகவும் அது இருந்திருக்கக்கூடும்.

இன்று இலங்கை அரசு தொடர்பாக அமெரிக்கா எதிர்பார்க்கும் சூழலை சீன நீர்மூழ்கிகளை இலங்கை வர அனுமதித்ததன் மூலம் மஹிந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலங்கையின் நட்பு நாடுகளாகவிருந்தவை இன்று எதிரி நாடுகளாக ஆகியுள்ளன. மஹிந்த அரசு வட்டகையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக ஆசிய நாடுகள் சிந்திக்கத் தொடங்குமானால் இலங்கை அரசின் சரிவு அரசு எதிர்பாராத விதத்தில், எதிர்பாராத வேளையில், இடம்பெற்றுவிட்ட கொஸ்லந்த மண்சரிவு போன்றதாக அமையவும் இடமுண்டு.

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்.

# பண்பினால் உயர்ந்த கல்விமான்

**முன்னாள் துணைவேந்தர் அ.துரைராஜாவின் 80ஆவது ஜனன தினத்தை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

பேராசிரியர் அழகையா துரைராஜாவின் எண்பதாவது ஜனன தினத்தை மனங்கொள்ளும் இந்தநாளில் (10.11.1934) அவ்ரது ஆளுமைகள் நினைவு கூரப்படவேண்டியது அவசியமானது. இன்றைய சூழலில் இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் நினைவு கொள்ள வேண்டிய பேராசானாக துரைராஜா காணப்படுகின்றார். காரணம் அவரது தோற்றம், நடத்தை தலைமைத்துவம், மரபுகளை மதிக்கும் மனோநிலை என்பன மறக்கவே முடியாதவை.

"ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்" என்றான் மகாகவி பாரதி. அதன்படி வாழ்ந்து முடித்தவர் எங்கள் பேராசிரியர் என்பது தமிழ் சமூகத்துக்கு பெருமையான அம்சமாகும். எந்தக் காலத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உழைப்பினை உயர்வாகக் கருதும் துரைராஜா யாரும் தலைசாய்ந்து வாழ்ந்ததை காணவே முடியாது. அவரது தோற்றத்தின் விகசிப்புக்கு அமைய நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை என்ற தமிழ்பண்பாட்டின் அடி நின்று வாழ்ந்தவர்.

ஆயுதப்போராட்ட சூழலும் இராணுவக் கெடுபிடியுமுள்ள காலத்தில் யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக பணிபுரிந்தவர். எந்தத் தரப்பையும் மதிப்பளிக்கும் அதேவேளை தனது மாணவர்களுக்கோ, பல்கலைக்கழகத்திற்கோ துன்பம் நேரும் போது மௌனித்திருக்கமாட்டாதவர். எவரையும் இலகுவில் நிராகரிக்க மாட்டார். அதே நேரம் சுய கௌரவத்துக்கும் தன்மானத்துக்கும் இழுக்கு ஏற்பட்டால் பொறுத்திருக்கவும் மாட்டாதவர். இவரை காணும் இராணுவமோ ஆயுதப் பிரிவினரோ அவருக்கு மதிப்பளிக்கத் தவறுவதில்லை.

அன்றைய (1988-1989) யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சூழல்மிக கெடுபிடியானது. இளைஞர்களை கட்டாய இராணுவ ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகளில் சில ஆயுதப் பிரிவினர் செயற்பட்டனர். வீதி வீதியாக சென்று இளைஞர்களை கைதுசெய்து கட்டாயப் பயிற்சி வழங்குவதில் முனைப்பாக இருந்தனர். இதன் போது பல பல்கலைக்கழக மாணவர்களும் அத்தகைய ஆயுதக் குழுக்களால் கைதுசெய்யப்பட்டனர். அப்போதெல்லாம் பேராசிரியர் ஒவ்வொரு ஆயுதப் போராட்ட குழுக்களின் முகாம்களுக்கு அலைந்து தனது மாணவர்களை மீட்டுவருவார். மரணத்தின் விளிம்பில் கூட மாணவர்களை பேராசிரியர் பாதுகாத்தமை அக்காலத்தில் மாணவர்களாக இருந்த எம்மவரின் அனுபவமாகும்.

அவர் துணைவேந்தராகப் பணிபுரியும் காலத்தில் கூட அவரை அவரது தோட்ட மண் வெட்டியுடன் தோட்டத்தில் காணலாம். ஒரு தடவை பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களுடன் துணைவேந்தரை சந்திப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்றபோது, தோட்ட மண்வெட்டியுடன் வெங்காயப் பாத்திகளுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்ததை நேரடியாக பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதுதான் அவரது 'மண்ணியல் கோட்பாட்டின்' அடிப்படையை அவர் எப்படி உருவாக்கியிருப்பார் என்பது புரிந்தது. எப்போது கோட்பாட்டின் தந்தையர்கள் அந்தக்கோட்பாட்டுக்கான வாழ்ந்த சரித்திரத்தை மேற்கு நாடுகளில் கோட்பாட்டாளர்களிடம் படித்துள்ளோம்! ஆனால் அதனை எங்கள் துணைவேந்தர் செய்து காட்டிய சரித்திர பூர்வமான சம்பவம் மனநெகிழ்வைத் தந்தது. அது மட்டுமல்ல அவரது வீட்டின் திண்ணையில் இருந்து தேநீர் அருந்தியது வரை இன்றும் மனக் கண்முன் பதிவுகளாக உள்ளன. அவ்வளவுக்கு அவரது எளிமையும் மதிப்பும் கொண்ட உயர்ந்த மனிதன்.

இன்றைய நாள் ஒரு பொன்னானநாள். பேராசிரியர் துரைராஜா அவர்களின் எண்பதாவது ஜனன தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நிகழ்கிறது. இந்த பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்திருக்கும் மாணவர்களும், அவர்களது பெற்றோரும் பல்கலைக்கழக சமூகமும் சுமந்து செல்ல வேண்டிய ஓர் உயர்ந்த உள்ளம் பேராசிரியர் துரைராஜா என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவரது எண்ணம், மனோநிலை, அறிவு, விசாலமான திறன் என்பவை எப்போதும் தமிழ் சமூகத்தினால் நினைவு கூரப்பட வேண்டியது அவசியமானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் பேராசிரியர் அவர்களின் நினைவுகளைச் சுமக்கும் காட்சியகம் ஒன்று நிறுவி அவரது வாழ்வை பொக்கிஷமாக்குதல் வேண்டும்.

# சமாதான அபிவிருத்திக்கான உலக விஞ்ஞான தினம்

குமாரசாமி யோகன்ராஜ்

**உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

இன்று சமாதான அபிவிருத்திக்கான உலக விஞ்ஞான தினமாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக உலகில் பல மாற்றங்கள் இடம் பெற்று வருவதை எம்மால் காணக்கூடியதாகவுள்ளது. உலக வல்லரசு எனத் தன்னை அடையாளப்படுத்திய அமெரிக்கா விஞ்ஞான வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏனைய உலக நாடுகளைவிட முன்னிலை வகிக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியானது ஆக்கத்துக்கு மட்டுமன்றி அழிவுக்கும் பயன்படுத்தப்பட்டு விட்டதுதான் கவலைக்குரிய விடயம்.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தை உலகம் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும். ஏனெனில் இந்த மாதம் தான் கௌரவம் மிக்க நோபல் பரிசு பற்றிய அறிவிப்புக்கள் வெளியாகும். சுவீடன் தேசத்தின் சிறந்த இரசாயன ஆய்வாளரும் வியாபார விற்பன்னருமான அல்பிரட் நோபல் உடைய பெயரால் இந்தப் பரிசு வழங்கப்படுகின்றது. மனித குல மேம்பாட்டை மனதில் கொண்டு நடைபெறும் ஆக்கப்பணிகளில் பௌதிகம், இரசாயனம், உடற்றொழிலியல் அல்லது மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் ஆகிய ஐந்து துறைகளுக்கு வழங்கப்படுகின்றது. இதில் சமாதானத்துக்காக வழங்கப்படுகின்ற நோபல் பரிசு உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும் கோடான கோடி மக்களின் வாழ்க்கைக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும் வழங்கப்படுகின்றது. உலக மயமாக்கலினால் இன்று உலகம் சுருங்கிவிட்டது. உலக நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் அதிகரித்து விட்டன. மிகக் குறுகிய நேரத்தினுள் உலகின் ஒரு மூலையில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொள்ளமுடிகின்றது. நாடுகளின் பொருளாதார, சமூக, அரசியல், கலாசார தொடர்புகள் ஏற்பட்டமையினால் உலக நாடுகள் தமக்குள் இவ்விடயங்களை பரிமாறிக் கொள்ள முடிகிறது. இந்த உலக மயமாக்கலினை பல தீமைகள் ஏற்பட்டாலும் நன்மைகளும் ஏற்படுகின்றன. உலக நாடுகள் குறிப்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு ஆயுத உற்பத்திகளிலும் அணு ஆயுத உற்பத்திகளிலும் விண்வெளிக்காக விண்ஓடங்களைச் செலுத்துவதிலும் போட்டி போடுகின்றன. குறிப்பாக உலக வல்லரசான அமெரிக்காவை சவால் விடும் அளவுக்கு ஏனைய நாடுகள் தமது ஆக்கத்திறமைகளை வெளிக்காட்டி வருவதுடன் உலக அரங்கில் ஓர் அச்சுறுத்தல் மிகுந்த ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளன. இது உலக சமாதானத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. பல நாடுகள் தமது பாதீடுகளில் (Budjct) கூடுதலான சதவீதத்தை பாதுகாப்புக்காக ஒதுக்குகின்றன. கல்வி, சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளுக்கு குறைந்த சதவீத நிதி ஒதுக்கீடே மேற்கொள்ளப்படுகின்றது. எத்தனையோ கோடி மக்கள் உண்ண உணவின்றி அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அந்த நாடுகள் கூடுதலான பணத்தை போருக்காக பாதுகாப்புச் செலவினம் என்ற அடிப்படையில் ஒதுக்குகின்றன. சமாதானத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. $E=MC^2$ என்ற சமன்பாட்டைக் கொண்டு அணுகுண்டைத் தயாரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட அல்பேட் ஜன்ஸ்ரீன் கூட 1945 ஆம் ஆண்டு ஹிரோசிமா நாகசாகி ஆகிய இரு நகரங்கள் மீது நடத்தப்பட்ட அணுகுண்டுத் தாக்குதலால் மனித குலத்துக்கு ஏற்பட்ட [illegible]ரழிவைக் கண்டு மனம் வருந்தினான். அணுவை ஆக்கத்துக்கு பயன்படுத்த வேண்டும் எனவும் அழிவுக்கு பயன்படுத்தக் கூடாது எனவும் விரும்பி அமைதிக்காகப் பாடுபடத் தொடங்கினார். இதே போன்று 'ஆயுதங்களைக் கீழே வை' என்னும் நூலை எழுதி ஐரோப்பிய அமைதி இயக்கங்களில் பிரசித்திபெற்ற ஒருவரான பேர்த்தா அவ்வப்போது அமைதிச் செயற்பாடுகளுக்கென நோபலிடம் பண உதவியும் பெற்றார். 1905 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு பேர்த்தாவுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கவை. 1973 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல்பரிசு வியட்நாமியத் தலைவர் லி டியூக் தோவுக்கும் அமெரிக்க தரப்பில் ஹென்சி சீஸிங்கருக்கும் வழங்கப்பட்ட போது எதிர்ப்புக் கிளம்பியது. அமெரிக்கக் குண்டுகளால் வியட்நாமில் மக்கள் குருதி சிந்தி அதன்வாடை அகல்வதற்கு முன்னர் அமெரிக்கா பரிசு பெறுவதை வியட்நாமியத் தலைவர் நிராகரித்தார். இவ்வாறு உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விஞ்ஞானத்தின் அபரிமித வளர்ச்சியானது ஜன்ஸ்ரீன் எதிர்பார்த்தது போல் அழிவுக்கு பயன்படாமல் ஆக்கத்துக்குப் பயன்படுத்தப்படுமானால் கோடான கோடி மக்களின் வாழ்வு செழிக்கும். ஆனாலும் உலகில் தங்களை வல்லரசு என அடையாளப்படுத்தும் நாடுகள் தமக்குள் ஏற்பட்ட அதிகாரப் போட்டியினாலும் பிராந்திய வல்லாதிக்கப் போட்டிகளினாலும் போட்டி போட்டுக் கொண்டு அழிவு தரும் நவீன ஆயுதங்களைத் தயாரிப்பதில் முனைப்புக் காட்டுகின்றன. இதனால் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொது மக்களாகும். அறிவியல் விருத்தி அழிவுக்குப் பயன்படுவதை ஆன்மிகவாதிகள் எதிர்த்தாலும் அதனை உலக வல்லரசுகள் கண்டு கொள்வதாக இல்லை. அந்த நாடுகளின் தன்னாதிக்க அதிகார வெறி [illegible] விருத்தி அடைந்து வரும் வறிய நாடுகளையும் அங்கு வாழ்க்கைக்காகப் போராட்டம் நடத்தும் மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கும். எனினும் மருத்துவத்துறையில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி உலக மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தியுள்ளது. எனவே சமாதான அபிவிருத்திக்கான உலக விஞ்ஞான தினத்தை உலகெங்கும் அனுசரிப்பதன் நோக்கம் விஞ்ஞானம் சமாதானத்துக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே. இதுவே உலகிலுள்ள கோடானகோடி மக்களின் மிகுந்த எதிர்பார்ப்புமாகும்.

## இது மரநடுகை மாதம்

# தல விருட்சங்களான மரங்கள்



ராஜராஜன்

நீர் இல்லாது வாடிய நிலையில் காணப்படும் மரங்களைக் கண்டு வாடிப்போவாராம் வள்ளலார் என அன்புடன் அழைக்கப்பட்ட இராமலிங்கம் வள்ளலார் ஏனைய உயிர்கள் மீது காட்டிய பரிவையும், பாசத்தையும் மரங்களின் மீதும் காட்டினார் வள்ளலார்.

அன்றைய நாள்களில் மனிதர்கள் மரங்களைக் கூடத் தெய்வமாக வணங்கியிருக்கிறார்கள். காலப்போக்கில் மரங்களை மையமாகக்கொண்டு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இவை தல விருட்சமெனப் போற்றப்பட்டன. ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவனுக்கு நிகரான மதிப்பு இந்த விருட்சங்களுக்கு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மனித உடலுக்குக் கனிகள் வளம் சேர்க்கின்றன. நாம் ஆரோக்கியமாகவும், நீண்ட நாள்களாகவும் வாழ வேண்டுமானால் கனிகளை உண்ணுதல் வேண்டும். தேவலோகத்தில் கூட இந்தக் கனிகளில் ஒன்றான மாங்கனியைப் பெறுவதற்கு சகோதரர்களான கணபதியும், முருகனும் போட்டியிட்டதாக ஒரு கதையுண்டு. ஆகவே கனிகளின் முக்கியத்துவம் இதன் மூலமாக எமக்குத் தெரிகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கனிகள் மரங்கள் மூலமாகவே எமக்குக் கிடைக்கின்றன.

இன்றைய நவீன உலகிலே சமையல் வேலைகளை இலகுவாகவும் எளிதாகவும் நிறைவேற்றும் பொருட்டு எரிவாயு மூலமாக இயங்கும் அடுப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் சாதாரண மக்கள் தமது சமையல் வேலைகளுக்கு விறகையே பயன்படுத்துகின்றனர். இத்தகைய விறகை மரங்களே வழங்குகின்றன. தாம் தீயில் எரிந்துவெப்ப சக்தியைக் கொடுக்கும் உன்னதமான பண்பு மரங்களுக்கு உண்டு. மரங்கள் நகர்ந்து செல்லும் இயல்பைக் கொண்டிருக்காமையால் அவற்றை வளர்த்தெடுப்பது இலகுவாக உள்ளது. ஏனைய உயிர்களைப் போன்று ஓரறிவு படைத்த மரங்கள் நடமாடிச் செல்லுமாயின் அவற்றை வளர்த்தெடுப்பதற்கு எவருமே முன்வரமாட்டார்கள்.

எமக்கு என்னதான் களைப்பு வந்திட்டாலும் அடர்ந்த மரங்களைக் கொண்ட சோலைக்குள் சென்று களைப்பாறும்போது எல்லாத் துன்பங்களும் மறைந்து போய்விடும். மனதுக்கு ஆறுதலும் கிடைக்கும்.

ஆகவேதான் மனிதர்களுக்குப் பல்வேறு வகையிலும் பயன்படும் மரங்களைப் பேணிக் காப்பது எமது ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாகும். எமது வீட்டிலுள்ள மரங்களை நாம் எமது பிள்ளைகளைப் போன்றே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இன்று தெருவோரங்களில் காணப்படும் மரங்களில் விளம்பரப் பலகைகள் ஆணிகொண்டு அறைந்திருப்பதைக் காண்கின்றோம். இதுவொரு தவறான செயலாகும். இத்தகைய செயல்கள் அந்த மரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யுமென்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது வழ்வோடு பின்னிப்பிணைந்து எமக்கு உதவிபுரிந்துவரும் மரங்களை என்றென்றும் பாதுகாப்போம். நன்மை பெறுவோமென நாம் ஒவ்வொருவரும் உறுதிமொழி பூணுவோம்.




## நீதிகோரி ஐ.நா.சபை முன் சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம்




நியூயார்க். நவ.10
இந்தியாவில் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஐ.நா.சபை முன் சீக்கியர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கடந்த 1984 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் சீக்கியர்களுக்கு எதிராகக் கலவரம் வெடித்தது. அந்தக் கலவரத்தில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் 30 ஆவது நினைவு தினத்தையொட்டி அமெரிக்காவில் வாழும் சீக்கியர்கள் ஐ.நா.சபையை நோக்கிப் பேரணி நடத்தினர்.

நீதிக்கான சீக்கியர்கள் மற்றும் நவம்பர் 1984 சீக்கிய இனப் படுகொலை ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சீக்கியர்கள், நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. சபையின் தலைமை அலுவலகத்துக்கு பேரணியாகச் சென்றனர். பின்னர் அவர்கள் ஐ.நா. சபைக்கு வெளியே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். (வ)



உத்தரப் பிரதேச மாநிலம், வாரணாசியில் கங்கை நதிக்கரையில் உள்ள அஸ்ஸி காட் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற 'தூய்மை இந்தியா' திட்டப் பணியில் கையில் மண்வெட்டியுடன் பங்கேற்ற பிரதமர் மோடி.

## கடலோரக் காவல்படைக்கு ஏ.சி.வி.ரக ரோந்து படகுகள்

டில்லி.நவ.10
இந்தியக் கடலோர காவல் படையினரால் வாங்கப்பட்ட எச்-196 மற்றும் எச்-198 என்ற இரு ஏ.சி.வி. ரக ரோந்துப் படகுகளை கர்நாடக மாநில ஆளுநர் வஜுபாய் ருதாபாய் வாலா பனம்பூர் அருகே கடலோர காவல் படை வளாகத்தில் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இது குறித்து இந்திய கடலோர காவல் படையின் டி.ஐ.ஜி. மற்றும் கர்நாடக மாநில தளபதி ராஜாமணி ஷர்மா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:

கடலோர காவல் படையில் உள்ள 4 ரோந்து பணி கப்பல்களுடன் இணைந்து இந்த ஏ.சி.வி.க்கள் பணியாற்றும். 21 மீற்றர் நீளமும், 31 தொன் எடையும் கொண்ட இந்த ஏ.சி.வி. ரக ரோந்து வாகனங்கள் 45 நாள் வேகம் வரை செல்லும் திறன் கொண்டது. பல்வேறு பணிகளான கண்காணிப்பு, எதிரி வாகனங்களை தாக்கி அழித்தல், தேடுதல் மற்றும் மீட்பு மற்றும் சிறு படகுகள் மற்றும் கப்பல்களுக்கு தேவையான உதவிகளைச் செய்யும் திறனை இது பெற்றுள்ளது.

இந்த ரோந்து வாகனம் நிலம் மற்றும் கடல் பகுதிகளில் இயங்கக் கூடியது. இதன் மேல் பகுதியில் உள்ள இரு புரப்பல்லர்கள் உருவாக்கும் காற்று அலைகளை கொண்டு நீரின் மேற்பரப்பில் இயங்குகிறது. இந்த வாகனத்தில், அதிக சக்தி கொண்ட இயந்திர துப்பாக்கிகள் மற்றும் நவீன தொலைதொடர்பு மற்றும் ரேடார் மற்றும் உலகம் முழுமைக்கும் தொடர்பு கொள்ள ஏதுவான செயற்கைக் கோள் உள்ளிட்ட இயங்கும் சாதனங்கள் உள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



# மீனவர்கள் பிரச்சினையில் பா.ஜ.க.மெத்தனப்போக்கு

## ஜி.கே.வாசன் குற்றச்சாட்டு

இராமேஸ்வரம், நவ.10
மீனவர் பிரச்சினை மோசமடைய பா.ஜ.கவின் மெத்தனப் போக்கு தான் காரணம் என்று வாசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேரை மீட்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகின்றன. மீனவர்களின் சொந்த ஊரான தங்கச்சிமடத்தில் கடந்த ஒரு வாரமாக பல்வேறு அரசியல் கட்சிகள் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றன.



இந்தநிலையில், சமீபத்தில் காங்கிரஸில் இருந்து விலகி, புதிய இயக்கம் தொடங்க இருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் நேற்று முன்தினம் தங்கச்சிமடத்துக்கு சென்றார். போராட்ட பந்தலில் அமர்ந்திருந்த மீனவர்களைச் சந்தித்தவாசன், பின்னர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 5 மீனவர்களின் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி, அவர்களது .குடும்பத்துக்கு தலா ரூ.20 ஆயிரம் நிதி வழங்கினார்.

அதன் பின் அங்கு கூடியிருந்த மீனவர்கள் மத்தியில் பேசிய வாசன் ;

"கடந்த 4 தினங்களுக்கு முன் தாய் கட்சியான காங்கிரஸில் இருந்து விலகினேன். அதைத் தொடர்ந்து தனி இயக்கம் ஆரம்பிக்க இருக்கிறேன். கட்சிக்கான பெயர், கொடி, ஆரம்ப கூட்டம் என அதிகமான பணிகள் இருந்தாலும் தமிழகத்தில் தற்போது தலையாய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கும் மீனவர் பிரச்சினைக்காக முன்னுரிமை கொடுத்து இங்கு வந்துள்ளேன்.

மீனவர் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை எந்த அரசும் செய்யவில்லை. நான் அமைச்சராக இருந்த கடந்த 5 ஆண்டுகளில் இது குறித்து காங்கிரஸ் தலைமையிடம் எடுத்துச் சொல்லியும் எதுவும் நடக்கவில்லை. அதை விட மோசமாக உள்ளது தற்போது ஆளும் பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகள். மீனவர்களின் எண்ணங்களை பிரதிபலிக்காத ஆட்சியாளர்களைத் தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

இந்த நிலை மாற வேண்டும். அரசியல் வேறுபாடுகளை மறந்து மனித நேயத்தை நோக்கமாகக் கொண்டு அனைத்து அரசியல் கட்சிகளும் போராடுவதன் மூலமே எமது மீனவர்களின் உயிரை மீட்க முடியும்.

மேலும் மீனவர்களின் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு கிடைக்கும். இனி கடலுக்கு செல்லும் எமது மீனவர்கள் அச்சமின்றி, பயமின்றி, இடையூறுகள் இன்றி மீன்பிடிக்க தேவையான வழிமுறையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மீனவர்கள் பிரச்சினையில் மத்திய அரசு இனியாவது விழித்துக்கொள்ள வேண்டும். வெளியுறவுத் துறை அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி நம் மீனவர்கள் ஐவரின் உயிர்களை மீட்டு, அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கு நாங்கள் முழுமையாக துணை நிற்போம்"- என்றார். (வ)

## எல்லையில் பாக். மீண்டும் அத்துமீறல்

### 2 பேர் உயிரிழப்பு

காஷ்மீர், நவ.10
எல்லையில் பாகிஸ்தான் மீண்டும் நேற்றுமுன்தினம் அத்துமீறி நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர் உள்ளிட்ட 2 பேர் உயிரிழந்தனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி காஷ்மீர் மாநிலம் கமல் கூட் பகுதியில் பாக்கிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் இந்திய ராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார். இளம் பெண் ஒருவரும் கொல்லப்பட்டார். இந்திய தரப்புகளும் பாகிஸ்தானுக்கு உரிய பதிலடி கொடுத்தனர். கடும் துப்பாக்கிச் சண்டையால் எல்லையில் பதற்றம் நிலவியது. தெற்கு காஷ்மீரில், குல்கம் மாவட்டத்தில் தீவிரவாதிகள் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் படை வீரர்கள் இருவர் காயமடைந்தனர். இருள்வேளையைப் பயன்படுத்திகொண்ட தீவிரவாதிகள், தப்பிச்சென்றனர். அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (வ)



# 2ஜி விவகாரத்தில் மன்மோகன் பதவி விலகியிருக்க வேண்டும்

## இப்படிச் சொல்கிறார் சிதம்பரம்

டில்லி, நவ.10
2ஜி ஊழல் வெளியானதும் மன்மோகன்சிங் பதவி விலகி மன்னிப்புக் கேட்டு இருக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், நிதியமைச்சர் அருண்ஜெட்லி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த விழாவுக்கு வந்த சிதம்பரம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

"2 ஜி ஸ்பெக்டரம் விகாரத்தை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இன்னும் சிறப்பாக கையாண்டிருக்க வேண்டும். 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு வித்தியாசமான முறையில் கையாளப்பட்டு விட்டது. 2ஜி ஊழல் வெளியானதும் மன்மோகன் சிங் பதவி விலகி மன்னிப்புக் கேட்டு இருக்க வேண்டும்.



2ஜி லைசென்ஸ் ஒதுக்கீட்டில் முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற வழியை நான் முன்னிறுத்திச் சொல்லவில்லை. அனுமதிப்பத்திரம் வழங்கிய பின்பு அதில் முறைகேடு நடந்து இருப்பது தெரிய வந்ததும் நீதிமன்ற உத்தரவுக்காகக் காத்திருக்காமல் அரசே அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்து இருக்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் 2ஜி ஊழல்தான் காங்கிரஸை மிகப் பெரியளவில் காயப்படுத்திவிட்டது"- என்றார். (வ)

# அனல்மின் நிலையத்துக்கு அல்குவைதா மிரட்டல்



நெய்வேலி அனல்மின் நிலையத்துக்கு அல்குவைதா தீவிரவாத அமைப்பு வெடி குண்டு மிரட்டல் விடுத்துள்ளது.

நெய்வேலி அனல்மின் நிலையத்தில் தற்போதுதான் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பை கைவிட்டு, பணிக்குத் திரும்பி, அங்கு பணிகள் சகஜமான முறையில் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் நெய்வேலி அனல்மின் நிலையத்தை குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக மத்திய உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து அங்கு மத்திய தொழிலாளர்கள் பாதுகாப்புப் படை தமது பாதுகாப்பை அதிகப்படுத்தி உள்ளது. ஒவ்வொரு தொழிலாளரும், அதிகாரிகளும் முழுமையான சோதனைக்குப் பின்னரே அனல்மின் நிலையத்துக்குள் அனுமதிக்கப் படுகின்றனர். கூடுதலாகப் பாதுகாப்பு வீரர்கள் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர் என்றும் தகவல் தெரிய வருகிறது. (வ)

# அமெ.முன்னாள் பெண் தூதர் மீது முறைப்பாடு

## பாகிஸ்தானுக்காக உளவு பார்த்தாராம்

இஸ்லாமபாத், நவ.10



பாகிஸ்தானுக்காக உளவு பார்த்ததாக அமெரிக்க முன்னாள் பெண் தூதர் மீது முறைப்பாடு எழுந்ததைத் தொடர்ந்து அமெரிக்க உளவு நிறுவனம் அவரை உடனடியாக விசாரணை நடத்தியுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்தவர் ராபின் ராபேல் (வயது 67) அவர் மேற்கு ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் இணைவெளியுறவு அமைச்சராகவும், துனீஷியாவிற்கான அமெரிக்க தூதர், இஸ்ரேல் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆலோசகர் என்று முக்கிய பொறுப்புக்களை வகித்து வந்தார். கடந்த 2005 இல் ஓய்வு பெற்றார். 2009 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தான் அரசுக்கு சிறப்பு ஆலோசகராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வொஷிங்டன் போஸ்ட் நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில்,

முன்னாள் அமெரிக்க தூதர் ராபின் ராபேல், பாகிஸ்தான் அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா[illegible] இருந்து கொண்டே உளவு வேலை பார்த்ததாகவும், சமீபகாலமாக அவரது நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

அதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் எப்.பி.ஐ. உளவுபொலிஸார் வொஷிங்டனில் உள்ள அவரது இல்லம், அலுவலகத்தில் சோதனை நடத்தினர். அவரது மொபைல் போன்கள், கணினி தரவுகள் உள்ளிட்ட இரகசிய ஆவணங்களை ஆய்வு செய்து, அவரது அலுவலகத்துக்கு சீல் வைத்துள்ளனர். ராபின் ராபேலிடமும் இரகசிய விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக கடந்த 1993 ஆம் ஆண்டு இந்தியா வந்த ராபின் ராபேல், அப்போதைய பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து காஷ்மீர் விவகாரத்தில் அவர் தலையிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# ஈரான் மதத் தலைவருக்கு ஒபாமா இரகசியக் கடிதம்

## ஐ.எஸ்ஸுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு

வொஷிங்டன், நவ.10



இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவு கோரி, ஈரான் மதத்தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இரகசியக் கடிதம் எழுதியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவில் வெளியாகும் வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகையில் வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஈரானில் உச்ச அதிகாரம் படைத்த மதத் தலைவர் அயதுல்லா - கமேனிக்கு, ஜனாதிபதி ஒபாமா கடந்த மாதம் இரகசியக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கைகளுக்கு ஈரானின் ஆதரவை அவர் கோரியிருந்தார். எனினும், எதிர்வரும் 24 ஆம் திகதி கெடுவுக்குள் அணுசக்திப் பேச்சில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் காணப்பட்டால்தான், ஐ.எஸ். விவகாரத்தில் அமெரிக்காவும், ஈரானும் இணைந்து செயலாற்றுவது சாத்தியமாகும் என்றும் ஒபாமா தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐ.எஸ். பயங்கரவாதஅமைப்பை ஒடுக்க இராணுவ ரீதியாகவும், ராஜீய ரீதியாகவும் அமெரிக்கா மேற்கொண்டு வரும் முயற்சியில், ஈரானுக்கு முக்கிய பங்குள்ளதாக ஒபாமா கருதுவது இந்தக் கடிதத்தின் மூலம் வெளிப்படுகிறது என்று அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டிலிருந்து, அயதுல்லா அலி கமேனிக்கு ஒபாமா எழுதும் 4 ஆவது கடிதம் இது.

இந்தச் செய்தி வெளியானதை அடுத்து, ஒபாமாவுக்கு குடியரசுக் கட்சி உறுப்பினர்களான ஜோன் மெக்கெய்ன், லிண்ட் கிரஹம் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ்ஸுக்கு எதிராக, மிதவாத சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கைக்கு செவிமடுக்க மறுக்கும் ஒபாமா, அயதுல்லா கமேனியை அணிசேர அழைப்பது கண்டிக்கத்தக்கது என்று ஜோன் மெக்கெய்ன் கூறினார். (வ)

# ஜப்பானில் அணு உலை இயங்க மீண்டும் அனுமதி

ஜப்பானில் உள்ள பிரபல ஷெண்டாய் அணு உலை மீண்டும் இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் காரணமாக புகுஷிமா அணு உலையில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் அங்கு பெரும் சேதம் உண்டானது. அதைத் தொடர்ந்து ஜப்பானில் இருந்த சுமார் 48 அணு உலைகள் மூடப்பட்டன. இருப்பினும், அந்தநாட்டு பிரதமர் சின்ஜோ அபே தலைமையிலான அரசு, நாட்டின் மின்சார தேவைக்கு அணு உலை மிகவும் அவசியம் என்று வலியுறுத்தி வந்தது. மேலும், மூடப்பட்ட அணு உலைகளை மீண்டும் திறக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்தநிலையில், டோக்கியோவுக்கு தென் மேற்கே 1000 கி.மீ. தொலைவில் ககோஷிமாவில் அமைந்துள்ள ஷெண்டாய் அணு உலையை மீண்டும்திறப்பதற்கான வாக்கெடுப்பு ககோஷிமா நிர்வாகிகள் சபையில் நடந்தது. (வ)

# காதல் ததும்பும் மொழியாக பிரெஞ்ச்


## புகழ் மகுடம் சூட்டும் கூகுள்

பிரெஞ்ச் மொழியானது காதல் ததும்பும் மொழி என்று கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆங்கிலம், ஸ்பானிஷ், ஜேர்மன், இத்தாலி, ரஷ்யன் மற்றும் பிரெஞ்ச் ஆகிய ஆறு மொழிகளில் பிரான்ஸ் மொழியில் தான், காதல் வார்த்தை[illegible] அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

எனவே காதல் ததும்பும் மொழியில், பிரெஞ்ச் முதலிடத்திலும், 2 ஆம் இடத்தில் ஸ்பானிஷும், கடைசி இடத்தில் ஆங்கிலமும் உள்ளன.

மேலும் நான் உன்னை காதலிக்கிறேன் என்ற ஆங்கில வார்த்தையே அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)



கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிக்கு இடையில் இருந்த பேர்ளின் சுவர் இடிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி பேர்ளினில் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்காக முன்பு சுவர் இருந்த இடத்தில ஒளி வீசும் 8000 பலூன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் ஐ.எஸ்.ஆயுததாரிகளின் முக்கிய தலைவர்கள் ஒன்றுகூடல்

ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களின் தலைவர்கள் ஈராக்கின் மொசுல் நகரில் ஒன்று கூடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் ஐ.எஸ்.இன் தலைவர் அபு பக்கர் அல் பஹ்தாதி ஈராக்குக்கு வருகை தந்துள்ளமை தொடர்பில் உறுதியான தகவல்கள் வெளி வரவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஈராக்கிலுள்ள ஐ.எஸ். ஆயுததாரிகளின் சுமார் 10 வாகனங்கள் வான் தாக்குதல்களின் மூலம் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து ஒன்று திரண்டுள்ள ஐ.எஸ். தலைவர்களை இலக்கு வைத்துள்ளதாக அமெரிக்கா தெரிவிக்கின்றது.

இதேவேளை, ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படைகளுடன் கடமையாற்றுவதற்கு மேலும் ஆயிரத்து 500 படையினரை அனுப்பவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அத்துடன் ஈராக் துருப்பினருக்கான பயிற்சிகளை வழங்குவதற்காக சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு காங்கிரஸிடம் கோருவதற்கும் அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா தீர்மானித்துள்ளதாகவும்வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது. (வ)



# ஈரானில் நாய் வளர்த்தால் 74 சவுக்கடி தண்டனை

ஈரான் நாட்டில் நாய் வளர்ப்பவர்களுக்கு 74 சவுக்கடிதண்டனை வழங்க சட்டம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சட்டம் மூலம் வீட்டில் நாய் வளர்ப்பதும், பொது இடங்களில் நாயுடன் உலாவருவதும் தடைசெய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் நாய்கள் மிகவும் அழுக்கானவையாகக் கருதப்படுகின்றன. அதனால் ஈரானில் அவ்வளவாக நாய்கள் இல்லை. எனினும் சிலர் அங்கு தங்கள் வீடுகளில் இரகசியமாக நாய்களைச் செல்லப் பிராணிகளாக வளர்க்கின்றனர். சில செல்வந்தர்கள், தங்கள் நாயுடன் பொது இடங்களில் உலாவவும் செய்கிறார்கள். இதனால் இதற்கு முன்பு வரை இவ்வாறு பொது இடங்களில் நாயுடன் உலாவுவோரை அந்தநாட்டின் கலாசாரக் காவலர்கள் தடுத்து நிறுத்தி எச்சரிக்கை செய்து வந்தனர். ஒரு சில சம்பவங்களில் அவர்களிடமிருந்து நாய்கள் பறிக்கப்பட்டன. தொலைக்காட்சி, இணையம் போன்ற மேற்கத்திய கலாசாரங்களில் நாய் வளர்ப்பதும் ஒன்று என்று கருதி ஈரான் நாட்டின் ஆட்சியாளர்கள் அதைத் தடுக்க புதிய சட்டம் ஒன்றை இயற்றி வருகிறார்கள். (வ)

# தென்சூடானில் அரசியல் குழப்பம்; உடன் முடிவுக்குக் கொண்டு வருக

## தவறினால் பொருளாதாரத் தடை வரலாம் என்கிறது 'இகாட்'

தென் சூடானில் தற்போது நிலவி வரும் அரசியல் குழப்ப நிலை மற்றும் வன்முறையை உடனே முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அங்கு சமாதானத்தை ஏற்படுத்தத் தலையிடவோ அல்லது அரசின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கோ நேரிடலாம் என்று அதன் அண்டை நாடுகளான கென்யா, எதியோப்பியா, சூடான், உகண்டா ஆகிய நாடுகள் உட்பட கிழக்கு ஆபிரிக்காவின் 8 நாடுகளின் கூட்டமைப்பான இகாட் எச்சரித்துள்ளது.

தென் சூடானின் ஜனாதிபதி சல்வா கீர் முன்னாள் பிரதி ஜனாதிபதியான ரியெக் மாச்சர் இனை ஓர் ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த வருடம் நாடுகடத்தத் திட்டமிட்டதில் இருந்து அதிகாரத்தில் நீடிப்பதில் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றார். டிசெம்பரில்அவர் மேற்கொண்ட இம்முயற்சி காரணமாக இருவருக்கும் ஆதரவான போராளிகளுக்கு இடையே வன்முறை விரைவாகப் பரவி பலர் கொல்லப்படவும் காரணமானது.

மேலும் பேச்சு முயற்சிகளும் தோல்வியடைந்து இந்தக் குழப்பம் தற்போது ஒரு வருடமாக நீடித்து வருகின்றது. இந்த நிலையில் தென் சூடானில் சர்ச்சையைக் கிளப்பி வரும் இரு தரப்பும் இணைந்து வன்முறையை உடனே முடிவுக்குக் கொண்டு வரும் விதத்தில் நிபந்தனையற்ற பூரணமான தீர்வை எட்ட IGAD அமைப்பு 15 நாள்கள் அவகாசம் வழங்கியுள்ளது.

மேலும் இதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் எந்த ஒரு தரப்புக்கும் சொத்துக்களை முடக்கவும் பிரயாணங்களுக்குத் தடை விதிக்கவும் ஆயுதம் கிடைக்காமல் செய்யவும் இன்னமும் குறிப்பிட்ட பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் தனக்கு உரிமை இருப்பதாகவும் IGAD தெரிவித்துள்ளது.

தென் சூடானில் கடந்த ஒரு வருடமாக நீடிக்கும் குழப்பத்தில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இதில் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சில மக்கள் தென் சூடானுக்கு உள்ளேயுள்ள ஐ.நா. தளங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளதால் இவையும் போராளிகளின் இலக்குகளாக மாறியுள்ளன. பல தசாப்தங்களாக நீடித்த சண்டையின் பின்னர் சூடானில் இருந்து 2011 இல் பிரிந்த தென் சூடான் உலகில் மிக அண்மையில் உதயமான நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



# கம்போடிய காட்டுக்குள் அதிசயக் கோயில்

நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்டு, பல ஆண்டுகளாக அடர்ந்த காட்டுக்குள் மறைந்திருந்த கோயில் வேற்று கிரக வாசிகளால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் என்ற கோயில் முதலில் இந்துக் கோயிலாக இருந்து பின்னர் புத்த மதக்கோயிலாக மாறியதாகக் கூறப்படுகிறது.

உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகப்பெரிய தாகக் கூறப்படும் இந்த கோயிலின் கட்டமைப்பு இன்று வரை ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்டுள்ள இந்தக் கோயில் பல ஆண்டுகளாக அடர்ந்த காட்டுக்குள் மறைந்து இருந்துள்ளது.

மேலும் உள்ளூர் மக்கள் இந்தக் கோயில் கடவுள் களாலோ அல்லது வேறு ஏதும் வேற்று கிரகவாசிக ளாலோ கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதிவந்துள்ளனர்.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் சூரியவர்மனால் கட்டப்பட்டுள்ள இந்த கோயில், விஷ்ணுவுக்கு அர்ப் பணிக்கப்பட்டதாக தெரிகிறது.

கெமர் என்றழைக்கப்படும் கம்போடிய மக்களின் கட்டடக் கலையில் கட்டப்பட்டுள்ள இந்தக் கோயிலில் பல இரகசியங் கள் புதைந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இந்தக்கோயில் கடவுள்களின் இருப்பிடமாகக் கருதப்படும் மேரு மலையைக் குறிப்பதாக உள்ளது.

மத்திய கோபுரங்கள், மேரு மலையின் ஐந்து சிகரங்களைக் குறிக்கின்றன. சுவர்களும், அகழியும், பிற மலைத்தொடர் களையும், குறிக்கின்றன. நகரத்தில் இருந்து சிறிது உயர்த் தப்பட்ட ஒரு தளத்தின்மீது அமைந்துள்ள இந்த கோயிலில், மூன்று சதுர கூடங்கள், மத்திய கோபுரத்துடன் இணைந் துள்ளன.

இக்கூடங்களும், கோபுரமும் அரசன், பிரம்மா, சந்திரன் மற்றும் விஷ்ணுவுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. 12 ஆம் நூற்றாண்டிலேயே எந்த ஒரு தொழிநுட்ப வசதிகளும் இல்லாமல் எப்படி இவ்வளவு நேர்த்தியாக கட்டமைக்கப்பட்டது என்று பல ஆய்வாளர்கள் அதிசயிக்கின்றனர். இதுபோன்ற பல மர்மங்கள் புதைந்துள்ள இந்தக் கோயிலுக்கு ஆண்டுதோறும் சுற்றுலாவாசிகள் பெருமளவில் வந்துசெல்கின்றனர்.

## ஓர் இலட்சியம் - விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



எல்லா யோகங்களின் லட்சியமும் ஆன்ம சுதந்திரமே என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எல்லா யோகங்களும் வேறுபாடின்றி இந்த லட்சியத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின் றன. புத்தர் பெருமளவுக்கு தியானத்தின் மூலமும் யேசு பிரார்த்தனையின் மூலமும் அடைந்த அதே நிலையை ஒருவன் செயலின் மூலமாகவே அடைய முடியும். புத்தர் செயல் திறன் மிக்க ஞானி. யேசு ஒரு பக்தர். ஆனால் இருவரும் ஒரே இலட்சியத் தையே அடைந்தனர். முக்தி என்றால் முழு சுதந்திரம் தீமைத் தளையிலிருந்தும் அதுபோலவே நன்மைத் தளையிலிருந்தும் சுதந்திரம் பெறுவது. இரும்புச் சங்கிலியைப் போலவே தங்கச்சங்கிலி யும் தளைதான். என் கையில் முள் ஒன்று குத்தியிருக்கிறது. அதை எடுப்பதற்கு இன்னொரு முள்ளையே பயன்படுத்துகிறேன் எடுத்து முடிந் ததும் இரண்டையுமே எறிந்துவிடுகிறேன். இரண் டாவது முள்ளை நான் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில் இரண்டும் முட்களே.

அது போலவே தீய இயல்புகள் நல்ல இயல்புகளால் சமன்படுத்தப்பட வேண்டாம். நல்ல சம்ஸ்காரங்களின் புதிய அலைகளைப் பாய்ச்சி தீய சம்ஸ்காரங்களை ஏறக்குறைய அவை மறைகின்ற வரையில் ஒடுங்கு கின்ற வரையில் மனத்தின் ஒரு மூலையில் கட்டுப்படுத் தப்படும் வரையில் நீக்க வேண்டும் அதற்குப் பிறகு நல்ல இயல்புகளையும் வெற்றி கொள்ள வேண்டும். இவ்வாறே பற்று பற்றின்மை ஆகிறது. செயல்புரி ஆனால் அந்தச் செயலோ எண்ணமோ மனத்தில் ஆழ்ந்த பதிவை உண்டாக்காமல் பார்த்துக் கொள். அலைகள் வந்து போகட்டும். உடம்பிலிருந்தும் மூளை யிலிருந்தும் பெரிய பெரிய செயல்கள் புறப்படட்டும். ஆனால் அவை மனத்தில் ஆழ்ந்த பதிவு எதையும் உண்டாக்க அனுமதிக்காதீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 7 | | 2 | 6 | | | |
| 2 | 3 | | | 1 | | 9 | | |
| 8 | 6 | | | 5 | 3 | | | 7 |
| 5 | | | 4 | | | | 2 | |
| | 7 | | | 6 | | | 3 | |
| | 4 | | | | 5 | | | 9 |
| 4 | | | 3 | 7 | | | 9 | 2 |
| | | 9 | | 4 | | | 5 | 8 |
| | | | 5 | 9 | | 4 | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரை யான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந் தப் பெட்டி 9 நிரல்களை யும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள் ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண் டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 7 | 1 | 3 | 5 | 4 | 2 | 8 |
| 4 | 8 | 1 | 6 | 2 | 9 | 7 | 5 | 3 |
| 5 | 2 | 3 | 4 | 8 | 7 | 6 | 9 | 1 |
| 1 | 3 | 4 | 5 | 9 | 8 | 2 | 7 | 6 |
| 7 | 9 | 2 | 3 | 6 | 1 | 8 | 4 | 5 |
| 8 | 5 | 6 | 2 | 7 | 4 | 1 | 3 | 9 |
| 2 | 1 | 9 | 8 | 4 | 3 | 5 | 6 | 7 |
| 3 | 4 | 5 | 7 | 1 | 6 | 9 | 8 | 2 |
| 6 | 7 | 8 | 9 | 5 | 2 | 3 | 1 | 4 |

## நாளை

**ஐப்பசி-25 செவ்வாய்க்கிழமை | 11.11.2014**

திதி: பஞ்சமி பி.இ.05.11 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.07.11 வரை
சுபநேரம்: 10.36—12.06 வரை
இராகுகாலம்: 03.06—04.36 வரை



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: கடன் விவகாரங்களில் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். விரிவாக்கம் செய்வது தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடுவீர்கள்.



**இடபம்**: மேலதிகாரிகளால் உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த நன்மைகள் உண்டாகும். அவர்களின் ஆதரவும் கிடைக்கும்.



**மிதுனம்**: மறைமுக எதிர்ப்புகள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள். உங்களுக்கு பின்னால் உங்களைப் பற்றி புறம் பேசியவர்கள் உங்களிட[illegible] சரண் அடைவார்கள். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும்.



**கடகம்**: முன்கோபத்தைத் தவிர்ப்பது முன்னேற் றத்துக்கு உதவும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். போட்டிகள் பற்றிய கவலையை விட்டுவிட்டு உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.



**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களி டம் பேசும்போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங் கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.



**கன்னி**: உறவினர்களிடம் பேசும்போது நிதான மாகப் பேசுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவி செய் வதில் ஆர்வம் காட்டுவீர்கள். கோபத்தைத் தவிர்ப்பது நல் லது. எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகு[illegible] மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**துலாம்**: நீங்கள் எல்லோராலும் நேசிக்கக் கூடியவராக வும் இருப்பீர்கள். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். நண்பர் கள் பலவிதங் களிலும் ஆதரவாக இருப்பார்கள். ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும்.



**விருச்சிகம்**: தொழில் விருத்தி அடைவதுடன் ஆதாயமும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் திருப்தியாக உணர்வார்கள். சக ஊழியர் களின் உதவியும் கிடைக்கும்.



**தனுசு**: தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மனத்தெளிவு உண்டாகும். உங்கள் திறமை வெளிப்படும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள்.



**மகரம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்ப வர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபப் படாமல் மேலதிகாரிகள் சொன்ன வேலையை செய்து முடிப்பது நல்லது.



**கும்பம்**: உறவினர்களுடன் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். மனதில் இருந்த பயம் நீங்கி துணிவு உண்டாகும். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.



**மீனம்**: அடுத்தவர்களுக்கு ஆதரவாகச் செயற் படும் போது கவனம் தேவை. தடைப்பட்ட காரியங் களில் இருந்த தடைநீங்கும். செல்வம் சேரும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

# சென். பற்றிக்ஸை வீழ்த்தி மத்திய கல்லூரி வெற்றி

## இந்துக் கல்லூரி கூடைப் பந்துக் கிண்ணம் மத்தியின் வசம்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 19 வயது மாணவர்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வீழ்த்தி கிண்ணத்தைச் சுவீகரித்தது யாழ். மத்திய கல்லூரி அணி. இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில். இரு அணிகளும் பலம்மிக்கவையாக இருந்த போதிலும் ஆட்டம் இறுதியாட்டத்துக்குரிய விறுவிறுப்பின்றி சோபை இழந்திருந்தது. 'சூட்' செய்யப்பட்ட பந்துகள் கூடைக்குள் செல்லாமல் குறிதவறுவது பல தடவைகள் நடைபெற்றது. இதனால் புள்ளிகள் மந்த கதியிலேயே நகர்ந்தன.

முதல் பாதி ஆட்டத்தில் மத்திய கல்லூரி 12 புள்ளிகளையும் பற்றிக்ஸ் 7 புள்ளிகளையும் பெற்றன. சென். பற்றிக்ஸ் வீரர்கள் கர்சன் 7 புள்ளிகளையும் வேணுஜன் 5 புள்ளிகளையும் பெற்றனர். இரண்டாம் பாதி ஆட்டத்தில் மத்திய கல்லூரி 14 புள்ளிகளையும் பற்றிக்ஸ் 10 புள்ளிகளையும் பெற்றன. மத்திய கல்லூரி வீரன் வேணுஜன் 6 புள்ளிகளைப் பெற்றார். மூன்றாம் பாதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் 12 புள்ளிகளையும் மத்திய கல்லூரி 11 புள்ளிகளையும் பெற்றன. மத்தியின் மைந்தன் கர்சன் 9 புள்ளிகளைப் பெற்றார். நான்காம் பாதியில் சென். பற்றிக்ஸ் 13 புள்ளிகளைப் பெற்றது. ஹென்றிசன் 6 புள்ளிகளைப் போட்டார். மத்திய கல்லூரி 11 புள்ளிகளைப் பெற்றது. வேணுஜன் 7 புள்ளிகளைப் பெற்றார். ஆட்ட முடிவில் 48:42 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணத்தைப் பறித்துச் சென்றது. ஆட்டநாயகனாக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த வேணுஜன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஹென்றிசன் தெரிவுசெய்யப்பட்டார். (உ-23)

## அஞ்சல் ஓட்ட கார்னிவெலில் 40 அணிகள் நேற்று பங்கேற்பு



அஞ்சல் ஓட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் அஞ்சல் ஓட்ட கார்னிவெல் நடத்தியது. இதில் பாடசாலை அணிகள் மற்றும் விளையாட்டுக் கழக அணிகள் என 40 அணிகள் கலந்து கொண்டன. வயதுகளின் அடிப்படையில் அவற்றுக்கிடையே அஞ்சல் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற அணிகளுக்கு சான்றிதழ்களும் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இத்தகைய அஞ்சல் ஓட்ட கார்னிவெல் நடத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு கார்னிவெல் நடத்துவது என சில மாதங்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டது. பொருத்தமான மைதானத்தைப் பெறுவதில் காணப்பட்ட இடர் காரணமாக அது பின்னர் பிற்போடப்பட்டு நேற்றைய தினம் நடத்தப்பட்டது. உள்ளூரில் உள்ள சிறந்த அஞ்சல் ஓட்ட வீரர்களை இனங்கண்டு அவர்களைத் தொடர்ந்து பயிற்றுவிப்பதற்கு இந்தக் கார்னிவெல் உதவும் என்று யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத் தலைவர் எம். இளம்பிறையன் தெரிவித்தார். (உ-23)

## எவ்.ஏ. கி[illegible]ண போட்டியை யாழ். மா[illegible]ட்டம் ஆக்கிரமிப்பு

வலி. வடக்கு. நவ. 1[illegible]

இலங்கை உதை[illegible]ாட்ட சம்மேளனத்தினால் [illegible]தப்படவுள்ள எப்.ஏ. கிண்ண[illegible]தை பந்தாட்டத் தொடரில் என்றும் இல்லாதவாறு இந்தாண்டு சுமார் 100க்கும் மேற்பட்ட கழகங்கள் யாழ். மாவட்டத்தில் இருந்து கலந்துகொள்கின்றமை பெருமையளிக்கிறது என்று தெரிவித்தார் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ.

அரியாலையில் நிர்மாணிக்கப்படும் உதைபந்தாட்ட மைதானத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண உதைபந்தாட்ட லீக்குகளில் இருந்து சுமார் 158 கழகங்கள் எப்.ஏ. வெற்றிக் கிண்ணப் போட்டியில் விளையாட விண்ணப்பித்துள்ளன. ஏனைய மாகாணங்களைப் பொறுத்த வரையில் இந்தளவு தொகையான கழங்கள் இப்படிப் போட்டியில் கலந்து கொள்வதில்லை. இது உண்மையில் வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. இது பாராட்டப்பட வேண்டும்; ஊக்குவிக்கப்படவும் வேண்டும் என்றார் அவர். (உ-86)

## உதைபந்து சம்மேளன தலைவர் யாழ். வருகை



பயிற்சி மைதான அமைப்புப் பணிகளை பார்வையிட ஜேர்மன் நாட்டு அரசினதும் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் அரியாலையில் அமைக்கப்பட்டு வரும் யாழ். உதைபந்தாட்ட லீக்கிற்கான பயிற்சி மைதானத்தின் கட்டுமானப் பணிகளை நேற்று யாழ்ப்பாணம் வந்த இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோ, செயலாளர் உபாலி கேவகே மற்றும் நிறைவேற்று அதிகாரி அனுரடீ சில்வா ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். டிசம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு இடையில் பணிகள் பூர்த்தி செய்யப் பட்டு உதைபந்தாட்ட பயிற்சி மைதானம் யாழ்ப்பாணம் லீக்கிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்படவுள்ளது. (உ-23)

## இறுதியாட்டம் இன்று

குறோஸ் வே நோத் வெற்றிக் கிண்ணதுக்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நடத்தும் கூடைப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டங்கள் இன்று திங்கள்கிழமை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ளது.

இதில் மாலை 3 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை புளு அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

சிறப்பு ஆட்டமாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மஞ்சள் அணியை எதிர்த்து யாழ். மாவட்டகூடைப்பந்தாட்டவெள்ளை அணிமோதவுள்ளது. (உ-23)

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் வடமாகாண ஆளுநர் உதைபந்தாட்ட கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று திங்கள்கிழமை பி.ப. 3 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்திலும், அல்வாய் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளது. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (ற-422)

# வடமராட்சி லீக் நடத்தும் உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 9

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆளுநர் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நேற்று முன்தினம் சனிக்கிழமையும் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன. வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

**காலிறுதி ஆட்டங்கள்**

இந்தத் தொடரின் காலிறுதி ஆட்டங்களில் மூன்று நேற்றைய தினமே நடைபெற்றது. பொம்மர்ஸ் வி.கவுக்கும் நியூட்டன் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் தலா ஒரு கோல் என்ற சமநிலையில் ஆட்டம்முடிவடைந்தது. தகர்ப்பு உதைகளில் 4:2 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் வென்றது. நவஜீவன்ஸ் வி.கவுக்கும் கொலின்ஸ் வி.கவுக்கும் இடையிலான ஆட்டம் கோல் எதுவும் அடிக்கப்படாமல் சமநிலையில் முடிந்தது. தகர்ப்பு உதைகளில் 4:2 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்றது. கலட்டி ஐக்கிய வி.கவுக்கும் கலைமதி வி.கவுக்கும் இடையிலான ஆட்டம் கோல் எதுவும் அடிக்கப்படாமல் சமநிலையில் முடிந்தது. தகர்ப்பு உதைகளில் 3:2 என்ற கோல் கணக்கில் கலைமதி வெற்றி பெற்றது. மற்றொரு காலிறுதி ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தில் நடைபெறும். அதேமைதானத்தில் நாளைமறுதினம் 3 மணிக்கு அரையிறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகும். இரண்டாவது ஆட்டம் 4 மணிக்கு இடம்பெறும்.

ஞாயிறு ஆட்டங்கள்

முன்னதாக லீக் ஆட்டங்களின் தொடர்ச்சி நேற்றைய தினம் இடம்பெற்றன. பொம்மர்ஸ் வி.கவுக்கும் அல்வாய் பாரதி வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் பொம்மர்ஸ் 5 கோல்கள் அடிக்க, பாரதி கோல் எதுவும் அடிக்கவில்லை. கலைமதி வி.கவுக்கும் றேஞ்சர்ஸ் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமதி 2 கோல்கள் அடித்தது. றேஞ்சர்ஸ் கோல் எதுவும் அடிக்கவில்லை. இமையாணன் மத்தி வி.கவுக்கும் யங்கம்பன்ஸ் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் 4:1 என்ற கோல் கணக்கில் வென்றது. டைமன்ஸ் வி.கவுக்கும் அன்பாலயா வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் டைமன்ஸ் 5 கோல்களை அடிக்க, அன்பாலயா கோல் எதனையும் அடிக்கவில்லை.

**சனிக்கிழமை ஆட்டங்கள்**

கரவைச் சுடர் வி.கவுக்கும் ஸ்ரீ அம்பாள் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் ஸ்ரீ அம்பாள் 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. சிவகுமரான் வி.கவுக்கும் அல்வாய் நண்பர்கள் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் அல்வாய் நண்பாகள் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. உடுப்பிட்டி இளைஞர் வி.கவுக்கும் நியூட்டன் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் சமநிலை தகர்ப்பு உதைகள் மூலம் நியுட்டன் 3:2 என்ற கோல் க்ணக்கில் வென்றது. அண்ணாசிலையடி இளைஞ வி.கவுக்கும் கலட்டி ஐக்கிய வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய 1:0 என்ற கோல் கணக்கி வென்றது.

மாலை இடம்பெற்ற ஆட்டங்களில் நவஜீவன்ஸ் வி.கவை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் வி.க மோதியது. இதில் நவஜீவன்ஸ் 3:0 என்ற கோல் கணக்கி வென்றது. கருணாகரன் வி.கவுக்கும் கொலின்ஸ் வி.கவுக்கு இடையிலான ஆட்டம் சம நிலையில் முடிந்தது. தகர்ப்பு உதைகளில் கருணகரன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வென்றது. (உ-23)


## சாதனை படைத்தது சச்சினின் புத்தகம்

சச்சினின் சுயசரிதைப் புத்தகமான 'பிளேயிங் இட் மை வே' விற்பனையில் சாதனை படைத்து சச்சினுக்கு மேலும் மகுடம் சூட்டியுள்ளது.

இந்தப் புத்தகம் அண்மையில் வெளியானது. வெளியீட்டுக்கு முன்பே 1 லட்சத்து 50 ஆயிரம் பிரதிகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டன. புனைவு மற்றும் புனைவில்லாத எந்த புத்தகத்துக்கும் இந்தளவுக்கு முன்கூட்டியே வரவேற்பு கிடைத்ததில்லை. அந்த விதத்தில் சச்சினின் சுயசரிதை புத்தகம், சாதனை படைத்துள்ளது என்று 'ஹாச்செட் இந்தியா' நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வோல்டர் இசாக்சன் எழுதிய ஸ்டீவ் ஜாப்ஸ் வாழ்க்கை வரலாறு புத்தகம் 1 லட்சத்து 30 ஆயிரம் பிரதிகள் விற்றுள்ளன. அந்த சாதனையை சச்சினின் புத்தகம் முறியடித்துள்ளது. புத்தகம் வெளியான 2 நாள்களில் 2 லட்சம் பிரதிகள் விற்கப்பட்டுள்ளன என்று இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

இந்நூலை எழுதிய கிரிக்கெட் விமர்சகரான போரியா மஜும்தார் இதுபற்றி கூறும் போது, "ரசிகர்கள் சச்சினைப் பற்றி அதிகம் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். சச்சினின் ரசிகர்கள் மட்டுமில்லாமல் உலகம் முழுக்க உள்ள கிரிக்கெட் ரசிகர்களால் இந்த புத்தகம் ஏற்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)




## 5 தலைவர்களுக்கு சச்சின் நற்சான்றிதழ்

தன்னுடைய சுயசரிதையான 'பிளேயிங் இட் மை வே'-யில் 5 அணித் தலைவர்களுக்கு நற்சான்றிதழ் அளித்துள்ளார் சச்சின்.

**கங்குலி**

கங்குலி வியூகம் வகுப்பதில் வல்லவர். கிரிக்கெட்டைப் பற்றி நன்கு புரிதல் உள்ளவர். கடுமையான நேரங்களில், பரிசோதனை செய்து பார்ப்பதில் தயக்கம் காட்டமாட்டார். கங்குலி அணித்தலைவராக இருந்தபோதுதான் இந்திய அணி வெளிநாடுகளில் தொடர்ந்து ஜெயிக்க ஆரம்பித்தது.

**கும்ப்ளே**

வீரர்களுடன் கருத்துகளைச் சரியாக பரிமாறுவதில் வல்லவர். ஒவ்வொரு வீரரிடமும் தான் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதை வெளிப்படையாக சொல்லிவிடுவார். உள்ளுணர்வு மீது நம்பிக்கை வைத்து ஆடுபவர்.

**டிராவிட்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளுடன் கிரிக்கெட்டை அணுகுபவர். மன உறுதி மிக்கவர். அதிக பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடமாட்டார்.

**டோனி**

உள்ளுணர்வு மீது அதிக நம்பிக்கை வைப்பவர். கிரிக்கெட்டை நன்கு புரிந்து கொண்டிருப்பவர். வித்தியாசமாக முயற்சி செய்வதில் தயக்கம் காண்பிக்க மாட்டார். அழுத்தம் கொடுக்கும் தருணங்களை நன்றாக கையாள்பவர்.

**நாசர் ஹுசேன்**

வியூகம் வகுப்பதில் வல்லவர். சிலசமயம் அவருடைய வியூகங்கள் எதிர்மாறாகவும் அமைந்துவிடும். ஒரு துடுப்பாட்டவீரர் எப்படி ஆடுவார் என்பதை முன்பே கணித்து அந்த இடத்தில் களத்தடுப்பாளரை நிறுத்தி விடுவார்.

## றொனால்டோவுக்கு தங்கக் காலணி



2014ஆம் ஆண்டுக்கான சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான தங்கக் காலணி விருது போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு வழங்கப்பட்டது. 29 வயதான றொனால்டோ இந்த விருதை மூன்றாவது முறையாகப் பெற்றுள்ளார்.

ஸ்பெயினின் மெட்ரிட் நகரில் நடை பெற்ற விழாவில் ரியல் மெட்ரிட் அணியின் தலைவர் புளோரின்டோ பீரிஸ் இந்த விருதை றொனால்டோவுக்கு வழங்கினார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த றொனால்டோ, "முதல் முறையாக இந்த விருதைப் பெறுவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. விளையாட்டில் இன்னும் சில காலம் வெற்றிக்கொடி நாட்ட முடியும் என நினைக்கின்றேன். ஆனாலும் ஓய்வுபெறும் போது உலகின் தலை சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராக நிச்சயம் திகழ்வேன்"-என்றார். (ற)

## சச்சின் வழியில் சானியா

இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தனது சுயசரிதையை எழுதி வருகிறார். இதுவரை 26 அத்தியாயங்கள் எழுதி முடிக்கப்பட்டுள்ளன என்றும், சுயசரிதையை வெளியிடும் திகதியை இன்னமும் அவர் முடிவு செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியக் கிரிக்கெட்டின் நட்சத்திர வீரர் டெண்டுல்கர் தனது சுயசரிதை நூலைச் சில நாள்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தார். அது குறித்து சானியாவிடம் கேட்டபோது,

"புத்தக விற்பனைக்காக டெண்டுல்கர் தனது சுயசரிதையில் சர்ச்சையை சேர்க்கவில்லை. ஒரு போதும் அவர் அப்படி செய்ய மாட்டார்" - என்று தெரிவித்துள்ளார். (ற)



## சினிமாவில் கால் பதிக்கிறார் ஸ்ரீசாந்த்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் ஸ்ரீசாந்த் நடிகராக தடம் பதிக்கவுள்ளார்.

சில திரைப்படங்களுக்கு இசை வழங்கியுள்ள ஸ்ரீசாந்த் தெலுங்கு திரைப்படமொன்றில் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பூரி ஜெகநாத் தயாரித்து வரும் குறித்த திரைப்படத்தில் என்.டி.ஆர் மற்றும் காஜல் அகர்வால் ஆகியோர் நடிக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



## தந்தையை தவறாக பேசியதால் குத்து விட்ட அர்ஜுன்

தன்னுடைய தந்தையைப் பற்றித் தவறாகப் பேசிய தனது நண்பரை சரமாரியாக குத்து விட்டு காயப்படுத்தி விட்டாராம் சச்சின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர்.

2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் உலகக்கிண்ணத் தொடர் நடந்தது. அப்போது இந்தியா 'பி' பிரிவில் முக்கியமான ஆட்டம் ஒன்றில் இலங்கையிடம் தோல்வியடைந்ததால் தொடரிலிருந்து விலகியது. இதனால் இந்திய ரசிகர்கள் கடும் கோபத்துடன் இருந்தனர். அந்தப் போட்டியில் சச்சின் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.



தனது அப்பா 'டக்-அவுட்' ஆனதால் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் வருத்தத்தில் இருந்தார். அவர் ரொம்பக் கோபக்காரர் என்பதால் அவரது அம்மா அஞ்சலி, யாராவது உன்னிடம் அப்பா 'டக்- அவுட்' ஆனது பற்றிப் பேசினால், கோபப்படக் கூடாது என்று சொல்லி கட்டுப்படுத்தி வைத்திருந்தாராம்.

ஆனால் அர்ஜுனின் நண்பர் ஒருவர், தன்னிடம் தனது தந்தை 'டக்- அவுட்' ஆனது குறித்து கிண்டலடித்துப் பேசியதால் கோபமாகி அவரை சரமாரியாக குத்தி விட்டாராம் அர்ஜுன். இந்தச் சம்பவம் நடந்த போது அர்ஜுனுக்கு 7 வயது என சச்சின் தனது சுயசரிதை புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு வெள்ளையடித்தது இந்தியா அணி

சர்வதேச ஒரு நாள் தொடரின் நடப்பு சம்பியனான இந்தியஅணியும் சர்வதேச '20/20' தொடரின் நடப்புச் சம்பியனான இலங்கை அணியும் மோதிய, சம்பியன்களுக் கிடையிலான தொடர் என வர்ணிக்கப்பட்ட இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் அபார வெற்றி பெற்றுத் தொடரையும் கைப்பற்றியது இந்திய அணி.

நேற்று ஐதராபாத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கைஅணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கைஅணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டில்சான் மற்றும் குசல்பெரேரா ஆரம்பத்திலிருந்தே தடுமாறினர். அதனால் இலங்கை அணி சிறந்த தொடக்கத்தைப் பெறத் தவறியது. முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் அணியின் ஓட்டம் 5 ஆக இருந்த பொழுது குசல்பெரேரா 4 (6) ஓட்டங்களுடன் யாதேவ்வின் பந்தில் வெளியேறினார். தொடர்ந்து வந்த சங்ககார 2.1 பந்துப்பரிமாற்றங்களில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 7ஆக இருந்த போது தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே வந்த வேகத்தில் திரும்பிச் சென்றார். அடுத்து வந்த ஜெயவர்த்தன டில்சானுடன் சேர்ந்து சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்த இலங்கைஅணியின் ஓட்டம் நூறைத்தாண்டியது. 25ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அணியின் ஓட்டம் 112ஆக இருந்தபொழுது டில்சான் 53(80) ஓட்டங்களுடன் ராயுடுவின் பந்தில் வெளியேறினார். ஒரு பக்கம் மஹேல சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் மறுபக்கம் மத்தியூஸ் 10 (14), பிரியன்யன் 2(8), சில்வா 2 (7), பெரேரா 1(4), பிரசன்னா 29(32) என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். இறுதிவரை நிலைத்து நின்ற மஹெல சதமடித்து 118 (124) ஆட்டமிழக்க இலங்கைஅணி 48.2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் இந்தியஅணி சார்பாக யாதேவ் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 53 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஆக்சர் பட்டேல் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 40 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அஸ்வின் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி.43 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், ராயுடு 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், குல்கர்னி 9.2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 58 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

243 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியஅணியின் ஆரம்ப வீரர்களான தவான் மற்றும் ரஹானே சிறந்த அடித்தளம் இட்டனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 12ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 62ஐத் தொட்டது. அப்போது 31 (47) ஓட்டங்களுடன் பெரேராவின் பந்தில் ரஹானே ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ராயுடு 24.3 பந்துப்பரிமாற்றத்தில் இந்தியஅணியின் ஓட்டம் 131 ஆக இருந்தபொழுது 35 (46) ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். ஆயினும் டவான் 91(79) ஓட்டங்களையும், கோஹ்லி 53(60) ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 44.1 பந்துப்பரிமாற்றத்தில் நான்கு இலக்குகளை மாத்திரமே இழந்து அபார வெற்றியை பதிவுசெய்தது.

பந்துவீச்சில் இலங்கைஅணி சார்பரக குலசேகர 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், பெரேரா 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், டில்சான் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டத்தில் தமது பன்னிரெண்டாயிரம் ஓட்டங்களை மஹலவும், ஆறாயிரம் ஓட்டங்களை கோஹ்லியும் கடந்தனர். மஹல இந்த மைல் கல்லை எட்டிய மூன்றாவது இலங்கை வீரராவார். ஐந்து போட்டிகளைக் கொண்ட இத் தொடரில் முதல் மூன்றிலும் வெற்றி பெற்ற இந்தியஅணி தொடரைத் கைப்பற்றியுள்ளது. போட்டியின் ஆட்ட நாயகனாக மஹல் தெரிவு செய்யப்பட்டார்.

(ற-ரி)

மைலோ கிண்ண உதைபந்து

## ஐயனார், இருதயராஜா அடுத்த சுற்றுக்கு

யாழ்ப்பாணம் நவ 9

மைலோ வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம் நேற்றுமுன்தினம் தீவகத்தில் ஆரம்பமானது. வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகமும் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகமும் தீவக்த்திலிருந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அரையிறுதியாட்டம்

நேற்று மாலை நடந்த அரையிறுதி ஆட்டங்களில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழகமும் வேலணைத் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகமும் ஆடின. 2:0 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் வெற்றிபெற்றது. மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகமும் மோதின. 1:0 என்ற கோல் கணக்கில் இருதயராஜா வெற்றி பெற்றது.

முதல் சுற்று - ஞாயிறு

முன்னதாக, முதல் சுற்று ஆட்டங்கள் நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்றன. நேற்றைய ஆட்டங்களில், புங்குடுதீவு பாரதி வி.கவுக்கும் புங்குடுதீவு நசரேத் வி.வுக்கும் இடையிலான போட்டி கோல்கள் எதுவும் அடிக்கப்படாத நிலையில் சமநிலையானது. தகர்ப்பு உதைகளில் 5:4 என்ற கோல் கணக்கில் நசரேத் வெற்றி பெற்றது. நாரந்தனை அண்ணா வி.கவுக்கும் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் அண்ணா வெற்றி பெற்றது. மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.கவுக்கும் தம்பாட்டி காந்திஜி வி.கவுக்கம் இடையிலான ஆட்டம் கோல்கள் எதுவுமின்றி சமநிலையான்து. தகர்ப்பு உதைகளில் 4:3 என்ற கோல் கணக்கில் இருதயராஜா வெற்றி பெற்றது.

முதல்சுற்று - சனி

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களின் விவரம் வருமாறு:
நாரத்தனை அண்ணா வி.கவை எதிர்த்து புங்குடுதீவு நண்பர்கள் வி.க. மோதியது. இதில் நாரத்தனை அண்ணா வி.க. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தம்பாட்டி காந்திஜீ வி.கவுக்கும் புங்குடுதீவு சண் ஸ்ரார் வி.கவுக்கும் இடையிலான ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜீ வி.க. 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. வேலணை ஐயனார் வி.கவுக்கும், புங்குடுதீவு சென். சேவியர் வி.கவுக்கும் இடையிலான ஆட்டம் இரண்டு அணியினரும் கோல் அடிக்காததால் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தகர்ப்பு உதைகளில் வேலணை ஐயனார் வி.க. 9:8 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)

## தொடர்ச்சி

### 13 மூலம்

பாரதம் கையெழுத்திட்டது. 13 ஆவது திருத்தம் என்பது இந்தியாவால் தமிழர் சார்பில் எடுத்துரைத்த விடயங்களுக்கு இலங்கை அரசு கையளித்த ஒரு முழுமையற்ற தீர்வு ஆவணம். 13 ஆவது திருத்தம் முக்கியமான அதிகாரங் களை நியாயமான முறையில் மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் பகிர்ந்து கொடுத்துள்ளதா என்ற கேள்விக்கு விடை தேடாமலேயே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. முழுநாட்டுக்கும் ஏற்புடைத்தான இந்தச்சட்டம் தெற்கில் உள்ளவர்களுக்குப் பெரிய பிரச்சனையாக அமையவில்லை. அவர்கள் யாவரும் ஒரே இனத்தவர்கள். எம்மையோ இந்தச் சட்டம்பலவிதங்களில்பாதித்தது.

சொன்னது நடந்தது

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பார்கள், தென்னவர்கள் என்றார்கள். அது நடந்தது. மாகாண அதிகாரங்களை வலுவற்றதாக்க வழி ஏற்படுத்தப்படும் என்றார்கள். அது நடந்தது. சடங்கு ரீதியான பதவியில் இருத்தப்படும் ஆளுநர் அந்தச் சட்டத்தை வைத்தே சபைகளின் அதிகாரங்களைத் தனதாக்கிக் குறுக்கிட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றார்கள். அதுவும் நடக்கின்றது. எதுவுமே இல்லை இந்த 13 ஆவது திருத்தத்தில் என்றார்கள். அதைத்தான் நாங்கள் தேர்தல் காலத்திலும் கூறினோம். இப்பொழுதும் கூறி வருகின்றோம்.

அதிகாரம் இல்லாத வடமாகாண சபைக்கு ஏன் நீங்கள் தெரிவானீர்கள் என்று கேட்பீர்கள். நியாயமான கேள்வி அது. முன்னர் இதேபோல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நாங் கள் புறக்கணித்ததால் அரசின் கையோங்கி தமிழ்ப்பேசும் பிரதேசமான கிழக்கு மாகாணம், பெரும் சிங்கள ஊடுருவல்களுடன் தற்பொழுது காட்சி அளிக்கின்றது. நாம் சுதந்திரம் பெற முன் 5 சதவீதத்திற்கும் குறையஇருந்தகிழக்கு மாகாண சிங்கள மக்களின் விகிதாசாரம் தற்பொழுது 30 சதவீதத்தைத் தாண்டி விட்டது.

பாரபட்சம்

நியதிச்சட்டங்களை அனுமதிப்பதில் ஏனைய மாகாணங்களில் இல்லாத கட்டுப்பாடுகளை ஆளுநர் எம் மாகாணத்தில் பிரயோகித்து வருகிறார். உதாரணத்திற்கு அண்மையில் வடமாகாண முதலமைச்சர் தமக்கென உத்தியோகபூர்வமான நிதியம் ஒன்றைத் திறக்க அனுமதி மறுக் கப்பட்டுள்ளது. வடமாகாண சபைக்கென ஒரு நிதியம் இருக்கின்றது. அது பிரதம செயலாளர் கட்டுப்பாட்டில் இயங்குகின் றது. அதை விட்டு முதலமைச்சர் நிதியம் ஒன்றை அமைக்க நாங்கள் முற்பட்ட போது அது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்கள் நான்கில் அவ்வாறான நிதியங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி ஜனாதிபதியிடம் இந்திய தூதுவரால் அண்மையில் வினவப்பட்டது. அதற்கு அவர் வழங்கிய பதில், நாங்கள் பதவிக்கு வர முன்னர் திறக்கப் பட்டவையே அந்த நிதியங் கள். நாங்கள் வந்த பின் அவ்வாறான நிதியங்களைத் திறக்க இடமளிக்கவில்லை. திறக்க விடவும் மாட்டோம் என்றாராம்.

இராணுவ ஆட்சி

இன்றைய கொழும்பு அரசின் மனோநிலையை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர் கள். அதே மனோநிலையால்த் தான் 'புலிவரப் போகிறது என்று கூறி சுமார் ஒன்றரை இலட்சம் படையினர் வடமாகாணத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளார் கள். கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையில் எல்லா விதத்திலும் அவர்கள் உள்ளீடுகின்றார்கள்.

உண் மைகளை உள்ளூரில் கூறினால் 'உனக்கும் புலிகளுக்குந் தொடர்புண்டு என்று கூறி விசாரணைக்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

மாகாணசபையை கலைத்து விடுவார்கள்

நாங்கள் இங்கு பேசும் பேச்சுக்கள், உங்கள் கேள்விகளுக்கு நாங்கள் வழங்கும் பதில்கள் எம்மை மட்டும் அல்ல எமது வடமாகாண சபையையும் பாதிக்கக் கூடும். அதாவது உணர்ச்சிபூர்வமான எமது பேச்சுக்களை வைத்து எமக் குப் பயங்கரவாத பூச்சைப் பூசி எமது வடமாகாண சபையைக் கலைக்கவும் தயங்காது எமது கொழும்பு அரசு. ஒன்றரை இலட்சம் படை வீரர்கள் முகாம் இட்டிருக்கும் இடத்தில் அவர்களை பாதிக்கும் கருத்துக் களை நாம் எடுத்தியம்பும் போது மிக்கவனம்அவசியம். நிதானம் அவசியம். அந்த நிதானத்தை வைத்து நாம் கையாலாகாதவர்கள் என்ற கருத்தைப் பரப்பி வராதீர்கள். சூழலுக்கு ஏற்பச் சூள் உரைப்பதே இன்றைய சூழலில் சூரத்தனம். இல்லை என்றால் சுத்த முட்டாள் என்று பட்டம் கட்டி விடுவார்கள்.

13 இல் பலனில்லை

13 ஆவது திருத்தமானது மேலும் திருத்தியமைக்கப்பட்டாலும் அது எமக்கு நன்மைபயக்காது. யாப்பின் அடிப்படை ஒற்றையாட்சியில் இருந்து மாற்றப்பட வேண்டும். எமது தனித்துவத்தை, சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கியதாக அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதனைக் கோர, கொண்டுவர இந்திய அரசுக்கு தார்மீக உரித்து உண்டு.

எம் சார்பிலுந் தான் நீங்கள் 1987 ஆம் ஆண்டின் உடன்பாட்டில் கையெழுத்திட்டீர்கள் என்பதை மறவாதீர்கள். நீங் கள் எதிர்பார்த்தவாறு எமது நிலைமை அமையவில்லையா னால் எம் சார்பில் குரல் எழுப்ப உங்கள் நாட்டிற்கு உரிமையுண்டு. எமக்குப் போதிய உரித்தளிக்க எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுமாறு நீங்கள் வலியுறுத்த வேண்டும். வடகிழக்கு மாகாண மக்களிடையே கருத்துக்கணிப்பு நடைபெற வேண்டும் என்பது அந்த உடன்பாட்டின் உள்ளடக்கம். அதை உங்கள் அரசு நடத்துமாறு கேட்கலாம்.

எமது நாளாந்த வாழ்க்கையை மற்றவர்களின் உள்ளீடல்கள் இன்றி நாம் வாழ இந்திய அரசு நடவடிக்கைகளில் இறங்கலாம் - என்றார். (ற-5)

மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா தர்மலிங்கம்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா தர்மலிங்கம் 08.11.2014 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, றஞ்சன்(ஜேர்மனி), ரவிச்சந்திரன் (லண் டன்), ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரத்தினம், சுவர்ணலதா (ஜேர்மனி), கிருஸ்ணவேணி (லண்டன்), தங்கவேலு ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜ்மோகன், யசிந்தா, அனித்தா, மதன், ரஜீவன், ரதீசன், விஜிந்தா, கிருஸ்டிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாகித்தின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2014) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:- 021 790 0186
கேரதீவு வீதி, நாவற்குழி

தகவல்:
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

அருளானந்தன் சதானந்தன்

(Aspestos cement indunstries ltd, ஈவினை)

நவாலியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தன் சதானந்தன் நேற்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சாவித்திரியின் அன்புக் கணவரும், ஆரூரன், நீலகண்டன், திருமதி ப.லீலாவதி, திருமதி பு.அருட்செல்வம், குமரகுருபரன், அரன்மகன், காலஞ்சென்றவர்ளான கு.சரஸ்வதி, சு.உலகநாயகி, புவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந் (HSBC-colombo) ஶ்ரீவித்தியா (கனடா) வின் பாசமிகு தந்தையும், தாரணி, சுதாகர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஆத்மஜா, ஆதித்யா, ஓவியா (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2014) பிற்பகல் 4 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜேஸ்வரி பவனம்,
34/3, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்: மகன்

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சி.யோகநாதன் அவர்களின் அன்புத் தந்தை

முருகர் வல்லிபுரம்

அவர்கள் (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலை சமூகம், யா/ இடைக்குறிச்சி
ஶ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வரணி.

# வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளுக்கு உதவிகள் வழுங்குவதற்கு நடவடிக்கை

அம்பாறை, நவ. 10
அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட திவிநெகும வாழ்வின்எழுச்சி பயனாளிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, தொழிலினை மேம்படுத்தும் வகையில் உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வு கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது, அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் திவிநெகும திட்டத்துக்காக 6.5 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் முயற்சி, விவசாயம், மீன்பிடி, சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் முதற் கட்டமாக தையல் தொழில் மற்றும் மீன் வியாபாரம் ஆகியதொழில்துறைகளை மேற்கொண்டு வரும் 28 தொழில் முயற்சியாளர்களுக்கு தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள், மற்றும் உபகரணங்கள்வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளன. (கு-10)


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நடராஜா



யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் தற்போது கனடா மொன்றியலில் வசித்து வந்தவருமாகிய சின்னத்துரை நடராஜா 05.11.2014 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சந்திரா ஆகியோரின் அன்புக் கணவரும், இளங்குமரன், இளங்கோவன், இளங்கோமதி, இளங்குபேரன், இளங்கவிதா, இளங்குவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயலக்சுமி, ராஜலக்சுமி, ஆரணி, சிந்திகா, சுந்தரகுமார், சிவனொளி ஆகியோரின் அன்பு மாமனாரும், மிறோஷன், இந்துஜன், லேகா, லக்ஷன், லதிகா, லக்ஷினி, சுமனகுமார், சுதனகுமார், சுஜனகுமார், அகனன், ஐஷானி, ஷயானி, ஸ்ரீத்தி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2014) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணிவரையும் கிரியைகள் நடைபெற்று, 1591 Elgin Mills East Richmond Hill Ontario L4S IM9 இல் அமைந்துள்ள மயானத்தில் பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தி விநாயகர் கோவிலடி,
உடுவில் தெற்கு, சுதுமலை.
077 842 0281

(53925) (4.0)

தகவல்:
வாசுகி-பிரதீபன் (பேறாமகள்),
பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஞானசேகரம்



சிறுப்பிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஞானசேகரம் நேற்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புச் சகோதரனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், ஜெயகுமார் (ஜெயா), விஜிதா (பிரான்ஸ்), ஜெயதீபன் (தீபன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாரஞ்சினி, சாந்தகுமார் (பிரான்ஸ்), யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிதர்சன், மிதுர்சன், யதுர்சன், சரணியா (பிரான்ஸ்), ஷகானா, கஜானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.11.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி கிழக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

(53933) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
077 115 1471, 077 724 4371



### விநாயகமூர்த்தி சிவசாமி

(முன்னாள் விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம், வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)



புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.31, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சிவசாமி (வாழ்நாள் பேராசிரியர்), 08.11.2014 சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - மகேஸ்வரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், திருமதி விசாலட்சிப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), செல்வி பூமணி (ஓய்வுபெற்ற கலாசார உத்தியோகத்தர்), திருமதி சரோஜினிதேவி (ஓய்வுபெற்ற ஊழியர் புங்குடுதீவு ப.நோ.கூ.ச) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரன் (ஓய்வுபெற்ற லிகிதர் மஸ்கன் கம்பனி), சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபன் (கனடா), விநோதன் (தபால் அலுவலக ஊழியர், புங்குடுதீவு), திருமதி தேவரஜனி ஆகியோரின் மாமனும், சுகந்தினி, அருட்சிவம் ஆகியோரின் பெரியதந்தையும், சுயதீபன், விஜயதீபன், சுவாதி, அட்சரா, நிதுரசனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(53922) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.


# பிரஜைகள் சமாதானத்துக்கான விருது அருட்தந்தை பென்ஞமின் மில்லருக்கு



மட்டக்களப்பு, நவ. 10
மட்டக்களப்பில் அருட்தந்தை பென்ஞமின் ஹென்றி மில்லர் பிரஜைகள் சமாதானத்துக்கான விருது வழங்கி கௌரவிக்கபட்டுள்ளார்.

தேசிய சமாதானப் பேரவை இவருக்கான இந்த கௌரவப் பட்டத்தை வழங்கியுள்ளது. இந்த நிகழ்வு மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட அரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜோ வில்லியம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் திருமதி. மிச்சல் செஸன் மற்றும் இலங்கையிலுள்ள நோர்வே நாட்டுத்தூதுவர் கிறைட்டோ, மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப், திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, தேசிய சமாதான பேரவையின் ஆலோசகர் ஜெகான் பெரேரா உட்பட சமய சமூக பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் தலைவர்கள் வெளிநாட்டு பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

விருதை தேசிய சமாதானப் பேரவையின் செயலாளர் கே.திலகசிறி அருட்தந்தை பென்ஞமின் ஹென்றி மில்லரிடம் வழங்கி வைத்தார். அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவரான அருட்தந்தை பென்ஞமின் ஹென்றி மில்லர் 1948ஆம் ஆண்டு மட்டக்களப்புக்கு வருகை தந்து கடந்த 66 வருடங்களாக மட்டக்களப்பில் மனிதாபிமான மற்றும் சமூகப் பணி மற்றும் கல்விப்பணியாற்றி வருகின்றார். சமாதான சகவாழ்வு வேலைத்திட்டத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்த அருட்தந்தை பென்ஞமின் ஹென்றி மில்லர், போர் நிறுத்தத்தின் போது நோர்வே நாட்டின் சார்பில் போர் நிறுத்தக் கண்காணிப்பாளராக மட்டக்களப்பில் கடமையாற்றினார்.

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் வளர்ச்சிக்காக அதன் பொறுப்பாளராக மற்றும் ஆசிரியராக கடமையாற்றியதுடன், ஆங்கிலக் கல்வியை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். மட்டக்களப்பில் சர்வமத அமைப்பு மற்றும் சமாதான பேரவை உட்பட பல்வேறு சமூக சிவில் அமைப்புக்கள் என்பவற்றில் முக்கியஸ்தராக இருந்து, யுத்த காலத்தில் சிறந்த மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ரிதிதென்ன பஸ் டிப்போவுக்கு ஹிஸ்புல்லாஹ் திடீர் வருகை

மட்டக்களப்பு, நவ. 10
மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லை கிராமமான ரிதிதென்னவுக்கு வருகைதந்த மட்டக் களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கடந்த சனிக்கிழமை இலங்கை போக்குவரத்துச் சபையின் ரிதிதென்ன பஸ் டிப்போவுக்குத் திடீரென வந்தார்.

இதன் போது ரிதிதென்ன பஸ் டிப்போ முகாமையாளர் ஏ.எம். ஜவ்பர் பிரதியமைச்சரிடம் டிப்போவில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிவித்தார். இதனை கருத்திகொண்ட பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் குறித்த டிப்போவில் அவசரமாக கிணறொன்றை அவரின் நிதியிலிருந்து நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். (10)


## 10ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர்
### இராசையா நடனசபாபதி சர்மா



ஆண்டுகள் பத்து நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே
அவனியில் எம்மைப் பண்புடனே
வளர்த்து நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
எம்.பி.வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

தோற்றம்: 09.11.1948 மறைவு: 31.10.2004

(53930)(7.6)



## கண்ணீர் காணிக்கை

### பேராசிரியர் வி.சிவசாமி

(முன்னாள் தலைவர் சமஸ்கிருததுறை
யாழ்.பல்கலைக்கழகம்)



பார்புகழும் பேராசிரியராய்
பல் கலைகளின் ஆரானாய்
மாணவர் மனங்களில் மாண்புடன்
நீங்காது நிலைத்திருக்கும் உத்தமரே
பல்கலைக்கழக
ஆரம்பம் முதல் இன்றுவரை
எம் குடும்பத்தின் உறவாய்
வழிகாட்டியாய் திகழ்ந்தீரே
நீங்கள் என்றும் நேசிக்கும்
பார்வதி சமேத பரமேஸ்வரன்
தாள்பற்றப் பணிந்து
விழிநீர் சொரிந்து நிற்கின்றோம்.

S.தணிகாசலம் (J.P) குடும்பம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

(53936)(7.6)

# அரசிலிருந்து விலகுமாறு மு.காவுக்கு அழுத்தம்

கொழும்பு, 10

அரசை விட்டு விலகுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு, கட்சியின் உறுப்பினர்கள் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

அரசை விட்டு விலகி பொது வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அண்மையில் கிழக்கு மாகாணத்துக்குச் சென்றிருந்தார். அப்போது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானம் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசு தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்காத காரணத்தால், ஆளும் கட்சிக்கான ஆதரவினை மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அப்போது கோரிக்கை விடுக்கப்பட்டது என்று தெரிவிக் கப்படுகின்றது.

ஆளும் கட்சியில் தொடர்ந்தும் நீடிப்பதால் கட்சியின் வாக்கு பலம் வீழ்ச்சியடையக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றது என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கட்சி என்ற ரீதியில் பொறுமையுடன் செயற்பட வேண்டும் எனவும் அரசைக் கொண்டு அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொடர்ச்சியாக அரசு மெத்தனப் போக்கைப் பின்பற்றினால் கடுமையான தீர்மானம் ஒன்றை எடுப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என்றும் அமைச்சர் ஹக்கீம் அங்கு தெரிவித்துள்ளார் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றே இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது. (ற)


## ஆங்கில வகுப்பு

ஐரோப்பியர்களுடன் ஆங்கிலம் பேச, பல்கலைக் கழகங்களில் நல்ல பயிற்சி நெறிகளைத் தெரிந்திட ஆங்கிலத்தில் உயர் O/L, A/L பெறுபேறுகளை அடைய வேண்டுமா? கவலையை விடுக (யாழ் மற்றும் கிளிநொச்சி) பயிற்றப்பட்ட ஆசிரியர் 'கரன்' குழு/ தனிப்பட்ட வகுப்புகள். தொடர்பு:0776114068 (53942)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் 30 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் வியாபார நிர்வாகமாணி (BBA) சிறப்பு பட்டம் பெறும்

**குணசேகரன் சுரேன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துபவர்கள்

**விமலசிங்கம் சற்குணேஸ்வரி, அபிமன்யூ (ஜேர்மனி)**

## வாழ்த்துகின்றோம்



Congratulation



செல்வன் வி.அனோஜன் — செல்வன் செ.சதீசன்

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் 30 ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணிப் பட்டம் பெறும் எமது விரிவுரையாளர்களை Spectra Skills நிறுவனம் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**Spectra Skills நிர்வாகமும், சகவிரிவுரையாளர்களும்.**

## சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர்

**உயர் திரு.**

**செ.சேதுராஜா**

அவர்கள்

தீவக மண்ணிலே தோன்றிய சிந்தனைச் சிற்பி அவர்கள் எண்ணம், சொல், செயல், நிதானம், உறுதியும் என்ற நற்சிந்தனையால்!

மாணவர்களுக்கு கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் கற்பித்து முன்னிலைப்படுத்தியதோடு, பாடசாலை அபிவிருத்திப் பணியும் வளர்ச்சிபெற சேவையாற்றி மணிவிழா காணும் அதிபர் அவர்களின் ஓய்வுகாலம் ஒளிமயமானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C/17590)

**தர்மகர்த்தா சபையினர், பணியாளர்கள், சிறுவர்கள், முதியோர்கள், ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி**

## 13th Year Remembrance



Born 29 .03.1950

Called to Rest 10.11.2001

**Late Mr.B.M.Edward**

B.Sc(Hons) SLPS -1

Thirteen years have flown so quickly
Seems like yesterday that you were called to eternal life
But the fond memories will never ever Fade away

Sadly missed and fondly remered by
Wife, Children, Sisters and loved ones

69/2, Vembady Road,
Jaffna.

(53940)

## கண்ணீர் அஞ்சலி



சமஸ்கிருதத் துறையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கி நெறிப்படுத்திய பெருந்தகை

**கலாநிதி**

**விநாயமூர்த்தி சிவசாமி**


(ஓய்வு நிலை சமஸ்கிருதப் பேராசிரியர்)

அவர்களின் பிரிவுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சமஸ்கிருதத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (53939)

## 16 ஆம் நாள் ஞாபகார்த்தமும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
30 . 11 . 1943



மறைவு
26 . 10 . 2014

**முத்துக்குமாரு பாசுபதேஸ்வரன்**

(மொட்டை பாஸ்- (Eeswaran motor works)

ஜெய வருடம் ஐப்பசித்திங்கள் 9 ஆம் நாள் (26.10.2014) ஞாயிற்றுக் கிழமை பூர்வபட்ச திருதியை திதியில் எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு சிவபதம் அடைந்த அமரர் முத்துக்குமாரு பாசுபதேஸ்வரன் அவர்களின் சபிண்டீ கரண நிகழ்வு மற்றும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை ஆகியன இன்று (10.11.2014) திங்கட் கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்து நிகழ்விலும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.


இல.114,
இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2711 (53938) (4.6.3)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

## முருகர் வல்லிபுரம்

**(தம்பையா)**



குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகர் வல்லிபுரம் (தம்பையா) நேற்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், தங்கராசா, யோகராசா, முருகேசு (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்), மார்க்கண்டு, பொன்னம்மா, மாணிக்கம் (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், தென்மராட்சி கிழக்கு), முத்துக்குமாரு (ஆசிரியர்- யா/ திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கொடிகாமம்), அன்னம்மா, சிவசோதி (ஆசிரியை - யா/ ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வரணி), யோகேஸ்வரி, சிவானந்தம் (சுவிஸ்), ஞானக்கொழுந்து (சுவிஸ்), காலஞ்சென்ற சாரதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2014) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

**ஆதிசிவன் கோயில் வீதி,**
**குடமியன் வரணி.** (53922) (45.6)

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## தொடர்ச்சிகள்

### கடற்றொழில்

இந்த முறை வடக்கில் இருந்து பெரும் எண்ணிக்கையான பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ற-17)

### பதவிக்காக

னர் ஒரு மணித்தியாலம் ஆட்சேபனை தெரிவிப்பதற்கான காலம் ஒதுக்கப்படுகின்றது" என்றும் அங்கு அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் அதற்கு முன்னதாகவே உயர் நீதிமன்றத்தை ஜனாதிபதி நாடியுள்ளதன் மூலம் தேர்தல் ஆணையாளரின் சுயாதீனத்துவம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் ரணில் விக்ரம சிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

### இந்திய

தமிழ்நாட்டு மீனவர்கள் ஐந்து பேரும், 995 கிராம் போதைப் பொருளை வைத்திருந்திருந்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டனர். அவர்களுக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ற-5)

### தமிழுரை

2009,10,11,12,13,14 ஆம் ஆண்டுகளைக் கூட்டி ஒரு பெருந் தொகையையும் கணக்குக் காட்டுகிறார். தமிழ் மக்கள் முட்டாள்கள் என்ற எண்ணம் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற அங்கத்தவர்களிடையே இருக்கிறது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த முறை வரவு - செலவு திட்டத்தில் ஜனாதிபதி புதிதாக முன்மொழிந்தார். அவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது என்று. ஆனால் வடக்கு மாகாண சபை அவர்களுக்கு ஏற்கனவே 3 ஆயிரம் சம்பளமாக வழங்கி வருகின்றது. ஜனாதிபதியும் தற்போது வழங்கவுள்ளார். ஏனென்றால் இது தேர்தலுக்கான வரவு - செலவு திட்டம். முன்பள்ளி ஆசிரியர்களின் வாக்குகளும் ஜனாதிபதிக்கு தேவை."- என்று தெரிவித்துள்ளார். (ற)

### வாசிப்புப்

அத்துடன் அதனை சிறிய நூலகமாக கொண்டு நடத்துவதற்குரிய பயிற்சியும் அமைச்சால் வழங்கப்படும். இதனூடாக கிராமத்திலுள்ள சிறுவர்களின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்குரிய நடவடிக்கைகளை குறித்த அமைப்புக்கள் மேற்கொள்ள வேண்டும். 2002 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் வடக்கில் இதுவரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் 12 வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்திலும் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஒரு வருடத்தில் 25 கிராமங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். (ற-5)

### மலையகத்தில்

ணம் மேற்கொண்டமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"எமது நாட்டில் சுனாமி ஏற்பட்ட பொழுது எந்த உணர்வுடன் மலையக மக்கள் வடக்குக்கும் ஏனைய பகுதிகளுக்கும் சென்று மனிதாபிமான உதவிகளை செய்தார்களோ அதே மனிதாபிமான ரீதியில் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு கொஸ்லந்தை மீரியபெத்த பகுதிக்குப் பயணம் செய்தார்கள். அதில் எந்தவிதமான அரசியல் நோக்கமும் அவர்களிடம் இருக்கவில்லை என்பதை என்னால் தெளிவாக கூறமுடியும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கொஸ்லந்தை மீரியபெத்தவுக்குப் பயணம் செய்தபோது நானும் அவர்களுடன் கலந்துகொண்டேன். அவர்கள் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு இந்தப் பயணத்தில் அரசியல் ரீதியான அல்லது வேறு எண்ணங்கள் இருந்தால் என்னையோ அல்லது ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கனேசனையோ அழைக்காமல் சென்றிருக்கலாம். இதே வேளை, அந்தப் பயணத்தின் போது எந்தவிதமான அரசியலையும் அவர்கள் பேசவில்லை. எமது மறைந்த தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் வடக்குக்கு தலைமை தாங்கி இருக்கின்றார். அவர் உயிருடன் இருக்கும் பொழுது அந்த மக்களுக்காக குரல் எழுப்பி இருக்கின்றார். எனவே அவ்வாறான ஒரு நெருங்கிய உறவு அவர்களுடன் எமக்கு இருந்தது. எமது மலையக மக்கள் முன்னணியின் மறைந்த தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரன் அமைச்சராக இருந்துகொண்டும் வடக்கு மாகாண மக்களுடன் நல்ல ஒரு உறவை பேணிவந்தார்.

எதிர்காலத்திலாவது நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட முன்வரவேண்டும். தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எவ்வாறு அவர்களுடைய பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு கொண்டு சென்றுள்ளதோ அதேபோல நாமும் எமது பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்தப் பயணத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ள பொழுது ஏனையோர் அலட்டிக் கொள்வது ஏனென்று புரியவில்லை"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### நாகர்கோயில்

கடந்த மாதம் 20 ஆம் திகதி நாகர்கோயிலில் உள்ள தனது வீட்டிலிருந்து பருத்தித்துறையில் உள்ள தனது நண்பியை பார்க்கச் சென்ற கலியுகமூர்த்தி சுகந்தினி (வயது-34) என்ற பெண் காணாமல் போயிருந்தார். அவர் அடகு வைக்கும் நோக்குடன் 27 பவுண் நகைகளை எடுத்துச் சென்றிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணின் கணவரால் 24 ஆம் திகதி பிற்பகல் செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். ஆயினும் நான்கு நாள்களின் பின்னர் வடமராட்சியில் இருந்து கொடிகாமம் செல்லும் வீதியின் ஓரமாக முள்ளி பற்றைக் காட்டுக்குள் இருந்து குறித்த பெண் கழுத்து வெட்டப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக நெல்லியடி பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வந்தனர். பின்னர் விசாரணைகள் பருத்தித்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன.

அதனையடுத்துப் பல்வேறு கோணங்களில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். இது தொடர்பில் கொலை செய்யப்பட்ட பெண் சந்திக்க வந்ததாக கூறப்படும் நண்பியிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களை பொலிஸார் பதிவு செய்திருந்தனர். இந்த நிலையில் குறித்த பெண்ணின் தொலைபேசி பதிவுகள் மற்றும் அந்த பெண்ணுக்கு இறுதியாக வந்த தொலைபேசி அழைப்புகள் தொடர்பிலும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். குறித்த பெண்ணின் தொலைபேசி பதிவுகளை தொலைபேசி இணைப்பு வழங்குநர்களிடம் இருந்து பெறுவது தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றிடம் பொலிஸார் அனுமதி கோரியிருந்தனர். பருத்தித்துறை நீதிமன்றும் பொலிஸாருக்கு அனுமதியை வழங்கியிருந்தது

இந்த நிலையில் அந்தத் தரவுகளைப் பெற்று விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த புதன்கிழமை அவரது வீட்டில் வைத்து கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அப்போது மன்றில் முன்னிலையான பொலிஸார், சந்தேக நபரை தமது கட்டுப்பாட்டில் வைத்து இரண்டு நாள்கள் விசாரணை செய்வதற்கான அனுமதியை மன்றிடம் கோரினர். அதற்கு மன்று அனுமதி வழங்கியது.

இரண்டு நாள்கள் விசாரணைகளை தொடர்ந்து சந்தேக நபர் மீண்டும் நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-109)

### முடிவு

தடவையாக ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் நான், எதிர்வரும் 19 ஆம் திகதி எனது நான்கு வருடப் பூர்த்தியை முடித்து, மீண்டுமொரு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஏதாவது தடைகள் உள்ளதா?" என்பதை ஆராய்ந்து தெரிவிக்குமாறு உயர் நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டிருந்தார். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் இதனைத் தெரிவிக்குமாறும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் ஜனாதிபதி கோரியுள்ள விளக்கம் தொடர்பில், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் விளக்கத்தை வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வெள்ளிக்கிழமை, சட்டத்தரணிகள் சங்கத்தினர், ஜனாதிபதியின் கோரிக்கை மீதான விவாதம் பகிரங்க அமர்வாக நடத்தப்பட வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றப் பதிவாளரிடம் தமது மனுவைக் கொடுத்த போது, கோரிக்கை மீதான விவாதம் முடிந்து விட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களிடமிருந்து 40 விளக்கங்கள் வரையில் உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு, வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு முன்னர் கிடைக்கப் பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் வேண்டுகோள் மீதான விசாரணை முடிந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டாலும், அரசமைப்பின் பிரகாரம் மீண்டும் ஒரு விசாரணை நடத்துவதற்கு உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்று சட்டத் தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி சமர்ப்பித்த கோரிக்கை தொடர்பில் உயர் நீதிமன்றம் இன்று பதில் வழங்கவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட முடியும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-5)

### தேர்தல்

2 ஆம் திகதி தேர்தலை நடத்த திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வரவுள்ளார். அவர் இலங்கையில் இரு நாள்கள் தங்குவார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டால், அது பாப்பரசரின் பயணத்திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும் என்று கருதப்பட்டது.

அதனால், முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிய வருகிறது. ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால், ஜனவரி 13 ஆம் திகதி பாப்பரசர் கொழும்பு வருவதில் இடையூறுகளை ஏற்படுத்தலாம் என்று கத்தோலிக்கத் திருச்சபை வட்டாரங்களில் கவலை நிலவியது. தேர்தல் முடிவுகளில் தாமதமோ, இழுபறியோ ஏற்பட்டால், குறிப்பாக மீள்வாக்கு எண்ணிக்கை நடக்கும் சூழல் உருவானால் அது பாப்பரசரின் பயணத்துக்கான பாதுகாப்பு ஒழுங்குகளைப் பாதிக்கும் என்று வத்திக்கான் கவலை கொண்டிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டே, ஜனவரி 2 ஆம் திகதி தேர்தல் நாளை முன்தள்ளி வைக்க அரசு தீர்மானித்துள்ளது. அதனால், வத்திக்கானின் பயணத் திட்டத்தில் மாற்றங்கள் இருக்காது என்றும் இலங்கை அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலை நடத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிர்ஷ்டமாக அமையும் என்று அவரது சோதிடர்கள் ஆலோசனை கூறியிருந்தனர். எனினும், தற்போது ஜனவரி மாதத்தில், 23 ஆம் திகதி வரை எந்த நாளில் தேர்தலை நடத்தினாலும், அவருக்கு வெற்றி கிடைக்கும் என்றும் சோதிடர்கள் அறிவுரை கூறியுள்ளனர் என்றும் அந்த கொழும்பு ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது. (ற-5)

### மீனவர்

என்.இன்பநாயகம்.

யாழ். மாவட்டத்தில் காரைநகர், வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் இந்திய ரோலர் படகுகள் வந்து செல்கின்றது. இதனால் இந்தப் பகுதி மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்குகின்றார்கள். வலி.வடக்கு, சேந்தான்குளம் பகுதியில் கடற்படையினர் மீனவர்களினுடைய நாளாந்த தொழிலைச் செய்ய விடாது அடாவடித்தனமான செயற்பாடுகளின் ஊடாக கட்டுப்படுத்தி வருகின்றனர். சேந்தான் குளத்தின் வறிய மீனவர்களினுடைய வலைகளை அறுத்து தொழில்களை செய்யவிடாது அச்சுறுத்தி அனுப்பியுள்ளனர். - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வவுனியாவிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது.

"இது கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்றது. இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு இச் செயற்பாடு தொடர்பாக தெரியப்படுத்தினோம். இதனடிப்படையில் கடற்படையினருடன் பேசி தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் கூட மீண்டும் அவர்கள் அச்சுறுத்தி தொழில் செய்ய விடாது தடுத்து வருகின்றனர். இப்படியானநிலையில், இந்திய மீனவர்களின் ரோலர் பிரச்சினையை காரணம் காட்டி வடமராட்சி பகுதியின் இன்னொருசாரார் தாமும் அவ்வாறு தொழில் செய்யப் போகின்றோம் என்று கூறி வருகின்றனர். இந்திய ரோலர் பிரச்சினை என்பது இந்திய, இலங்கை அரசுகளின் ஓர் அரசியல் பிரச்சினையாக மாறியுள்ளது. அந்த வகையில் இந்த பிரச்சினையை தீர்ப்பது என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது. மீனவர்களுடைய பிரச்சினையை ஆளும் தரப்புக்கள் தமது சுய நலத்துக்காக பயன்படுத்துகின்றனர். ஆகவே இந்த இலங்கை அரசாக இருந்தாலும் சரி, இந்திய மத்திய அரசாக இருந்தா லும் சரி இந்தப் பிரச்சினையை தீர்க்காமல் இருக்கப்பார்க்கிறார்கள். ஆகவே, மீனவர் சமூகம் தேர்தல் காலத்தில் அவர்கள் வழங்கும் வாக்குறுதிகளை எந்தளவிற்கு நம்பிக்கையுடன் பார்க்க முடியும்? இந்த மீனவர்கள் தங்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒற்றுமையாக செயலாற்ற வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-5)

### இலங்கைக்கு

"சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட நீர் மூழ்கிக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வருவது தளபாடங்களை ஏற்றிக் கொண்டு அல்ல. சந்தை நோக்கத்துடன் நீர்மூழ்கிக்கப்பல் வராது. இந்தியாவின் நலனே பிராந்தியத்தின் நலம். இதனைஅனைவரும்உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் பாதுகாப்புடன் விளையாட வேண்டாம்"- என்று இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய ஊடகப் பேச்சாளர் எம்.ஜே. அக்பர் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் நலனைப் புறந்தள்ளி இலங்கை அரசுடன், இந்திய மத்திய அரசு நட்பு வைத்துக் கொள்ளும் மாற்றத்தையும் அவர் இதன் போது இலங்கைக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தேசிய ஊடகப் பேச்சாளர் எம்.ஜே.அக்பர், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில், கடந்த வெள்ளிக்கிழமை, இந்திய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு நினைவுரையை நிகழ்த்தினார். அதன் போதே அவர் மேற்கண்ட எச்சரிக் கையை இலங்கைக்கு விடுத்தார். "எமது பிராந்தியத்தில் சமாதானமும் நட்பும் அவசியமாகும். அயல் நாடுகளுடனான உறவு மிக முக்கியமானதாகும். இந்திய பிரதமர் ஜப்பானுக்கும் சென்றார். சீனாவுக்கும் சென்றார். இதேவேளை பயங்கர வாதத்தை தவிர ஏனைய அனைத்து முரண்பாடுகளையும் பேசித்தீர்க்க முடியும். ஆனால் பயங்கரவாதத்துக்கு இடமளிக்க முடியாது. எமது பிராந்திய நாடுகள் எவ்வாறு நவீன நாடுகளாக உருவெடுப்பது என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

சங்காயில் உற்பத்தி செய்யப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வருவது தளபாடங்களை ஏற்றிக்கொண்டு அல்ல. சந்தை நோக்கத்துடன் நீர்மூழ்கிக் கப்பல் வராது. இந்தியாவின் நலனே பிராந்தியத்தின் நலம். இதனை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்தியாவின் பாதுகாப்புடன் விளையாட வேண்டாம். முரண்பாடுகள் இருக்கலாம். புதுடில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் கூட முரண்பாடுகள் இருக்கலாம். போரின்போது இந்தியா இலங்கைக்கு மிகப்பெரிய உதவியை வழங்கியது. அந்தச் சூழ்நிலையின் தாற்பரியத்தை உணர்ந்து இந்தியா இலங்கைக்கு உதவி செய்தது. 1970 ஆம் ஆண்டுகளில் நாம் வாழவில்லை. பாதுகாப்புடன் விளையாட வேண்டாம். இந்தியா இந்தப் பிராந்தியத்தில் பெரிய நாடாக இருப்பது இயற்கையாக அமைந்த விடயம். இந்த நிலையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சிறந்த உறவு முக்கியம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் வருகை தராமை தவறாகும். ஆனால் தற்போதைய இந்தியப் பிரதமர் தனது பதவியேற்புக்கு ஜனாதிபதி மஹிந்தவை அழைத்தார். இந்த விடயத்தில் மாநிலத்தின் உணர்வு குறித்து மத்திய அரசு கவலை கொள்ளவில்லை. மாற்றத்தை புரிந்து கொள்ளுங்கள்."- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

### புலித்

தடையை நீக்குமாறு அண்மையில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் அறிவித்திருந்தது. எனினும் இது தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த வழக்கு மீண்டும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்து மீள்பரிசீலனை செய்து, தமது நிலைப்பாட்டை தாக்கல் செய்யும் என்று பிரான்ஸ் தூதுவர் கூறியுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தை பொறுத்தவரையில், நீதிமன்ற கட்டமைப்பு ஒருவராலும் தலையீடு செய்ய முடியாத சுயாதீனமான பிரிவு என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

## குற்றங்களும் கைதுகளும்

கொழும்புத்துறை

### இனந்தெரியாதோர் தாக்கியதில் இளைஞன் மருத்துவமனையில்

கொழும்புத்துறை பகுதியில் புதன்கிழமை இரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் இளைஞர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.
கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ்.ஸ்ரீபன் என்பவரே முதுகுப் பகுதியில் காயமடைந்தவராவார்.
கொழும்புத்துறை வீதியில் இரவு நேரம் மின்னொளி குறைந்த இடத்தில் வைத்து அவரைத் தொடர்ந்து வந்த இனந்தெரியாத இருவர் முதுகுப் பகுதியில் கத்தியால் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ—135)

கொழும்பு

### சட்டவிரோத தங்கம் மீட்பு

சட்ட விரோதமாக இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட 6 கோடி ருபா பெறுமதியான தங்கம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.
சிங்கபூரில் இருந்து வந்த வத்தளை பகுதியைச் சேர்ந்த தம்பதிகளால் இந்த தங்கம் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 11 கிலோ 800 கிராம் அளவுடைய தங்கமே அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டது. (வ)

மட்டக்களப்பு

### வெடிபொருள்களுடன் ஒருவர் சிக்கினார்

வெல்லாவெளி, காந்திபுரம், தும்பன்கேணி பகுதியில் வெடிபொருள்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வெல்லாவெளி பகுதியைச் சேர்ந்த 43 வயதான ஒருவர் வெடிபொருள்களுடன் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். சந்தேக நபரிடம் இருந்து 95 கிராம் வெடி மருந்து, 945 கிராம் கந்தகம் உட்பட மேலும் சில வெடிபொருள்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. சந்தேக நபரை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ)

கொழும்பு

### சட்ட விரோத உணவு விற்பனை வர்த்தகர்கள் 35 பேர் கைது

சட்டவிரோதமாக உணவு விற்பனையில் ஈடுபட்ட 35 வர்த்தகர்கள் நீர்கொழும்பு, ஜா—எல மற்றும் கடவத்தை ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஹோட்டல்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர்கள் கைது செய்யப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. காலாவதியான உணவுப் பொருள்களை விற்றமை, கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை, விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் குறித்த 35 வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ)

# கொலைகள் பலவற்றுக்கும் பொறுப்பானவர் கருணாவே

## சாடுகிறார் கேணல் ஹரிஹரன்



டில்லி, நவ.10
இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கொலைகளில் ஈடுபட்டதாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் இந்திய அமைதிப்படையின் முன்னாள் புலனாய்வு பிரிவு தலைவர் கேணல் ரமணி ஹரிஹரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.
அந்தக்குற்றச்சாட்டு தொடர்பில் எந்தவொரு விசாரணைக்கும் தாம் தயார். எனினும் ஏன் இந்தப் பிரச்சினை தற்போது எழுந்துள்ளது என்று ஹரிஹரன் கேள்வி எழுப்பியுள்ளார்.
கருணா அம்மான் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தளபதியாக இருந்தபோதே 300 முஸ்லிம்கள் காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் கொல்லப்பட்டனர்.
600 பொதுமக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டமைக்கும் கருணாவே தலைமை தாங்கினார்.
எனவே அதுதொடர்பான விசாரணைகளுக்கு கருணா ஒத்துழைப்பு வழங்குவார் என்று தாம் எதிர்ப்பார்ப்பதாக ஹரிஹரன் குறிப்பிட்டுள்ளார்.
கருணா தற்போது கூறியுள்ள இந்தக்குற்றச்சாட்டு பெரும்பாலும் அரசியலுடன் தொடர்புடையது என்றே தாம் கருதுவதாக ஹரிஹரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.
எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கருணா முற்றாக மக்களால் நிராகரிக்கப்படுவார்.
இந்நிலையில் தம்மை தொடர்ந்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அரசியலில் ஈடுபடுத்திக் கொள்வதற்காகவே கருணா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.
இந்தநிலையில் கருணா விடுதலைப் புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கும் இலங்கைப் படையினர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கும் விசாரணைகளை கோருவாரா? என்று ஹரிஹரன் கேள்வி எழுப்பியுள்ளார். (வ)

# மதகுரு மாணவருக்கான கலந்துரையாடல் நேற்று

## மன்னாரில் நடைபெற்றது




மன்னார், நவ.10
'சர்வமத நட்புக்கான பயணம்' எனும் கருப் பொருளில் மத குருக்களாவதற்குப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று நேற்று மன்னார் மடு மாதா சிறிய குருமடத்தில் நடைபெற்றது. இந்த ஒன்றுகூடல் மன்னார் சர்வமதப் பேரவையின் அனுசரணையுடன், நல்லிணக்கத்துக்கான வடக்கு கிழக்கு சர்வமத ஒன்றியம் (நெய்வா) அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
அனுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள இஸ்லாமிய, பௌத்த மத குருக்களாக பயிற்சி பெறும் மாணவர்களும், மதப் பெரியார்களும், மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து மற்றும் இஸ்லாமிய மாணவர்களும், மதப் பெரியார்களும், சர்வமத மற்றும் சமூகத் தலைவர்களும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டனர்.
சமாதான சூழ்நிலையை உருவாக்குவது தொடர்பாகவும் அதற்காக நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் விடயங்கள் தொடர்பாகவும், மதங்களுக்கிடையில் நட்புறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் வகையிலான பயிற்சி செயலமர்வும் இதன்போது நடத்தப்பட்டது. அதன்பின்னர் நடைபெற்ற கலந்துரையாடல்களில் மதத் தலைவர்கள் உரையாற்றினர்.
இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், நெய்பா அமைப்பின் தலைவர் சங்கைக்குரிய பிரியரெட்ண தேரர், அதன் செயலாளர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார், மன்னார் சர்வமத பிரதிநிதிகள் மௌலவி அசீம், இந்து மதகுரு தாமகுமார குருக்கள், சிறிய குருமட அதிபர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் மற்றும் ஏனைய மத குருக்கள் கலந்து கொண்டனர். (ற)

### தே.அ.அட்டை வழங்குவதில் மாணவர்களுக்கு சிக்கல்

கொழும்பு, நவ.10
ஜி.சீ.ஈ மாணவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்று ஆள்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆர். எம். எஸ்.சரத் குமார தெரிவித்துள்ளார்.
தேசிய ஆள் அடையாள அட்டைகளைப் பெறுவது தொடர்பாக இம்முறை ஜி.சீ.ஈ சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டிராததால் உடனடியாக அவற்றைச் சீர்ப்படுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பிக்காது விடின் அவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாக வேண்டி நேரலாம் என்று ஆள்பதிவுத் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.
இது தொடர்பாக அடிக்கடி ஊடகங்கள் வாயிலாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்குக் காது கொடுத்திருக்கவில்லை என்றும் ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் கூறியுள்ளார்.
எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் 16 வயது நிறைவடையும் மாணவர்கள் இருப்பார்களேயானால் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னாக அவர்களது விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் அடையாள அட்டையை விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் ஆணையாளர் நாயகம் கூறுகிறார்.
அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடக மையத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்த ஊடகச் சந்திப்பு ஒன்றில் வைத்தே ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்துள்ளார். (வ-22)

### சட்ட ரீதியான அகதிகளையும் பாதுகாக்க தவறியது ஆஸி.

சட்டரீதியான அகதிகளை ஆஸ்திரேலியா பாதுகாக்கத் தவறியுள்ளதாக மனித உரிமைகள் குழுக்களும், அரச சார்பற்ற அமைப்புக்களும் குற்றம் சுமத்தியுள்ளன.
இந்தக் குற்றச்சாட்டு ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இந்த குற்றச்சாட்டை 77 அரச சார்பற்ற அமைப்புக்கள் உறுதி செய்துள்ளன. இதன்படி ஆஸ்திரேலியா அரசு மனித உரிமை கொள்கைகளை மீறிச்செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆஸ்திரேலிய அரச தரவுகளின்படி அந்த நாட்டுக்கு படகுகள் மூலம் வந்த 50 வீதமான இலங்கையர்கள் தம்மை அகதிகள் என்று அடையாளப்படுத்தியே வந்தனர்.
எனினும் ஆஸ்திரேலியா அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கவில்லை என்று குறித்த அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (வ)

# சாரதி தூங்குவதை தடுக்கும் சாதனம் விரைவில் அறிமுகம்

## மொறட்டுவ பல்கலைக்கழக மாணவரால்

கொழும்பு, நவ.10
வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகளை உஷார் படுத்தி விடும் வகையில் முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞை ஒன்றை வழங்கும் சாதனம் ஒன்றை அறிமுகப்படுத்துவதில் மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் கணினி மற்றும் பொறியியல் பிரிவைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று திறன் பெற்றுள்ளதாக அந்தப் பிரிவின் தலைவரான கலாநிதி சத்துரடி சில்வா தெரிவித்துள்ளார்.
நித்திரை வரும் அறிகுறி தோன்றும்போது கண்கள் மூடித்திறக்கும் தடவைகளின் எண்ணிக்கை, கொட்டாவி விடுதல் மற்றும் தூங்கி விழுதல் ஆகிய மூன்று விதமான உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அவை தொடர்பாக இந்தச் சாதனம் சமிக்ஞை ஒன்றை வெளிப்படுத்துகிறது.
அவற்றை விட முன்புறமாகப் பார்த்தவாறு வாகனத்தை செலுத்திச் செல்லும் சாரதியின் தலை மற்றும் இரு கண்கள் வேறு திசைக்குத் திரும்புமானால் தாம் வாகனத்தைச் செலுத்திச் செல்வதை சாரதிக்கு ஞாபகப்படுத்திவிடும் சமிக்ஞை ஒன்றையும்கூட இந்தச் சாதனம் வெளிப்படுத்தும்.
"செங்கதிர்வீச்சு" பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதால் இரவிலும் சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதற்கு இந்தச் சாதனம் திறன்பெற்றுள்ளது.
2 சென்ரி மீற்றர் உயரத்தையும் 5 சென்ரி மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ள இந்தச் சாதனத்தை வாகனத்தின் "டாஸ் போர்ட்டில்" பொருத்திக் கொள்ள முடியும்.
ஐந்து விதமான உணர்வுகளைக் கண்காணிக்கும் இந்த சாதனத் தொகுதியானது செயற்திறனில் மிகச் சரியாகக் கருமமாற்றுவதால் உச்சப் பெறுமதியைப் கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-22)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 15.11.2014 சனி
பிரிவு 1. காலை 10.00-12.00 பிரிவு 2. மாலை 3.00-05.00

செவ்வாய், வியாழன் பிரிவுகள் ஆரம்பம் - 18.11.2014
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

முன்பதிவு செய்தல் அவசியமானதாகும்! ஒவ்வொரு பிரிவிலும் 22 மாணவர்கள் மட்டும்

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்
077 621 4567
021 320 3313


# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் Sky Academy (ஸ்கை அக்கடமி) யில் அளப்பரிய சேவையாற்றி எங்களை விட்டுப்பிரிந்த ஆசிரிய உறுப்பினர்

திருமதி

**தவரஞ்சனி சத்தியமூர்த்தி**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

Sky Academy நிர்வாகத்தினர், நல்லூர், யாழ்ப்பாணம்.

# விகடகவி நேற்று காலமானார்



யாழ்ப்பாணம், நவ.10

ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியும், விகடகவி எனும் புனைப் பெயரில் இலக்கியப் பணியாற்றியவருமான மு.திருநாவுக்கரசு நேற்று மாலை கொழும்பில் காலமானார்.

இருதயநோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் நேற்று மாலை 6 மணியளவில் இயற்கை எய்தினார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அன்னாரின் பூதவுடல் இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்றும், நாளைய தினம் இறுதி நிகழ்வுகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர் 'உதயன்' நாளிதழிலும் விகடகவி எனும் பெயரில் பல்வேறு ஆக்கங்களை எழுதியிருந்தார். (ற)

# மரண அறிவித்தல்

## யோசப் பிரான்சிஸ் சேவியர்

(Retd.Microscopist)



27/18, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட யோசப் பிரான்சிஸ் சேவியர் நேற்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை யோசப் ரட்ணசிங்கம்-மேரி மாகிறற் யோசப் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பெனடிக்ற் ராஜதுரை-தயாபரம் ராஜதுரை தம்பதியரின் மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், ஜெயச்சந்திராவின் (லியோனி-மக்கள் வங்கி) அன்புத் தந்தையும், J.A. தேவராஜா, ஐறின் பற்றிமா (பேளி), ஜெறாட்மைக்கல், பொலின் எலிசபெத், காலஞ்சென்ற யோன்சன் மற்றும் மேரி டொமற்றில்டா (றதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காமலா, வின்சன், ஞானகௌரி, தோமஸ் மனோகரன், றீற்றா, இருதயராசா, சுகன்யா, லோறன்ஸ், லூர்துராணி, பிலோமினா, அன்ரனி, ஆனந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.11.2014) திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/18, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (53920)(7.6.3) தகவல்: குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

**Dr.T.கோபிநாத் (J.P)**

[உரிமையாளர்-அகஸ்தியர் வைத்திய சாலை & மருந்தகம், சித்த ஆயுள்வேத வைத்தியர்]

அன்னை மடியில் 17.05.1983

ஆண்டவன் அடியில் 27.09.2014

கடந்த 27.09.2014 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.11.2014) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

260/3, கச்சேரி- நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(53928)(4.3.6)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**Dr.K.V.துரைராஜா**

[அகஸ்தியர்]

[ஓய்வூதியர் யாழ்.போதனா வைத்தியசாலை, ஸ்தாபகர்-அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்]

அன்னை மடியில் 21.01.1949

ஆண்டவன் அடியில் 30.09.2010

திதி: 15.10.2014 ஸப்தமி

நான்கு ஆண்டுகள் சென்றாலும்
எம்மால் உங்கள் நினைவை என்றும்
எங்கள் உயிர் இருக்கும் வரைக்கும் மறக்க முடியாது
அப்பா நீங்கள் சென்ற இடத்துக்கே
என் அன்பு மகனும் வந்து விட்டானே-அப்பா
மகன் என்றும், அண்ணா என்றும் தம்பி என்றும்
மாமா என்றும் சொல்வதற்கு இல்லாமல் போய் விட்டதே
அப்பா உங்களைப் பிரிந்த துயர்
மாறுவதற்குள் மகன் பிரிவும் வந்துவிட்டதே அப்பா
என் செய்வேன் நான் உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
சுட்டி வேரத்து அம்பாளை நானும்
பிள்ளைகளும் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.


பங்கு முதலீட்டில் ஆர்வமுள்ளவர்களுக்கான பயிற்சிப் பட்டறை

பதிவுக் கட்டணம் ரூபா 500

- பங்கு முதலீடுகள் அறிமுகம்
- நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்
- பங்குகளைத் தெரிவு செய்தல்
- முதலீட்டை ஆரம்பித்தல்

2014 நவம்பர் 15, 22ஆம் திகதி சனிக்கிழமைகளில் (மு.ப. 9.30 - 4.30 வரை)
பங்குப் பரிவர்த்தனை கேட்போர் கூடம்
147-2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுகளுக்கு: 021 222 1455 / 077 782 2014 / www.cse.lk

CSE COLOMBO STOCK EXCHANGE

(12.3.6)(சி17575)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.